டிசம்பர் 3, 2000 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI சுடர் ஒளி வார மலர்



4 DEC 2000
யாழ்ப்பாணம்
ரூ. 17/-

# பிரபாகரன் உண்மையில் பேச விரும்புகிறாரா, பொறி வைக்கிறாரா?

# இந்தத் தமிழ்க் கமிஷனர் கொழும்பில் இருந்தால்...!

இந்தியாவிலேயே மிகப் பெரியது என்று புகழ் பேசப்படும் மும்பையின் முனிசிபல் கார்ப்பரேஷன் கமிஷனராக இருக்கிறார் ரங்கநாதன் என்ற தமிழர். பரபரப்பான மற்றும் ஸ்ட்ரிக்டான தனது நடவடிக்கைகளால் மும்பை தினசரிகளின் முதல் பக்கத்தை அடிக்கடி அலங்கரித்துக்கொண்டிருக்கிறார் இந்த ரங்கநாதன்.

இதனாலேயே இவரை அந்தப் பதவியில் இருந்து எப்படியும் தூக்கியடித்துவிட வேண்டும் என்று உள்ளூர் ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் பலரும் வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் இறங்க...

மும்பை மக்களோ, 'ரங்கநாதன்தான் இவ்வளவு பெரிய பதவிக்குச் சரியான நபர்... அவர்தான் கமிஷனராக இருக்க வேண்டும்' என்று அவருக்கு ஆதரவு தெரிவிக்க ... ஏக கலாட்டாவாக இருக்கிறது மும்பை.

மிக முக்கிய பகுதியான விக்டோரியா டெர்மினஸ் பகுதிகளில் முன்னே நடைபாதையில் மக்கள் நடக்க முடியாதபடி கடைகளாக இருக்கும். இப்போது லைசன்ஸ் இல்லாத கடைகளை எல்லாம் உடனுக்குடன் அப்புறப்படுத்தி விட்டார்கள். மும்பை இப்போது இந்தளவுக்குச் சுத்தமாக இருப்பதற்குக் காரணம் ரங்கநாதன்தான்!'' என்றார் மும்பையின் கஃப் பரே பகுதியில் வசிக்கும் பிரபல எழுத்தாளரான ஷோபா குடே!

ரங்கநாதனை மக்களுக்குப் பிடித்துப் போக முக்கிய காரணம் எதற்கும் அசைந்து கொடுக்காத அவரது உறுதிதான். ''சென்ற ஜூலை 12ஆம் தேதி பெய்த மழையில் மும்பை மாநகரமே சரித்திரம் காணாத அளவுக்கு மூழ்கிப்போனது.

அதுக்கு முக்கிய காரணமே நாம் அதிகமாக உபயோகிக்கும் பிளாஸ்டிக் பைகள்தான். கழிவு நீர் ஓட்டைகளை பிளாஸ்டிக் பைகள் அடைப்பதனால் தான் இந்த வெள்ளம் என்று தெரிந்ததுமே 'இனிமேல் 'மைக்ரான்' அளவுக்குக் குறைவான மெல்லிய பாலிதீன் கவர்களை மும்பையில் எந்தக் கடையிலும் விற்கக்கூடாது என்று கமிஷனர் அதிரடியாக ஒரு உத்தரவே போட்டார். மெல்லிய பாலிதீன்கள் உபயோகப்படுத்தப்பட்டால் அவற்றை மறு உபயோகம் செய்யாமல் மக்கள் வீசிவிடுகிறார்கள். தடிப்பானது என்றால் அவற்றைப் பாதுகாத்து மறுபடியும் பயன்படுத்துவார்கள். தவிர, அதை ரீசைக்கிள் முறைப்படியும் புதிதாக உபயோகப்படுத்தலாமாம். அதனால்தான் இப்படி ஒரு உத்தரவு.

**கொழும்பில் நடை பாதைக் கடைகளால் போக்குவரத்து இடைஞ்சல்.**

**நகரில் குப்பை கூளங்கள் கண்ட இடங்களில் எல்லாம் கொட்டப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு.**

**சிறுமழை பெய்தால் கூட நகர வீதிகள் பலவும் வெள்ளக்காடுகள் ஆகிவிடுகின்றன.**

**இப்படியான பிரச்சினைகள் இந்தியாவின் மும்பை நகரிலும் இருந்தன. ஒரு தமிழ்க் கமிஷனர் இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு கண்டார். அப்படி ஒருவர் இங்கு இருந்தால்....!**

ஆரம்பத்தில் இதற்கு எதிர்ப்புகள் எழுந்த போதும் ஆகஸ்ட் 15 இலிருந்து இதைக் கட்டாயமாக எல்லாக் கடைக்காரர்களும் கடைப்பிடிக்கிறார்கள். கமிஷனர் உறுதியா நின்றதாலதான் இந்த விஷயத்தைச் சாதிக்க முடிந்தது'' என்கிறார் மும்பைவாசி ஒருவர்.

மும்பையின் மாநகர கமிஷனர் அலுவலகத்தில் ரங்கநாதனைச் சந்தித்தோம்.

''நான் ஸ்ட்ரிக்டா இருக்கிறதால என்னைச் சிலருக்குப் பிடிக்குது. சிலருக்குப் பிடிக்கலை... ஆனா, அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. இந்தப் பதவியில் இருக்கிற வரைக்கும் மக்களுக்கு என்ன நல்லது செய்ய முடியும் என்று தான் நான் யோசிப்பேன்.


ரங்கநாதன்

இப்போ Advanced locality Management Clony - என்று ஒரு அமைப்பு ஆரம்பித் திருக்கிறோம். மும்பையில் வசிக்கிற மக்களும் காப்பரேஷன் அதிகாரிகளும் சேர்ந்த அமைப்பு இது.

மாதத்தில் ஒரு நாள் கூடி இந்த ஊரை எப்படிச் சுத்தமா வைத்திருப்பது என்று பேசுவோம். இப்போ நாங்கள் குப்பைகளை இரண்டாகப் பிரிச்சுப்போடச் சொல்லி மக்களுக்குக் கூறுகிறோம்.

பழத்தோல், உணவுப் பொருள்கள் மாதிரி அழுகும் பண்டங்கள் அடங்கிய குப்பை ஒருவகை... பேப்பர், பிளாஸ்டிக், உலோகம் அடங்கிய குப்பை இன்னொரு வகை இப்படிப் பிரிப்பதற்கு இலகுவாக இருக்கிறது. ஓரளவுக்கு இதற்கு மும்பை மக்களும் பழகிவிட்டார்கள் '' என்று சொன்னார் ரங்கநாதன்.

நல்ல சேவைக்கு எப்பொழுதும் எங்கும் மதிப்பும் வரவேற்பும் உண்டு என்பதை ரங்கநாதன் நிரூபித்துவிட்டார்.

தமிழர் என்ற காரணத்தால் அவரை ஒதுக்க மும்பை நகர வாசிகள் தயாராக இல்லை.

அவராலும் மும்பையை விட்டு வேறு எங்கும் செல்வதற்கு முடியவில்லை. மனம் இடம்தரவில்லை. அந்த அளவுக்கு அவருக்கும் மும்பை மக்களுக்கும் நெருக்கம் ஏற்பட்டுவிட்டது.

# சாகக்கிடந்த ரகுவரன் சாயி பக்தர் ஆனார்




சிறந்த குணசித்திர நடிகர்கள் வரிசையில் ரகுவரன் பெயர் இல்லாத பட்டியல் முழுமை பெற்ற பட்டியலாக இருக்க முடியாது! அந்தந்த கெரக்டராகவே மாறிவிடும் அவரின் மேனரிசம் தனித்தன்மை உள்ளது! அது ரகுவரன் ஸ்டைல். வேறு யாரும் தொட முடியாது!

இவர் இப்போது தீவிரமான சாயிபாபா பக்தர்.

காரணம் என்ன?

அவரே சொன்னார்.

''என்னுடைய வாழ்க்கையில் இருள் சூழ்ந்த பகுதியும் உண்டு. ஆரோக்கியமற்ற பழக்கத்திற்கு அடிமையாகியிருந்த நான் என்னுடைய வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் கட்டத்திற்கும் சென்று விட்டேன்.

இறுதி நாள் என்பது என்னை நெருங்கிக் கொண்டிருந்தது.

22 நாட்கள் கோமாவில்!

நண்பர்களும், உறவினர்களும் இந்த உடல் ஜீவித்திருக்கும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். இருப்பதிலும் பயனில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள்.


ஆனாலும் பிழைத்துவிட்டேன்.

எனக்கு நன்றாக நினைவில் நிற்கிறது. மருத்துவமனையை விட்டு வெளியே வந்த நான் மிகப் பெரிய கூட்டத்தின் மத்தியில் நின்று கொண்டிருக்கிறேன். கூட்டத்தோடு கூட்டமாக கலந்து விட்ட என்னை மட்டும் பாபா கூப்பிட்டு அருகே அமரச்செய்தார். என் தலையைத் தொட்டு ஆசீர்வதித்த மறு கணமே நான் முழுமையாக மாறிவிட்ட உணர்வு பெற்றேன். அன்றிலிருந்து நான் பாபாவின் பக்தன்'' என்றார்.

ரகுவரன் தாம் குறிப்பிட்டதுபோல உண்மையிலேயே மாறிவிட்டார். அவரோடு நெருங்கிப் பழகுபவர்களுக்கு அது நன்றாகவே தெரிகிறது.

அருணாகிரி நாதரை முருகப் பெருமான் ஆட்கொண்டு அவருக்கு வாழ்வு அளித்தார்

அதே போல் தலை சிறந்த கலைஞர்களில் ஒருவரான ரகுவரனை பகவான் சாயி பாபா தனது அளப்பரிய கருணையால் புது மனிதராக்கிவிட்டார்


பகவான் சத்ய சாயி பாபா

# தர்மத்தின் வழியில் சென்று இலட்சியத்தை அடைவோம்

பொதுசன நூலகம்
-4 DEC 2000
யாழ்ப்பாணம்

## மாவீரர் தின உரையில் பிரபாகரன்

எமது மண்ணுக்காக, எமது மக்களுக்காக, விடுதலை என்ற உன்னத விழுமியத்துக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்முயிர் வீரர்களை நாம் நினைவு கொள்ளும் இன்றைய நாள் ஒரு புனிதநாள். அப்புனிதர்களுக்காக எமது மனக் கதவுகளைத் திறந்துகொள்வோம்.

அவர்களே எமக்கு ஒளிகாட்டிகள். மாவீரர்களுக்கு ஈகைச் சுடரேற்றி அவர்களை நினைவுகொள்ளும் இந்தப் புனித நாளில் நாமும் எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டிக் கொள்வோம்.

எமது தேசத்தின் சுதந்திரத்துக்காக அந்த உன்னத இலட்சியத்தை அடைவதற்காக எத்தகைய இடர்களையும், எத்தகைய துன்பங்களையும், எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்போமென நாம் எமக்குள் வீரசபதம் எடுத்துக் கொள்வோம்.

### இராணுவ வெற்றி

எனது அன்பான மக்களே, எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாம் ஒரு முக்கியமான திருப்புமுனையை அடைந்திருக்கிறோம்- எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவசாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாசார தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன.

யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி, குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களினால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும்.

ஆனையிறவுப் பெருந்தளத்தை வெற்றி கொண்டு தென்மராட்சியிலும் வடமராட்சி கிழக்கிலும் பெருமளவு நிலங்களை மீட்டெடுத்த அதேவேகத்தோடு கிழக்கு அரியாலை வழியாக எமது படையணியொன்று யாழ்ப்பாண நகராட்சி எல்லைக்குள் பிரவேசித்தது.

அதேசமயம் எமது மற்றைய படையணிகள் தனங்கிளப்பு வழியாக நாவற்குழி, கைதடி, மட்டுவில் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தன.

### உலகத்தின் உதவி

யாழ்ப்பாண நகரம் அரைப்பிறை வியூகத்தில் சுற்றி வளைக்கப்பட்டது. இதனையடுத்து ஒரேயொரு ஆகாய விநியோக மார்க்கமாக இருந்த பலாலிப் பெருந்தளம் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகியது. மின்னல் வேகத்தில் நிகழ்ந்த இத்திடீர்த் திருப்பங்களின் விளைவாக சந்திரிகா அரசு என்றுமில்லாத இராணுவ நெருக்கடியை சந்தித்தது. சந்திரிகா அம்மையார் நிலைகுலைந்து போனார்.

ஆயினும், இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி சர்வதேச உலகத்தின் உதவிபெற்று நெருக்கடியைச் சமாளிக்கத் திட்டமிட்டார். யாழ்ப்பாணம் புலிகளிடம் வீழ்ந்தால் அங்குள்ள 30,000 சிங்களப் படையினருக்கு உயிராபத்து ஏற்படுமென உலகெங்கும் அபாயச்சங்கை ஊதினார்.

இந்த அபாய அறிவிப்பைக் கேட்டதுமே அனைத்துலக நாடுகளும் அம்மையாருக்கு உதவி செய்ய முன்வந்தன.

### இந்தியா முன்வந்தது

இந்திய கடற்படையின் உதவியுடன் சிங்கள இராணுவத்தினரைப் பாதுகாப்பாக மீட்டெடுக்க இந்தியா முன்வந்தது. இஸ்ரேல், பாகிஸ்தான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் அவசர ஆயுத உதவிகள் வழங்க முன்வந்தன. முழு உலகமுமே அம்மையாரின் பின்னால் அணி திரண்டது.

மிகவும் சக்தி வாய்ந்த நவீனரக அழிவு ஆயுதங்கள் யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டன. இஸ்ரேலும், ரஷ்யாவும் நவீனரக போர் விமானங்களையும், உலங்கு வானூர்திகளையும் அனுப்பி வைத்தன. அவசர அவசரமாக ஆயுதரீதியில் சிங்கள இராணுவ இயந்திரம் வலுப்படுத்தப்பட்டது.

### சந்திரிகாவின் தந்திரம் வெற்றி

அபாயச்சங்கை ஊதி உலகத்தின் உதவியைப் பெற்று இராணுவத்தைப் பலப்படுத்தி யாழ்ப்பாணத்தில் போரைத் தொடரும் சந்திரிகாவின் தந்திரோபாயம் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணச் சமரில் ஒருதலைப் பட்சமாக உலக நாடுகள் குறுக்கிட்டு சிங்கள அரசுக்கு உதவிகளை வழங்கியதால் எமது போர்த்திட்டங்களைத் தாமதிக்கவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது.

1995இல் யாழ்ப்பாணநகரை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்தபோது அதன் விளைவாக 5 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்த மாபெரும் மனித அவலம் ஏற்பட்டபோதும் உலகம் கண்களை மூடி மௌனம் சாதித்தது.

### உலக நாடுகள் பதற்றம்

ஆனால், இப்போது சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு படிப்படியாக உடைக்கப்பட்டு மீண்டும் யாழ்ப்பாணம் விடுதலைப்புலிகளின் கைகளுக்கு வரும் புறநிலைகள் ஏற்பட்ட போது உலக நாடுகள் பதற்றமடைந்து சிங்கள இராணுவ ஆட்சியாளர்களுக்கு உதவிகளைச் செய்வது எமக்கு ஒரு புறத்தில் ஏமாற்றத்தையும் மறுபுறத்தில் கவலையையும் கொடுக்கிறது.

மேற்குலக நாடுகள் சமாதானத்தை விரும்புகின்றன. சமாதான வழியில் அரசியல் தீர்வு காணப்படுவதை விரும்புகின்றன. போர்மூலமாக தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை வலியுறுத்துகின்றன.

> **தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் கடந்த 27.11.2000 இல் நிகழ்த்திய மாவீரர்தின உரையின் சுருக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.**
>
> **அவர் தமது உரையில் சமாதானப் பேச்சுவார்த்தை பற்றி வெளியிட்ட கருத்துக்கள் 4ஆம் பக்கக் கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.**
>
> **4ஆம் பக்கத்தில் ஆசிரியத் தலையங்கமும் படியுங்கள்.**


வே. பிரபாகரன்

### சமாதானப்பிரியை அல்லர்

எனவேதான், மேற்குலக நாடுகளைத் திருப்திப்படுத்தும் வகையில் நுட்பமான பிரசார அறிக்கைகளைச் சந்திரிகா வெளியிட்டு வருகிறார். சமாதானம் என்றும், பேச்சுவார்த்தை என்றும், அதிகாரப்பரவலாக்கல் என்றும், அரசியலமைப்பு என்றும் வார்த்தைப் பிரயோகங்களைக் கையாண்டு மேற்குலகின் கண்களுக்கு மண்தூவி வருகிறார்.

தமிழ் மக்களையும், விடுதலைப்புலிகளையும் பொறுத்தவரையில் சந்திரிகா ஒரு சமாதானப் பிரியை அல்லர். இராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்ட ஒரு கடும் போக்காளராகவே நாமும், எமது மக்களும் கருதுகிறோம்.

### குழப்பமான அணுகுமுறை

இம்மாதம் 9ஆம் திகதி புதிய நாடாளுமன்றத்தைத் திறந்துவைத்துப் பேசிய சந்திரிகா, தமிழரின் இனப்பிரச்சினை குறித்து வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால், சந்திரிகாவின் குழப்பகரமான பார்வையும், அணுகுமுறையும் தெளிவாகும்.

இந்த அறிக்கையில் தமிழரின் இனப்பிரச்சினையின் தோற்றம் பற்றி விளக்க முனையும் சந்திரிகா கடந்த 50 ஆண்டுகாலமாகத் தமிழருக்கு அநீதி இழைக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கின்றார். ஆயினும், தமிழர் என்று குறிப்பிடாமல் சிறுபான்மைச் சமூகங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாகப் பொதுப்படையாகக் கூறுகிறார்.

### காலனித்துவம் மீது பழி

இந்நாட்டு அரசியல் சமூக பொருளாதார அதிகாரக் கட்டமைப்பில் பங்குகொள்வதற்கு சிறுபான்மை சமூகத்தினருக்கு நியாயமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை- அதுதான், இனப்பிரச்சினையின் தோற்றப்பாட்டிற்கு உண்மையான காரணம் என்று சந்திரிகா விளக்கமளிக்கிறார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், தமிழ் மக்களுக்கு எதற்காக அநீதி இழைக்கப்பட்டது, யாரால் இழைக்கப்பட்டது, எப்படி எந்த வடிவங்களில் இழைக்கப்பட்டது என்ற கேள்விகளுக்கு சந்திரிகா விளக்கம் தரவில்லை. மாறாகத் தமிழர்களுக்கு நிகழ்ந்த அநீதிகள் அனைத்திற்கும் அந்நியக் காலனித்துவம் மீது பழியைச் சுமத்திவிடுகிறார்.

தமிழருக்குக் கொடுமை இழைத்து வருவது சிங்கள பௌத்த இனவாதமே தவிர சந்திரிகா கூறுவது போல ஆங்கில காலனித்துவ கருத்துவம் அல்ல.

சிங்கள இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராகத் தமிழர்கள் நிகழ்த்திய அரசியல் போராட்டங்கள் அமைதி வழியில் இருந்து ஆயுதப் போராட்டமாக விரிவுபெற்று கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர் படையான விடுதலைப்புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் மத்தியில் போர் நிகழ்ந்து வருகிறது.

### போராடும் உரிமை

தன்னாட்சி உரிமையுடைய மக்கள் சமூகம் என்ற ரீதியில் இன அழிப்பை நோக்காகக் கொண்ட அரச அடக்குமுறையில் இருந்து விடுதலைபெற ஆயுதம் ஏந்திப் போராடும் உரிமை எமக்குண்டு.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு இசைவான இந்த உரிமையின் அடிப்படையில் தான் தமிழீழப்போர் நடைபெற்று வருகின்றது. இதுதான் உண்மை நிலை- ஆனால், சிங்கள அரசு இந்தப் போர் பற்றிய உண்மை நிலையையும், வரலாற்றுப் பின்னணியையும், உலகிற்கு இருட்டடிப்புச் செய்து வருகிறது-

அது மட்டுமன்றி தமிழரின் தேச விடுதலைப் போரை பயங்கரவாதம் எனத் திரிபுபடுத்தி, இழிவுபடுத்தியும் வருகின்றது.

தனது கொள்கைப் பிரகடன அறிக்கையில் விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் மத்தியில் போர் பற்றி சந்திரிகா குறிப்பிடும் போது, இனப்பிரச்சினையின் ஒரு விளைவுதான் இந்தப் போர் என்கிறார்- ஆயினும், அதே அறிக்கையில் இப்போரை ஆயுதப் பயங்கரவாதம் என்றும் குறிப்பிடுகிறார்.

### ஏமாற்று

தமிழீழப் போரை இனப்பிரச்சினையின் வெளிப்பாடு எனக்கூறும் அதே நாக்குத்தான் அதனைத் தமிழரின் ஆயுதப் பயங்கரவாதம் எனவும் விவரிக்கிறது. இனப் பிரச்சினையை சமாதானமாகத் தீர்த்து வைப்போம் எனக்கூறும் சந்திரிகா, பயங்கரவாதத்தைப் போர் மூலம் ஒழிப்போம் எனவும் முழங்குகிறார்.

இப்படியான சந்திரிகா அரசு தமிழரின் போரின் உண்மை நிலையைத் திரித்து பயங்கரவாதம் எனக் குறிப்பிட்டு சிங்கள மக்களையும், உலகத்தையும் ஏமாற்றி வருகின்றது.

தமிழீழப் போரானது ஒருநிலைப்படும் தமிழ் மக்களின் விடுதலைப் போர் என்ற யதார்த்த அரசியல் உண்மையை சிங்கள அதிகாரவர்க்கம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இந்த மறுதலிப்புத்தான் தமிழரின் இனப்பிரச்சினையை சிக்கலாக்கி வருகிறது. இதுதான் போரைத் தீவிரப்படுத்தி வருவதற்கும் காரணமாக இருக்கிறது. இதுதான் இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு பெரும் முட்டுக்கட்டையாகவும் அமைகிறது. சமாதான வழியில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது.

### சமாதானத்தீர்வுக்குத் தயார்

இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு எதிரானவர்கள் அல்லர்.

அதேவேளை, நாம் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றத் தயங்கவும் இல்லை. சமாதான வழிமூலம் எட்டப்படும் தீர்வானது நியாயமானதாக, நீதியானதாக, சமத்துவமானதாக, தமிழரின் அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்வதாக அமைய வேண்டுமென்பதே எமது விருப்பம்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

சுடர் ஒளி

3 டிசம்பர், 2000

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834

## நல்ல சந்தர்ப்பம் நழுவ விடக்கூடாது

முன்நிபந்தனை எதுவுமின்றி அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சு நடத்தத் தயார் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒளிவு மறைவின்றித் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்.

மாவீரர் வார இறுதிநாளான கடந்த திங்கட்கிழமை தாம் நிகழ்த்திய கொள்கை விளக்க உரையிலேயே பிரபாகரன் இதைத் தெரிவித்தார்.

பிரபாகரனிடமிருந்து சமாதான சமிக்ஞை வருமா அல்லது தொடர்ந்து போர் என்ற அறிவிப்பு வருமா என்பதே எல்லோருடைய மனதிலும் இருந்த கேள்வி.

முன்னெப்போதும் இல்லாத மாதிரி இம்முறை பிரபாகரன் சமாதானச் சமிக்ஞை என்ன அரசுக்கு நேசக்கரமே நீட்டிவிட்டார்.

சமாதானப் பேச்சு நடத்த வேண்டும், பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் தமக்குள்ள அக்கறையை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

சமாதானப் பேச்சு நடப்பதற்கு ஏற்ற சூழ்நிலை வேண்டும். அதை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைக்கு ஏற்ப தாமும் தேவையான எல்லாவற்றையும் செய்யத் தயாராக இருப்பதாகப் பிரபாகரன் தெரிவித்திருக்கிறார்.

என்றாலும் பிரபாகரனை நம்பமுடியாது. அவர் ஏமாற்றிவிடுவார். அவரோடு அரசாங்கம் சமாதானப் பேச்சுக்குப் போகக் கூடாது. அவரையும் அவரது கூட்டத்தையும் கொன்று ஒழிக்க வேண்டும் என்று வாதாடுபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சிங்களப் பேரினவாதத்தை முன்நிறுத்துவதற்கென்றே முளைத்த சிஹல உறுமய கட்சி, புதிதாகச் சிங்களத் தேசியவாதச் சுனையில் சுகம் காணும் ஜே.வி.பி. ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் இந்த அணிக்குத் தலைமை தாங்குகிறார்கள்.

அவர்கள் விதண்டாவாதக்காரர்கள், விடாக்கண்டர்கள். சொன்னதைச் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அவர்களைப் பொருட்படுத்தத் தேவையில்லை.

பிரபாகரனின் சமாதானச் சமிக்ஞை குறித்து அரசாங்கத் தரப்பிலிருந்து உத்தியோகபூர்வமாக எந்தக் கருத்தும் இதை எழுதும்வரை வெளிவரவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க லண்டனில் இருக்கிறார்.

பிரதமர் ரத்னசிறி விக்ரமநாயக்க இங்கே தான் இருக்கிறார்.

முன்நிபந்தனையின்றி அரசுடன் பேச்சுக்குத் தாம் தயார் என்று நோர்வேயின் விசேட தூதுவரிடம் பிரபாகரன் சொன்ன பின்னரும் கூடப் புலிகளோடு பேச்சு இல்லை; சண்டையில் அவர்களை அழித்து வெற்றி காண வேண்டும் என்று கொக்கரித்தவர் பிரதமர்.

பிரபாகரனின் மாவீரர் தின உரைக்குப் பின்னர் அவரும் வாய் திறக்கவில்லை.

புலிகளுடன் பேசிப் பயன் இல்லை. அவர்களைப் போரில் வெற்றி கொள்ள வேண்டும். அதன் பின்னர்தான் பிரச்சினைக்கு நல்லபடியாகத் தீர்வு காணமுடியும் என்று உபதேசம் செய்து வந்தவர்கள் மகா சங்கத்தினரான பௌத்த பிக்குமார்.

அவர்களும் இப்போது எதையும் திருவாய் மலர்ந்து அருளாது மௌனமாக இருக்கிறார்கள். நல்ல அறிகுறி.

பௌத்த பிக்குமார் அரசியலில் தலையிடாது, அரசியலை அரசியல் தலைவர்களிடமே விட்டு விட்டுத் தம் மத விஷயங்களில் முழுக்கவனத்தையும் செலுத்துவது சிறப்பு. அதுதான் நாட்டுக்கு நல்லதுங்கூட.

அரசைப் பொறுத்தவரையில் இது அருமையான சந்தர்ப்பம். இப்படியான ஒரு சந்தர்ப்பம் இனி வருமோ தெரியாது.

சந்தர்ப்பத்தை விடக்கூடாது. பழையனவற்றை எல்லாம் மறந்து பிரபாகரன் இப்போது நீட்டியுள்ள நேசக்கரத்தை அரசு இறுகப் பற்றிச் சமாதானப் பேச்சு நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண்டும். தவறினால் அழிவும் அவலமும் அதிகரிக்கும். நாட்டுக்கு எதிர்காலமே இல்லாமல் போகலாம்.

# பிரபாகரனின் அறிவிப்பு அரசுக்கு ஒரு பொறியாம்!

முன்நிபந்தனை எதுவுமின்றி அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் அறிவித்தது குறித்துப் பொதுவாகப் பலரும் மகிழ்ச்சி தெரிவிக்கிறார்கள். அதை வரவேற்கவும் செய்கிறார்கள்.

சமாதானப் பேச்சுக்கள் வெற்றிகரமாக நடந்து முடிந்தால் 20 வருடப் போர் முடிந்துவிடும். உயிர் இழப்புகள் நின்றுவிடும். அநியாயமாகப் பலர் ஊனமடையும் நிலை முடிவுறும். பொருள் அழிவு ஏற்படாது. மக்களின் இடம் பெயர்வுகளும் பல்வேறு அவலங்களும் அடியோடு மறைந்துவிடும். எல்லோரும் தத்தமக்கு உரிமையான வீடுகளில் நிம்மதியாக வாழ முடியும்.

இப்படியெல்லாம் எண்ணி ஆறுதல் அடைபவர்களின் எண்ணிக்கை அதிகம்.

ஆனால் சிலர் வேறுவிதமாக நினைக்கின்றார்கள். பிரபாகரனின் சமாதானப் பேச்சுக்கான சமிக்ஞையைக் கொச்சைப்படுத்துகிறார்கள். அவர்களின் கருத்து இதுதான்:—

பிரபாகரன் உண்மையில் நிபந்தனையின்றி அரசுடன் பேச்சு நடத்திப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காணவிரும்பவில்லை. தொடர்ந்து போராடித் தனிநாடு — தமிழீழம் அமைப்பதே அவரின் குறிக்கோள் என்கிறார்கள்.


சந்திரிகா

அப்படியானால் நிபந்தனையின்றி அரசுடன் பேச்சு நடத்தத் தயார் என்று அவர் ஏன் அறிவித்தார்?

இப்படிக் கேட்டால் எதிர்ப்பாளர்கள் அதற்கும் பதில் வைத்திருக்கிறார்கள்.

முதலில் நிபந்தனையற்ற பேச்சு என்று அவர் சொல்வதையே ஏற்றுக்கொள்ள முடியாது.

நிபந்தனையற்ற பேச்சு நடப்பதற்கு ஏற்ற சூழ்நிலை — இயல்பு நிலை எல்லாம் வேண்டும் என்று கூறி அவற்றை ஏற்படுத்த என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்று தமது மாவீரர் தின உரையில் பிரபாகரன் குறிப்பிட்டிருக்கிறார்.

அவை எல்லாம் நிபந்தனைகள் என்று சொல்லப்படாவிட்டாலும் உண்மையில் நிபந்தனைகளே.

உதாரணத்துக்கு அவர்கள் பிரபாகரனின் பேச்சிலிருந்தே மேற்கோள் காட்டுகிறார்கள்.

"20 ஆண்டுகளுக்கு மேலாகப் பரஸ்பர பகையுடனும் சந்தேகத்துடனும் ஒரு கொடிய போரில் ஈடுபட்டு வரும் இரு தரப்பினரும் சண்டையைத் தொடர்ந்தபடி, திடீரெனச் சமாதானப் பேச்சில் இறங்குவது நடைமுறைச் சாத்தியமானது அல்ல.

இதனால்தான் போர் நெருக்கடியைப் படிப்படியாகத் தளர்த்தி போர் ஓய்ந்த சமாதான சூழ்நிலையில் நல்லெண்ணப் புறச்சூழ்நிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகின்றோம்.

இயல்பு நிலை என்னும் போது தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதாரச் சுமைகள், தடைகள் நீங்கி எமது மக்களின் வாழ்க்கை நிலை இயல்பான இருப்புக்குத் திரும்ப வேண்டும் என்பதையே நாம் கருதுகிறோம்"

ஆக, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு போர் நிறுத்தப்பட வேண்டும், பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும் என்று பிரபாகரன் மிகுந்த அரசியல் சாணக்கியத்துடன் ராஜதந்திர ரீதியில் நிபந்தனை விதிக்கிறார் என்று எதிர்ப்பாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

அரசு இந்த மறைமுக நிபந்தனைகளுக்கு இணங்காது என்பது பிரபாகரனுக்குத் தெரியும். தவிரவும் அரசு வெளியில் எதைச் சொன்னாலும் பேச்சுவார்த்தைக்கு வரக்கூடிய நிலையில் இன்று இல்லை என்பதையும் பிரபாகரன் அறிவார். தனது பேச்சில் பிரபாகரன் அதையும் சுட்டிக்காட்டுகிறார்.

"இந்த அரசு தென்னிலங்கை இனவாதச் சக்திகளின் ஆதரவோடு தான் ஆட்சிபீடம் ஏறியிருக்கின்றது.

புலிகளுக்கு எதிராகப் போர் முரசு கொட்டித்தான் தேர்தலைச் சந்தித்திருக்கிறது.

இனவாதக் கடும்போக்காளர்களே இவ்வரசில் முக்கிய பொறுப்புக்களை வகிக்கிறார்கள். இவர்களில் பலர் அமைச்சர்களாகவும் பதவியேற்றிருக்கிறார்கள்.

ஆயுத வன்முறையைப் பாவித்து மிகவும் கேவலமான தேர்தல் மோசடிகளைச் செய்து ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கிய தமிழ்த் துரோகிகளும் இந்த ஆட்சிபீடத்துக்கு முட்டுக்கொடுத்து நிற்கிறார்கள்.

இப்படியாக இனவாதிகளையும் தமிழினத் துரோகிகளையும் நிர்வாக உயர்பீடங்களில் அமர்த்தி அவர்களது தயவில் தங்கி நிற்கும் சந்திரிகா அரசு தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தெளிவான முடிவு எடுக்குமா என்பது சந்தேகமே.

பல்வேறு கருத்தோட்டங்களைக் கொண்டவர்களும் கடும்போக்காளர்களும் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருப்பதால் இந்த அரசானது இரு நாக்குகளால் பேசுகிறது — மிகவும் குழப்பமாகப் பேசுகிறது.

புலிகளுடன் பேசத் தயார் என ஒரு குரலும் புலிகளைப் பூண்டோடு அழிப்போம் என இன்னொரு குரலும் புலிகள் சரணடையும் வரை போர் ஓயாது என மற்றொரு குரலுமாக ஜனாதிபதி, பிரதமமந்திரி, இராணுவத் தளபதி ஆகிய உயர் அதிகார பீடங்களிலிருந்து இத்தகைய முரணான குரல்கள் எழுப்பப்படுகின்றன.

மேற்குலக நாடுகளைத் திருப்திப்படுத்தும் வகையில் நுட்பமான பிரசார அறிக்கைகளைச் சந்திரிகா வெளியிட்டு வருகிறார். சமாதானம் என்றும் பேச்சுவார்த்தை என்றும் அதிகாரப் பரவலாக்கல் என்றும் அரசியலமைப்பு என்றும் வார்த்தைப் பிரயோகங்களைக் கொண்டு மேற்குலகின் கண்களுக்கு மண்தூவி வருகிறார்.

தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தவரையில் சந்திரிகா ஒரு சமாதானப் பிரியை அல்ல"

சந்திரிகா அரசு பேச்சுவார்த்தைக்கு வராது என்பதைத் தெரிந்துகொண்டு இப்படிக் கூறும் பிரபாகரன் தாம் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அறிவித்ததன் மர்மம் என்ன?

அதுதான் அரசுக்குப் பிரபாகரன் வைத்த பொறி.

தாம் உண்மையான சமாதானப் பிரியன் என்றும் தாம் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்றும் உலகுக்குக் காட்டுகிறார் பிரபாகரன்.

அதேவேளை சந்திரிகா அரசு சமாதானத்தையும் பேச்சுவார்த்தையையும் விரும்பவில்லை. ஆனால் விரும்புவதாக வேஷம் போடுகிறது என்றும் அம்பலப்படுத்தப் பார்க்கிறார். அதுதான் அவர் வைத்த பொறி.

உலகின் கண்களில் சந்திரிகா அரசை அம்பலப்படுத்தினால் அரசின் போர் முயற்சிகளுக்கு உதவுவதை உலக நாடுகள் நிறுத்தத் தீர்மானிக்கும் என்றும் அது தமக்குச் சாதகமாக அமையும் என்றும் பிரபாகரன் நம்புகிறார் என்கிறார்கள் எதிர்ப்பாளர்கள்.

பிரபாகரனின் இலட்சியம் சமாதானம் அல்ல. முதலில் யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்ற வேண்டும். அப்புறம் தமிழ் ஈழம் அமைக்க வேண்டும். அதற்குப் போரைத் தீவிரப்படுத்த வேண்டும் என்பதுதான். மற்றப்படி சமாதானப் பேச்சுக்களில் இறங்க அவரும் உண்மையில் விரும்பவில்லை என்கிறார்கள் எதிர்ப்பாளர்கள்.

அதற்கும் அவருடைய மாவீரர் தின உரையிலிருந்தே சில பகுதிகளை மேற்கோள் காட்டுகிறார்கள்:

"யாழ்ப்பாணம் சிங்களத் தேசத்துக்கு உரித்தானதல்ல. யாழ்ப்பாணம் யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது.

இறையாண்மை என்பது ஒரு அரசின் தெய்வீகச் சொத்துரிமை அல்ல. இறையாண்மையானது மக்களிடமிருந்தே பிறக்கிறது. அது மக்களுக்கே சொந்தமானது.

யாழ்ப்பாணத்தின் இறையாண்மை யாழ்ப்பாண மக்களுக்கே சொந்தமானது இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழரின் வரலாற்று மண்ணில் சிங்களத்தின் இறையாண்மையைத் திணித்துவிட முடியாது. தமிழரின் விடுதலைப் படை என்ற ரீதியில் எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்புக்கு இடமளிக்கப்போவதில்லை.


பிரபாகரன்

எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் எத்தனைச் சக்திகள் எதிர்த்து நின்றாலும் எமது விடுதலை இயக்கம் யாழ்ப்பாணத்தை மீட்டு எடுத்தே தீரும்"

இப்படிப் பிரபாகரன் உறுதியாகக் கூறியிருக்கிறார் என்று எதிர்ப்பாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

தமிழீழம் அமைப்பதே தனது இலட்சியம் என்பதைப் பிரபாகரன் தனது மாவீரர்தின உரையின் இறுதியில் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார் என்று எதிர்ப்பாளர்கள் அந்தப் பகுதியையும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

"பெரியதொரு அழிவுப் போரை நடத்திக்கொண்டு, பெருமளவில் அப்பாவித் தமிழர்களைக் கொன்று ஒழித்துக்கொண்டு சமாதானத்துக்காகவே சண்டையை நடத்துவதாகச் சந்திரிகா அரசு உலகத்தை ஏமாற்றி வந்திருக்கிறது.

ஆயினும் சந்திரிகா நடத்தும் இப்போரின் நோக்கம் என்ன என்பதையும் இப்போரினால் புலிகளை வெற்றி கொள்ளவோ அன்றில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவோ முடியாது என்பதனையும் மேற்குலகம் இப்போது உணரத் தொடங்கியுள்ளது.

எனவே சிங்கள இனவாத ஆட்சியாளரைச் சமாதானப் பாதைக்குத் திருப்ப வேண்டும் என்றால் சிங்கள அரசுக்குப் பொருளாதாரத் தீனி போட்டுவரும் உலக நாடுகளிடம்தான் கடிவாளம் இருக்கிறது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

### ஆவணங்கள் இருந்தும் தமிழன் என்ற காரணத்தால் இழுத்துச் சென்று விசாரணை

# சில பொலிஸாருக்கு எவ்வளவு கொழுப்பு!

## பொலிஸ் தலைமையக கிளியரன்ஸ் சான்றிதழ் பொலிஸ் நிலையத்தில் பதிவு; அடையாள அட்டை அனைத்தையும் ஏற்க மறுத்து அட்டகாசம்

**சில பொலிஸார், குறிப்பாகத் தென்பகுதிகளில் உள்ள பொலிஸார் சீருடை தரித்ததும் அதிகாரத் திமிரில் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்தால் பொலிஸாருக்கு இவ்வளவுகொழுப்பா என்று தான் எவருக்கும் கேட்கத் தோன்றும்.**

**ஒருவர் தமிழர் என்றால் அவர் மீது சந்தேகம். அவர் தாம் சந்தேகத்துக்கு உரியவர் அல்லர் என்பதை நிரூபிப்பதற்குப் பொலிஸ் தலைமையகம் வழங்கிய பொலிஸ் 'கிளியரன்ஸ்' சான்றிதழ், வதிவிடத்தில் உள்ள பொலிஸ் நிலையப் பதிவுப் பத்திரப் பிரதி, தேசிய அடையாள அட்டை, தொழில் செய்யும் இடத்தில் வழங்கப்படும் அடையாள அட்டை— இவை எல்லாவற்றையும் காட்டியும் பயன் இல்லை.**

**இவற்றைப் பார்க்கவோ, ஏற்கவோ மறுத்து விசாரணைக்கு வா என்று பொலிஸ் நிலையத்துக்கு இழுத்துச் செல்லப்படுகிறார்கள் தமிழர்கள். கடந்த மாதம் 22ஆம் திகதி புதன்கிழமை முக்கிய அலுவல் காரணமாகக் கொழும்பிலிருந்து வெலிகமைக்குச் சென்ற தமிழர் ஒருவருக்கு அங்கே கிடைத்த கசப்பான அனுபவத்தை இங்கே படித்துப் பாருங்கள்.**

''தமிழர்களின் அடையாள அட்டைகளை நம்ப முடியாது. இம்மாதிரியான எத்தனை அடையாளஅட்டைகள் வேண்டுமானாலும் தான் வழங்கத்தயார்'' என்கிறார் வெலிகமை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர்.

பொலிஸ் தலைமையகத்தால் வழங்கப்பட்ட கிளியரன்ஸ் சான்றிதழையும் அவர் ஏற்க மறுத்து தூக்கி எறிந்து விட்டார்.

தேசிய அடையாள அட்டை, பொலிஸ் பதிவு, தொழில் புரியும் அலுவலக அடையாள அட்டை — இவை அனைத்தையும் சமர்ப்பித்தும் பயன் இல்லை. பொலிஸ் நிலையத்துக்கு இழுத்துச் சென்று இரண்டு மணிநேரம் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டார் ஒரு தமிழர்.

பாதுகாப்புக் கருதி அவருடைய பெயரை, வெளியிடவில்லை.

இத்திகிலூட்டும் சம்பவம் மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த வெலிகம நகரில் இடம் பெற்றது.

கடந்த மாதம் 22ஆம் திகதி புதன்கிழமை அந்தத் தமிழர் (விற்பனைப் பிரதிநிதி) தமது நிறுவனம் சம்பந்தப்பட்ட உத்தியோகபூர்வ அலுவலுக்காகக் கொழும்பிலிருந்து வெலிகமைக்குச் சென்றார். அங்கே தனது கடமைகளை முடித்து விட்டு கொழும்பு திரும்புவதற்காக வெலிகம பஸ் நிலையத்தில் தரித்து நின்றார்.

அப்பொழுது அங்கு நின்ற சகபிரயாணி ஒருவர் இவரிடம் பேச்சுக் கொடுத்து இவர் ஒரு தமிழர் என்பதைத் தெரிந்து கொண்டார். உடனே அவர் அங்கிருந்து மெதுவாக நழுவி விட்டார்.

சற்று நேரத்தில் ஒரு பொலிஸ் ஜீப்பிலும் மோட்டார் சைக்கிளிலும் துப்பாக்கிகள் சகிதம் பொலிஸார் வந்து பஸ் நிலையத்தைச் சுற்றி வளைத்தனர். முன்னர் பேச்சுக் கொடுத்து விட்டு நழுவிச் சென்ற பெரும்பான்மை இனச் சகபிரயாணி அப்போது அந்தத் தமிழரைப் பொலிஸாருக்கு அடையாளம் காட்டினார்.

தனியாக நின்ற தமிழரை அணுகப் பொலிஸார் தயங்கினர். இத்தனைக்கும் அந்தத் தமிழர் கையில் எதுவும் இருக்கவில்லை. சிறிது நேரத்தில் பொலிஸார் பதுங்கிப் பதுங்கி துப்பாக்கியை நீட்டிக் கொண்டே அந்த தமிழருக்கு கிட்ட வந்தனர். ஒரு பொலீஸ்காரர் அந்தத் தமிழரை மெதுவாகத் தொட்டுத் தடவிப் பார்த்தார்.

வெடி குண்டுகளோ, பயங்கர ஆயுதங்களோ எதுவும் இல்லை என்பது உறுதியாயிற்று. பொலிஸார் முகத்தில் இருந்த கலவரம் நீங்கியது. அதிகாரத் தொனியில் பேச ஆரம்பித்தனர்.

''இங்கேயும் வந்து விட்டீர்களா? வெலிகமை தான் அமைதியாக இருக்கின்றது. இங்கும் குண்டு வைக்க வந்து விட்டாயா?'' இப்படிக் கூறி'' உன்னை விசாரிக்க வேண்டும் வா பொலிஸ் ஸ்டேசனுக்கு'' என்று இழுத்துச் சென்றனர்.

வெலிகமையில் பொலிஸார் ஒரு புலியைப் பிடித்து விட்டார்கள் என்று கதை பரவியது. நூற்றுக் கணக்கானோர் கூடிவிட்டனர்.

அந்த அப்பாவித் தமிழர் தாம் நிரந்தரமாகவே கொழும்பில் வசிப்பவர் எனக் கூறி தம்வசம் இருந்த பொலிஸ் பதிவு, தேசிய அடையாள அட்டை, அலுவலக அடையாள அட்டை, மற்றும் பொலிஸ் தலைமையகத்தால் வழங்கப்பட்ட (கிளியரன்ஸ்) சான்றிதழ் என்பனவற்றை எல்லாம் காட்டினார்.

எனினும் கடமையில் இருந்த பொலிஸ்காரர்களோ ''இவற்றை எல்லாம் ஏற்க முடியாது, நீ ஒரு புலி, உன்னைச் சும்மா விடமுடியாது. உனக்கு எத்தனை அடையாள அட்டைகள் வேண்டும்! நான் தருகிறேன்'' என அலட்சியமாகக் கூறினார்கள். அந்தத் தமிழரைப் பொலிஸ் நிலையத்தில் 2 1/2 மணி தொடக்கம் 4 1/2 மணிவரை வைத்திருந்தனர்.

இவ்வேளையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் நாற்காலியில் வந்து அமர்ந்த ஒருவர் ''அவரிடம் (தமிழரிடம்) தான் எல்லாம் இருக்கின்றனவே அவரை விட்டு விடுங்கள்'' எனக் கூறி விட்டுச் சென்றார்.

ஆனால் அங்கிருந்த பொலிஸ்காரர்கள் விட்டபாடில்லை. கடைசியாக கொழும்பில் அந்தத் தமிழர் பணியாற்றும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு விட்டே அந்தத் தமிழரை விடுதலை செய்தனர்.

அதுவும் சும்மா விடவில்லை. ஒரு எச்சரிக்கையோடு தான் விட்டனர்.

''இனிமேல் வெலிகமைக்கு வரக் கூடாது. தப்பித்தவறி வர நேரிட்டால் என்னிடம் அறிவித்து விட்டுத்தான் வர வேண்டும்.'' என்றார் ஒரு பொலீஸ்காரர்.

சரி இனி வரும்போது அறிவிக்கின்றேன் உங்களுடைய பெயர் என்ன? என்று கேட்டார் அந்தத் தமிழர்.

''அதைச் சொல்ல முடியாது உடனடியாக இங்கிருந்து போய்விடு'' என்று அதட்டி விரட்டினார் அந்தப் பொலிஸ்.

வீட்டிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் போது தேசிய அடையாள அட்டையை கைவசம் வைத்திருங்கள் அதுவே உங்களுக்குப் பாதுகாப்பு என்று பொலிஸ் மா அதிபர் கூறுகிறார்.

ஆனால் பொலிஸ்காரர்களோ, தேசிய அடையாள அட்டைகளை மட்டுமல்ல பொலிஸ் தலைமையகத்தால் வழங்கப்பட்ட 'கிளியரன்ஸ் சான்றிதழ்களைக் கூட நம்பவோ ஏற்கவோ மறுக்கின்றனர்.

எந்த விதமான தப்புத் தண்டாக்களிலும் ஈடுபடாத அப்பாவித் தமிழர்கள் காரணமின்றிக் கைது செய்யப்படுகின்றனர். பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். கடைசியில் குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்யப்படுகின்றனர்.

தலை நகரில் மட்டுமல்ல நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமே தமிழர்களுக்கு இந்தக் கதிதான்.

இது தொடர்பாக வெலிகம பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சர் சோமபாலவிடம் ''சுடர்ஒளி'' நிருபர் தொடர்பு கொண்டு கேட்டார்.

''இவ்விடயம் எனக்கு அறிவிக்கப்படவில்லை. வெலிகமை பொலிசுக்குச் செல்கிறேன். அங்கே என்னுடன் பேசுங்கள், என்ன நடந்தது என்று அறிந்து கூறுகின்றேன்'' என்று தொலைபேசி நம்பரையும் கொடுத்தார் அவர்.

அந்தத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்ட போது வெலிகமை பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பான தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருவர் பதில் அளித்தார்.

தாம் இருந்த போது இப்படி ஒரு சம்பவம் இடம் பெறவில்லை என்றும் சில வேளை தாம் இல்லாத நேரத்தில் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்திருக்கலாம் என்றும் கூறினார்.

அப்படியானால் பொறுப்பதிகாரி இல்லாத சமயத்தில் அவருடைய ஆசனத்தில் வந்து அமர்ந்தவர் யார்? ''அவரிடம் தான் எல்லா ஆவணங்களும் இருக்கின்றனவே. அவரை விட்டு விடுங்கள் '' என்று அந்த ஆசனத்தில் இருந்தவாறு திருவாய் மலர்ந்து அருளியவர் யார்? ஒரு பொலிஸ் நிலையத்தில் ஒரு நபர் தடுத்து வைத்திருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

இது ஒரு பொறுப்பதிகாரிக்குத் தெரியாதா?

தேசிய அடையாள அட்டையை பொலிஸார் ஏற்றுக் கொள்ள மாட்டார்களா?

பொலிஸ் தலைமையகம் வழங்கும் 'கிளியரன்ஸ் சான்றிதழ் பெறுமதியற்ற வெறும் கடதாசியா?

பொலிஸ் பதிவு பிரயோசனமற்றதா?

ஒருவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கு அழைத்துச் செல்வதையோ அவரைக் கைது செய்வதையோ எவராலும் விளங்கிக் கொள்ளலாம். ஆனால் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய உதவும் ஆவணங்களையே சந்தேகிப்பதும் அவற்றைப் பார்க்கவோ ஏற்கவோ மறுத்து தாம் நினைத்ததைச் செய்வது சரியா? பொலிஸ் மா அதிபர் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்.

— இராசிகா

# விண்வெளியுகம் கண்ட முடி அலங்காரங்கள்

மசாலா மிக்ஸ்

விண்வெளியுகத்தில் விஞ்ஞானப் புதுமைகள் எவ்வளவோ நிகழ்த்தப்படுகின்றன. விண்வெளியில் தங்கியிருந்து வாழ்க்கைநடத்துவதற்கு "மிர்" விண்வெளி நிலையமும் ஏவப்பட்டது. ரஷ்யாவினால் அனுப்பப்பட்ட "மிர்" விண்வெளி நிலையம் தனது பணிகளை முடித்துக் கொண்டு பூமிக்குத் திரும்பப் போகிறது. இவ்வேளையில் விண்வெளி யுகத்திற்கு ஏற்ற விதத்தில் பெண்கள் தமது முடி அலங்காரங்களைச் செய்து கொள்வது நவீன நாகரீகமாக இருக்கிறது. விண்வெளி யுகம் கண்ட முடியலங்காரங்களுடன் சில அழகிகள் இங்கே எழிற் கோலம் காட்டுகிறார்கள்.



# அம்மாவுடன் ஷொப்பிங் போனதால் களைப்பு

அம்மாவுக்கு அவசர வேலை குழந்தைப்பாப்பாவை வீட்டில் விட்டுக் கடைக்குப் போய் பொருள்கள் வாங்க முடியாது. எனவே "ப்ராம்" தள்ளு வண்டியில் குழந்தையை இருக்க வைத்து "ஷெப்பிங் போனார் அம்மா. அம்மாவுடன் "ஷொப்பிங்" போனதால் குழந்தைக்கு வந்தது களைப்பு. அந்தக் களைப்பிலும் அயர்ந்து தூங்கி எழக் கிடைத்ததே ஒரு வாய்ப்பு.



# மரத்தில் குடியேறும் ஆசை பரவலாமா?



அனைவருக்கும் குடியிருப்பு இல்லங்கள் அமைப்பதை நோக்கமாகக் கொண்டு இலங்கையில் எல்லா அரசாங்கங்களும் பாடுபடுகின்றன ஆயினும் வாழ்வதற்கு வீடு இல்லாதவர்கள் எத்தனையோ பேர் இருக்கத்தான் செய்கிறார்கள். வீடு கட்டநிலம் இல்லாவிட்டால் மரக்கிளைகளில் வீடுகட்டி வாழலாம் தானே என்று சிலர் ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள். தூர கிழக்கு நாடுகளில் சில இனத்தவர்கள் மரங்களில் குடிசை அமைத்து வாழ்கிறார்கள். இந்த அழகிக்கும் மரக்கிளையில் வாழும் ஆசை வந்து விட்டதா?

# ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நிற்கத் தயார்!

குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்கிறார்கள் அதற்காக குரங்குகள் குடியிருக்கும் மரங்களைக் குடியிருப்புகளாக மாற்றுவதற்கு மனிதர்கள் முயற்சி செய்யலாமா? அத்தகைய ஆக்கரமிப்பாளர்களை எதிர்த்து நிற்கத்தயார் என்று இங்கே ஒரு (கு)ரங்கு பிள்ளை எதிர்ப்புத் தெரிவிக்கிறாரா?



# ஒளிந்திருக்கும் முகம் எது?



இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் முகம் தெரியாத இந்த உருவம் யாருடையது? குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகிப் பின்னர் சுப்பர் நடிகர்களுடனும் கதாநாயகியாக உயர்ந்தவர்.

இவரைக் கண்டுபிடித்து விடையைத் தபால் அட்டையில் எழுதிப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.


**சுடர் ஒளி,**
36/2, பிரெட்றிக்கா வீதி,
கொழும்பு-06.

நவம்பர் 19 சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை சங்கவியுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து தபால் அட்டைகளில் எழுதி அனுப்பியவர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:

1. ஆர்.சமுதினி, வவுனியா.
2. எம்.எச்.எம்.சியாஸ், கற்பிட்டி
3. ஏ.மொஹமட் டிஷான் அக்கரைப்பற்று.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும், அதிஷ்டசாலிகளான மூவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (26.11.2000) மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்கு உரிய நடிகர் யார்? தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். மூன்று வாசர்களின் விவரம் அடுத்த வாரம் வெளியிடப்படும்.



# சக்தியுடன் மக்கள் சங்கமம்
# இரண்டு ஆண்டு சாதனை

சக்தி தன் பெயருக்கு ஏற்ப இன்று உலகம் முழுவதும் வியாபித்து இருக்கிறது.

சக்தி ரி.வி., சக்தி எப்.எம். குடும்பத்துடன் மக்கள் சங்கமம் ஆகிவிட்டார்கள்.

சக்தி குடும்பத்தின் இரண்டு ஆண்டுச் சாதனை இது என்று சொல்லலாம்.

இவ்வளவு குறுகிய காலத்தில் மிகுந்த பாசப்பிணைப்புடன் மக்களைத் தன்பால் ஈர்த்தெடுத்த இலத்திரனியல் ஊடகம் சக்தியைத் தவிர வேறெதுவும் இல்லை.

சக்தியின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா இதைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது.

விழா கடந்த மாதம் 20ஆம் திகதி நடைபெற்றது.

காலையில் இருந்தே ஒரே கலகலப்பு.

பாசமுள்ள உறவுகள் பிஞ்சுக் குழந்தைகளுக்கு உச்சி மோர்ந்து பொம்மை களைப் பரிசாக வழங்குவார்கள் அல்லவா?

ரசிக இதயங்கள் சக்தி ரி.வி, சக்தி எப்.எம். ஆகியவற்றிற்கு ஏராளமான பரிசுப் பொருட்களோடு பொம்மை களையும் வழங்கி மகிழ்ந்தார்கள்.

கிடைத்த பரிசுப் பொருட்களையும் வாழ்த்து மடல்களையும் சக்தி ரி.வியில் குறிப்புரையுடன் ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டினார்கள். பார்க்கப் பிரமிப்பாக இருந்தது. ரசிக நெஞ்சங்களுக்குச் சக்தி மீது எவ்வளவு பாசம், அன்பு, அபிமானம். இந்த அன்னியோன்ய உறவு ஒரு தலைப்பட்சமானது அல்ல. சக்தியும் தனது ரசிகர்களுக்குப் பல்வேறு பரிசுகளை அறிவித் திருக்கிறது.

மிகுந்த போட்டிக்கு மத்தியில் வீறுநடைபோட்டு முன்னேறிவரும் சக்தி எப்.எம். இரண்டு ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகளை மிகப் பொருத்தமாகப் ''படையப்பா'' பாடலுடன் ஆரம்பித்தது.



அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா உரையாற்றுகிறார். அருகில் மகாராஜா குழுமப் முகாமைப் பணிப்பாளர் ராஜமகேந்திரன், பணிப்பாளர் எஸ். செல்வராஜா உட்பட மற்றும் பணிப்பாளர்கள் காணப்படுகின்றனர். அவர்களுக்கு முன்னால் அழகான பிறந்தநாள் கேக்.



அமைச்சர் விளக்கேற்றுகிறார்

படையப்பா பாடலில் உள்ள ''படையப்பா'' என்ற சொல்லுக்குப் பதிலாகச் ''சக்தி'' என்ற சொல்லை வைத்துக் கொண்டால் சக்திக்கு என்றே பாடப்பட்ட பாடலாக அது தோன்றும் என்ற விளக்கமும் தரப்பட்டது.

''சிங்கநடைபோட்டு சிகரத்தில் ஏறு. சிகரத்தை அடைந்தால் வானத்தில் ஏறு.. உன் கையை நம்பி உயர்ந்திடப் பாரு. உனக்கென எழுது ஒரு வரலாறு. உனக்குள்ளே சக்தி இருக்கு– அதை உசுப்பி விட வழிபாரு'' என்ற வரிகள் பாடலிலே உள்ளன.

சக்தி எப்.எம். பணிப்பாளர் எழில்வேந்தனின் வழிகாட்டலில் அறிவிப் பாளர்கள் மற்றும் செய்திப் பிரிவினரின் ஒன்றுபட்ட முயற்சியினால் சக்தி எப்.எம். சிங்க நடைபோட்டு சிகரத்தில் ஏறிவருகிறது.

அப்படியே சக்தி ரி.வியும் அதன் முகாமையாளர் வரதராஜன் மற்றும் அறிவிப்பாளர்களின் தளராத முயற்சியால் வெற்றிநடை போட்டு வருகிறது.

தாம் கடந்து வந்த பாதையை நேயர்களுக்கு நினைவுபடுத்த சக்தி எப்.எம்மும் சக்தி ரி.வியும் சிறப்பான பழைய நிகழ்ச்சிகளை முறையே ஒலிபரப்பவும் ஒளிபரப்பவும் செய்தன.

சக்தி ரி.வி. இப்போது வாரநாட்களில் பகல் 1.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை முற்று முழுதாகத் தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகிறது. வார இறுதி நாட்களில் மேலும் கூடுதலான நேரம் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வேறுஎந்த ரி.வியும் சக்திபோல் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு இடமளிக்கவில்லை.

இந்திய சன் ரி.வியில் வரும் ரெலிநாடகத் தொடர்கள், அரட்டை அரங்கம், சப்தஸ்வரங்கள் முதலான பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளையும் தனது சொந்தத் தயாரிப்புகளான இளையகானம், இசைக்கோலம், காலைக்கதிர், குட்டிச்சுட்டி, பூஞ்சோலை, தித்திக்கும் ஓசை, மீண்டும் மீண்டும் கோமாளிகள் போன்ற நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பி வருகிறது.

''கிருஷ்ணதாஸி'', ''கோகிலா எங்கே போகிறாள்?'', ''அர்ச்சனைப் பூக்கள்'', ''இயந்திரப் பறவை'' போன்ற புதிய தொடர்கள் அறிமுகப்பட்டிருக்கிறன.

ஆலோசனை நேரம், மற்றும் மக்களுடைய கருத்துத் தொடர்பான உள்ளகத் தயாரிப்பு நிகழ்ச்சிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விளையாட்டுத்துறை தொடர்பான புதிய நிகழ்ச்சியும் அறிவுப் போட்டியும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சக்தி எப்.எம்.மும் தனது காதுக்கினிய கீதங்கள், கலகலப்பான உரையாடல்கள் சிறப்பு அம்சங்கள் ஆகியவற்றுடன் பல்வேறு புதிய நிகழ்ச்சிகளைச் சேர்த்துக் கொள்ள இருக்கிறது.

சக்திக் குடும்பத்தில் ரசிக நெஞ்சங்கள் சங்கமித்துவிட்டதால் எதிர்காலம் ஒளிமயம்தான். அதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ''சுடர் ஒளி'' யின் வாழ்த்துக்கள்.

## சக்தியின் சேவைக்கு தகவல் ஊடகத்துறை அமைச்சர் பாராட்டு

சக்தி ரி.வி. மற்றும் சக்தி எப்.எம்.சேவைக்கு தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா பாராட்டுத் தெரிவித்தார்.

சக்தி ரி.வி., சக்தி எப்.எம். ஆகியவற்றின் இரண்டாம் ஆண்டுநிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இரண்டு அமைப்புகளையும் பாராட்டினார்.

சக்தி ரி.வி. மற்றும் சக்தி எப்.எம். வைபவம் ஒன்றில் ஊடகத்துறை அமைச்சர் ஒருவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டது இதுவே முதல் முறை.

நீர் விநியோக மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச் சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவும் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகள், சக்தி ரி.வி., சக்தி எப்.எம். ஆகியவற்றின் நிறைவேற்று அதிகாரிகள், பணிப்பாளர்கள் ஆகியோர் மங்கள விளக்கேற்றி சம்பிரதாயபூர்வமாக வைபவத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இரண்டாவது ஆண்டு நிறைவு விழா கேக் வெட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விழாவில் தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா உரையாற் றுகையில் கூறியதாவது:–

இந்த நாட்டின் நேயர்களுக்கு எம்.ரி.வி. பல சேவைகளை ஆற்றியுள்ளது. விசேடமாகத் தமிழ் மக்களுக்காக சக்தி ரி.வியும், சக்தி எப்.எம்மும் மிகச் சிறந்த சேவையை கடந்த இரண்டு வருடங்களாக ஆற்றி வருகின்றன என்பதை நான் நினைவு கூரவிரும்புகின்றேன்.

பல தடவைகள் தமிழ்க் கலாசார நிகழ்ச்சிகளை நான் சக்தி ரி.வியில் பார்த்திருக்கிறேன். நாட்டின் ஏனைய சமூகத்தவரையும் இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திய சக்தி ரி.விக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இப்படி அமைச்சர் கூறினார்.

## ஹிஸ்புல்லாஹ் மகிழ்ச்சி

சக்தி ரி.வி, சக்தி எப்.எம் ஆகியவற்றின் இரண்டு ஆண்டு சேவை குறித்து நீர் வழங்கல், வடிகால் அமைப்புச் சபைத் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் மகிழ்ச்சி தெரிவித்தார்.


இரு அமைப்புக்களினதும் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவில் விஷேட விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றுகையில் கூறியதாவது:–

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களும் மத்திய மாகாண மலையகப் பிரதேசங்களிலே வாழும் மக்களும் மிகவும் விரும்பிப் பார்க்கும், கேட்கும் சக்தி ரி.வி, சக்தி எப்.எம் ஆகியவற்றின் இரண்டாவது ஆண்டு நிறைவையிட்டு நான் மிகமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த ஒளி, ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் மக்களை முழுமையாகச் சென்றடைய வேண்டுமென்றால் ஒளி, ஒலிபரப்புச் சேவையை 24 மணி நேரமும் நடத்த வேண்டும். அப்படி செய்வதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் மிகுந்த நன்மை அடைய முடியும்.

இன்று மக்களுக்கு இருக்கின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மத்தியிலே – அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற சொல்லொணாத் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் மத்தியிலே அவர்களுடைய ஓய்வு நேரங்களை ஆறுதலாகக் கழிப்பதற்கு உதவியாக இருக்கும் ஒரே ஒரு தமிழ் ரி.வி, சக்தி ரி.வி மாத்திரமே. சக்தி எப்.எம் வானொலியும் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் ஆற்றி இருக்கும் சேவையால் மக்கள் மிகவும் திருப்தி அடைந்தவர்களாக இருக்கின்றார்கள். இதைச் சொல்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சக்தி ரி.வியிலும் சக்தி எப்.எம்மிலும் பணியாற்றும் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் கடந்த இரண்டு ஆண்டு களுக்குள்– தங்களுக்குக் கிடைத்த குறுகிய காலத்துள் மிகச் சிறப்பான நிகழ்ச்சி களைத் தயாரித்து வழங்கி வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித் திருக்கின் றார்கள். இதை உங்களுக்கு சொல்லி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.



நீர் வழங்கல் சபைத் தலைவர் ஹிஸ்புல்லாஹ் விளக்கேற்றுகிறார்

எதிர் காலத்திலும் நீங்கள் மேலும் சிறப்பாக உங்கள் பணிகளைச் செய்ய வேண்டும். இந்த அளப்பரிய சேவையில் ஈடுபட்டுள்ள பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி ஹிஸ் புல்லாஹ் கூறினார்.

## பேராசிரியர் சிவத்தம்பி வாழ்த்து

பேராசிரியர் கா. சிவத்தம்பி தனது வாழ்த்துச் செய்தியில் பின்வருமாறு கூறினார்:–

தமிழ் நிகழ்ச்சி என்றால் தமிழ்த் திரைப்படம் தான் என்ற ஒரு நிலை இருந்தது.

தமிழ் நிகழ்ச்சிகள் சில மணித்தியாலங்களே ஏனையவற்றில் ஒளிபரப்பப்படும்போது, சக்தி ரி.வியில் பல நிகழ்ச்சிகள் மற்றும் தொடர் நாடகங்கள் சன் ரி.வியிலிருந்து ஒளிபரப்பாகி வருகின்றன.

வீட்டில் ஆற அமர இருந்து ரி.வி பார்க்கக் கூடிய நேரம் இரவுதான். எனவே 9 மணிக்குப் பிறகும் உங்கள் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாக வேண்டும்.

நேயர் கருத்துக்கள், ஆலோசனைகள் போன்ற நிகழ்ச்சிகளையும் தயாரிக்கவேண்டும்.

நிகழ்ச்சி நிரல்படுத்தல் என்பது இன்றைய ஊடகவியலில் முக்கியமான விடயம். இவ்விடயத்தில் நீங்கள் இதுவரையும் கவனம் எடுத்திருப்பீர்கள் என நினைக்கிறேன்.

சக்தி ரி.விக்கு இன்று பொதுவான ஒரு பார்வையாளர் குழுமம் உருவாகியுள்ளது. இதை சக்தி ரி.வி. கவனத்தில் எடுத்து எதிர்காலத்திலும் நல்ல சேவையையாற்ற வாழ்த்துகிறேன்.

## பி.எச். அப்துல் ஹமீத்

சக்தி ரி.வியின் ஆரம்ப பாடல் காட்சியைத் தயாரிப்பதில் திரு. ராஜமகேந்திரனின் சார்பில் சகோதரர் எழில்வேந்தன் கேட்டுக் கொண்டதற்கிணங்க பூமியின் உட்பாகம் திரும்பி வருவதைப் பாடமாகக் கொண்ட அந்தக் காட்சியை உருவாக்குவதில் எனக்குக் கிடைத்த பங்களிப்பையிட்டு எனக்கு மகிழ்ச்சி.

பலத்த செலவுடன் திரைப்படங்களைத் தயாரிக்கும் இந்தக் காலத்தில் அதிக செலவுடன் உள்நாட்டுக் கலைஞர்களின் நிகழ்ச்சியையும் சக்தி ரி. வியினர் தயாரித்து வருகின்றார்கள்.

இச் சந்தர்ப்பத்தில் சக்தி ரி.வியை வாழ்த்தக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

# வடபுலத்தில்

# யாழ் பல்கலை மாணவர்கள் மாவீரர் அஞ்சலியில் பங்கு

குடாநாடு அரசுப் படைகள் வசமான பின்பு இம்முறைதான் புலிகளின் மாவீரர் வாரகாலம் பெரிதும் பதற்றமின்றி அமைதியாகக் கழிந்துள்ளது. ஆனால் முன்னைய ஆண்டுகளை விட இம்முறை மாவீரர் தினத்தை ஒட்டிய நிகழ்வுகள் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளும் அதிகளவில் இடம்பெற்றிருக்கின்றன. இவை படைத்தரப்பின் கவனத்தை மட்டுமன்றி அனைவரினது கவனத்தையும் ஈர்த்துள்ளன.

கடந்த வாரம் திடீரென வீதிகளில் இறங்கி தமிழீழ கோஷம் எழுப்பிய யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் திங்களன்று மாவீரர் தினத்தன்று – மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகத் தாங்களாகவே விரிவுரைகளைப் பகிஷ்கரித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி பல்கலைக்கழக வளாகத்துக்குள் மாவீரர் தின சுவரொட்டிகள், பதாகைகள் காணப்பட்டன. மாவீரர் தினத்தன்று மாலை அங்குள்ள பரமேஸ்வரன் ஆலய மணி ஒலிக்க ஈகைச் சுடர்கள் ஏற்றப்பட்டிருந்ததையும் காண முடிந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினத்திற்கு வாழ்த்து தெரிவிக்கும் சுவரொட்டிகளும் அவரது படத்துடன் பல்கலைக்கழக வளாகத்துக்குள் காணப்பட்டதாகத் தெரிகிறது.

மாவீரர் தினப் பாதுகாப்பு ஏற்பாடாகச் சில பிரதேசங்களில் ஆலய மணிகள் ஒலிக்கப் படைத்தரப்பு தடைவிதித்திருந்த போதிலும் குறிப்பிட்ட அந்த நேரத்தில் பல திக்குகளிலும் மணி ஓசையைக் கேட்க முடிந்தது. வடமராட்சியில் எல்லாங்குளம் என்னும் இடத்தில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த பகுதியில் எவரோ ஏற்றிய தீபம் நீண்ட நேரம் எரிந்துகொண்டிருந்தது.

கணனி பிரின்ட் மூலம் அச்சிடப்பட்ட பெரிய அளவிலான மாவீரர் துண்டுப்பிரசுரங்கள் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை என்ற பெயரில் யாழ்.நகரில் விநியோகிக்கப்பட்டன.

சர்வதேசமும் எதிர்பார்த்திருந்த தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரையை யாழ்.மக்கள் பெரும் ஆர்வத்துடன் செவிமடுத்தனர். 'புலிகளின் குரல்' வானொலி சேவையை யாழ்ப்பாணத்தில் தெளிவாகக் கேட்க முடியாமற் போனபோதும் கூட சர்வதேச வானொலி ஒலிபரப்புகளில் பிரபாகரனின் உரையை மக்கள் ஆவலுடன் செவிமடுத்தனர்.

மாவீரர் வாரம் அமைதியாகக் கழிந்திருப்பதும் படையினரின் பிடியில் உள்ள யாழ்ப்பாணப் பகுதிகளில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த மக்கள் முயன்றிருப்பதும் சமாதானத்துக்கான நல்ல அறிகுறிகளாக அமையட்டும்.

***

குடாநாட்டில் தாக்குதல்களில் சிக்கி உயிரிழக்கும் பொதுமக்களுக்குப் புலிப்பட்டம் சூட்டி அவர்களது மரணத்துக்கு நியாயம் கற்பிக்க படைத்தரப்பில் எப்போதும் முயற்சி எடுக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

பலியான அப்பாவிகளுக்கு சீருடைகளைப் போர்த்தும், கைக்குண்டுகள் போன்று சிறு ஆயுதங்களை அவர்கள் வைத்திருந்ததாகக் கூறியும் 'பயங்கர வாதி' என்று முத்திரை குத்தப்பட்டோர் பலர். புலி உறுப்பினர் என்பதை ஏற்குமாறு உறவினர்களை வற்புறுத்தி கையொப்பம் பெற்ற பின்னர் சடலங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளிவந்தும் உள்ளன.

கடைசியாக யாழ்.நகரில் கஸ்தூரியார் வீதியில் பொலிஸ்காரர் ஒருவர் பலியான சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பதில் தாக்குதலில் உயிரிழந்த சிவிலியன் ஒருவரையும் புலிகளின் பட்டியலில் சேர்க்க முயற்சி எடுக்கப்படுகிறதா என்ற ஐயம் எழுந்துள்ளது.

கஸ்தூரியார் வீதி ஹோட்டலில் இருந்த இரு பொலிஸாரை இனந்தெரியாதோர் சுட்டுவிட்டு ஓடினர். அவர்களில் ஒரு கான்ஸ்டபிள் உயிரிழக்க காயமடைந்த மற்றைய கான்ஸ்டபிள் வீதிக்கு ஓடிவந்து திருப்பிச் சுட்டார். இவ்வாறு கூறப்படும் சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஏ.முரளிதரன் (வயது 24) என்பவர் தனது காருக்குள் இருந்த சமயம் சூடுபட்டுப் பலியானார்.

அன்றைய சூட்டுச் சம்பவத்துக்குப் பொறுப்பான சந்தேக நபர் முரளிதரனே என்றும்.

புலன் விசாரணைகளுக்காக அவருடன் அன்று அந்த ஹோட்டலில் உணவருந்திய ஐவரையும் விசாரணை முடியும் வரை விளக்க மறியலில்



வைக்குமாறும்–

யாழ்.நீதிவானிடம் பொலிஸார் கோரி இருந்தனர். ஆனால் அந்த ஐவரின் வாக்கு மூலங்களையும் தனித் தனியே பதிவு செய்த நீதிவான் பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்து அவர்களைப் பிணையில் விடுவித்தார்.

முரளிதரனைச் சுட்டதாகக் கூறப்படும் கான்ஸ்டபிளை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் அவர் உத்தரவிட்டார். பிரஸ்தாப கான்ஸ்டபிள் கொழும்பு பொலிஸ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவத்தில் பலியான பொதுமகனை பயங்கரவாதியாக்க முயற்சி எடுக்கப்பட்டிருப்பதற்கான தகவலும் கூட நீதிமன்றம் ஊடாக வெளியாகி இருக்கிறது.

பலியான முரளிதரன் கறுப்பு நிற நீளக் காற்சட்டையும், பச்சைக் கோடிட்ட மஞ்சள் ரீ–சேட்டும் அணிந்திருந்ததாகவும் பிரேத பரிசோதனையின் போது சடலத்தில் இருந்து அவற்றைத் தாங்கள் அகற்றி எடுத்ததாகவும் பொலிஸ் அதிகாரி நீதிமன்றில் கூறினார்.

ஆனால் சம்பவம் நடந்த தினத்தன்று தனிப்பட்ட அலுவல் நிமித்தம் யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்த யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா தற்செயலாக சூட்டுச் சம்பவத்தில் பலியான முரளிதரனின் சடலத்தை அங்கு பார்க்க நேர்ந்துள்ளது.

ஆஸ்பத்திரிக்குள் நீதிவானைக் கண்டு இச்சம்பவம் பற்றி உரையாடிய பொலிஸ் அத்தியட்சர் அருகில் நின்ற காரின் கதவைத் திறந்து சடலத்தை நீதிவானுக்குக் காட்டியுள்ளார். பிடரியில் சூட்டுக் காயத்துடன் காணப்பட்ட அந்த சடலத்தில் வெள்ளை நிற சேர்ட் இருந்ததை நீதிவான் கண்டுள்ளார்.

இதனால் சடலத்தில் சீருடையை ஒத்த உடைகள் காணப்பட்டதாக விசாரணையின் போது பொலிஸ் தரப்பு சாட்சி கூறியதை நீதிவான் ஏற்க மறுத்து விட்டார்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிவான் பொலிஸாருக்கு வழங்கியுள்ள அறிவுறுத்தல்கள் யாழ். மக்களால் பெரிதும் வரவேற்றுப் பேசப்பட்டிருக்கின்றன.

"யாழ். குடாநாட்டில் கடமையாற்றும் பொலிஸாரின் பாதுகாப்புக் குறித்து இந்த நீதிமன்றம் அக்கறைப்படும் அதேவேளை குடாநாட்டில் கடமையாற்றும் பொலிஸார் தமது கையில் உள்ள ஆயுதங்களை அப்பாவி மக்களுக்கு எதிராகத் திருப்புவதை இந்த நீதிமன்றம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது" என்று நீதிவான் இ.த. விக்னராஜா தனது உத்தரவில் உறுதிபடக் குறிப்பிட்டிருக்கிறார்.

***

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்வது தொடர்பான கலந்துரையாடல் கடந்த வாரம் யாழ். அரச செயலகத்தில் நடைபெற்றது. தமிழ்க்கட்சிகளைச் சேர்ந்த இரு பிரமுகர்கள் அபிவிருத்துக்கு அப்பால் அரசியல் விடயங்களில் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டனர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியை பிரதேச செயலகங்களுக்கு ஒதுக்குவதில் பாகுபாடு காட்டப்படுகிறது. அரச அதிகாரி ஒருவர் இவ்வாறு சுட்டிக் காட்ட முயன்ற போது இந்த வாக்குவாதம் கிளம்பி செயலக மாநாட்டு மண்டபத்தை நாடாளுமன்றமாக மாற்றியது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டுக்கும் எமக்கும் தொடர்பில்லை. அது யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி. இவ்வாறு அரச அதிபர் க.சண்முகநாதன் விளக்கமளித்தார். "அப்படியானால் அந்த நிதி பற்றி இங்கு கதைக்க எமக்கு அதிகாரம் இல்லையா?" எனக் கேள்வி எழுப்பினார் ரெலோ சார்பு வல்வை நகரசபைத் தலைவர் சிவாஜிலிங்கம்.

அச்சமயம் ஈ.பி.டி.பி பிரதேச சபைத் தலைவர் குறுக்கிட்டு "தமக்கு மக்கள் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதற்காக தேவையற்ற குற்றச்சாட்டுக்களை எமது கட்சி மீது சுமத்த வேண்டாம்" என்று சாடினார்.

இந்த வாய்த்தர்க்கத்தினிடையே ஆளும் தரப்பை 'மண்ணாங்கட்டிகள்' என்ற சொற்பிரயோகம் மூலம் தாக்கிப் பேசியதாக ரெலோ சிவாஜிலிங்கம் மீது குற்றஞ்சாட்டினார் திரிலோகநாதன்.

"இங்கே ஒன்றும் கதைக்க வேண்டாம். கதைப்பதானால் வவுனியாவில் போய் கதையுங்கள்" என்று சிவாஜிலிங்கத்தைப் பார்த்து முழங்கினார் திரிலோகநாதன்.

"நாங்கள் தமிழீழத்தில் எங்கும் கதைப்போம்" என்று அதிரடியாகப் பதிலளித்தார் சிவாஜிலிங்கம்.

அச்சமயம் அங்கிருந்த ஈ.பி.டி.பி. தரப்பு பிரதிநிதிகள் "தமிழீழம் பற்றிய கதை இங்கு வேண்டாம்" என ஒருமித்த குரலில் கூற–

"இல்லை... எமது கட்சியின் பெயரே தமிழீழம் என்றுதானே தொடங்குகிறது" என விடாது மொழிந்தார் சிவாஜிலிங்கம்.

அரைகுறையாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ந்து எவ்வாறு முன்னெடுப்பது என்பது பற்றிக் கலந்துரையாட வந்திருந்த அரச திணைக்களத் தலைவர்கள் பலரும் இந்த விவாத அரங்கின் பார்வையாளர்களாக இருக்க வேண்டியதாயிற்று.

–வலிகாமத்தான்.

# சுவிஸ் தமிழர்கள் இந்தியாவில் நடிகையிடம் இறைத்த காசு!

காலையில் இருந்தே வானத்தை ஆக்கிரமித்திருந்த கருமேகங்களால் ஏற்பட்ட மெல்லிய இருளை உடைத்தெறியும் முயற்சியில் ஓரளவு வெற்றி கண்டிருந்தான் கதிரவன். அவன் முழு வெற்றியடைந்து வெளிச்சத்தை மண்ணில் தவழவிட்டதுதான் தாமதம் தேரடியில் அரட்டைக் கச்சேரி ஆரம்பித்தது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கொட்டும் மழையில் பிந்துனுவெவ படுகொலைக்கும் பத்திரிகையாளர் நிமலராஜன் கொலைக்கும் கண்டனம் தெரிவித்து – நீதி விசாரணை கோரி எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஊர்வலம் நடத்தி முடிச்சது ஒரு சாதனைதான் என்று சிலாகித்தபடி பேச்சை ஆரம்பித்தார் விநாசியர்.

நடுவழியிலை அந்த ஊர்வலத்தைத் தடுக்க முயற்சி நடந்ததாம். திரண்டிருந்த மாணவர்களின் உறுதியாலை தடுப்பு முயற்சிகள் பிசு பிசுத்துப் போச்சுதாம்.

நடந்ததை விவரித்தார் பரமலிங்கம் மாஸ்ரர்.

ஓம் ... ஓம்... முதலிவை தடுக்கிறதும், பிறகு 'சமயோசிதமாக' வழிவிடுறதும் வழக்கம் தானே! சின்னாச்சி தனக்கே உரிய பாணியில் பொடி வைத்துப் பேசினாள்.

அதுவரை பெரிசுகளின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த லோகன், வழியிலை தடுத்ததை விட ஊர்வலம் புறப்படும் போது நடந்த தடுப்பு வேலைகள் தெரியுமோ என்று கேட்டபடி மணலில் சாய்ந்து கொண்டு கூறத் தொடங்கினான்.

அன்று காலை ஊர்வலம் நடத்த அனுமதிகேட்டு உயர் தலைமைக்கு மாணவர்கள் கடிதம் எழுதினவையாம். அந்தக் கடிதம் நிராகரிக்கப்பட்டதுடன் முதல் மாடி ஜன்னல் வழியாகத்தான் மாணவர்களை அது வந்தடைந்ததாம்.

ஊர்வலத்துக்கு முதல் நாள் ஒட்டோவும், ஒலி பெருக்கி சாதனங்களும் தருவதாக ஒப்புக்கொண்ட நிர்வாகம் மறுநாள் ஒட்டோ 'ரிப்பேர்'என்று கைய விரித்து விட்டதாம்.

ஆனால் ஊர்வலம் புறப்பட்டுச் சென்ற பின்னர் 'ரிப்பேர்' ஆன ஒட்டோ. தாராளமாக ஓடித் திரிந்ததாம்.

என்ன செய்யிறது 'மெக்கானிக்மார்' இல்லாத படியால்தான் இப்பிடி. 'மெக்கானிக் மார்' வந்து திருத்தினா எல்லாம் சரியாப் போடும். வாடிக்கையாளருக்கு கடலையை விற்றபடி சின்னாச்சி கூறினாள்.

இதைவிடக் கொடுமை என்ன என்றால் , ஊர்வலத்துக்கு எல்லோரும் போக, 'பட்டதறி'கள் சிலர் புது ஆக்களை ஊர்வலத்துக்கு போகவிடாமல் மறித்து தங்கடை 'பகிடிவதை' ராஜ்ஜியத்தை நடத்திச்சினமாம் என்றான் டானியல்.

பல்கலைக்கழகத்திலை ஒழுங்கான பிள்ளையள் தான் நிறைய இருக்கினம். ஆனால் தட்டுக் கெட்ட கொஞ்சம் தான் பகிடிவதையிலை ஈடுபடுகுது.

ஊர்வலத்துக்கு அனுமதிக்காத உயர்தலைமையும், பகிடிவதையிலை ஈடுபட்டவையும் ஒரே குட்டையிலை ஊறின மட்டையள் என்ற படியால் தான், பகிடிவதையிலை ஈடுபட்டவையை உயர் தலைமை தண்டிக்க மறுக்குது போலை என்றாள் உண்மையைக் கண்டுபிடித்த சின்னாச்சி.

என்ன செய்யிறது சின்னாச்சி, உண்மையை வெளியிலை வர வைக்க எவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருக்கு என்ற மாஸ்ரர், பின்னால் கையை ஊன்றியபடி, கஸ்தூரியார் வீதியிலை பொலிஸ்காரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டது தெரியும் தானே –

அப்ப உயிர் தப்பி வெளியிலை வந்தவர் சுட்டதிலை காரிலை இருந்தவர் இறந்தவரெல்லே.

அதிலை காரிலை வந்த மற்றவையைச் சிக்க வைக்க நடந்த முயற்சியைத் தடுத்து விட்ட நீதிபதி காயம்பட்ட பொலிஸ்காரரை நீதிமன்றத்துக்கு கொண்டு வரும்படி சொன்னவராம்.

அதுக்கு, கொழும்பிலை அவர் சிகிச்சை பெறுகிறார். அவரைக் கூட்டிக் கொண்டு வருகிற நிலைமையிலை அவர் இல்லை என்று சொல்லப்பட்டதாம்.


அவர் சம்பவம் நடந்தபோது வெளியிலை வந்து சுட்டிருக்கிறார். அதுக்குப் பிறகு அங்கையிருந்து கொஞ்சத் தூரம் தள்ளியிருந்த ஒரு அலுவலகத்துக்கு நடந்து வந்து போனும் பண்ணினவராம் என்று கூறி முடித்தார்.

இப்பிடி ஏறுக்குமாறு எல்லா இடத்திலையும் தான் நடக்குது. தமிழ் நாட்டிலை எங்கடை ஆக்கள் இரண்டுபேர் வெளிநாட்டிலை உழைச்ச காசை நடிகைக்குத் தானம் வார்த்த கதை தெரியுமோ என்று கேட்டார் விநாசியர்.

என்னண்ணை திடீரென்று கட்டுநாயக்கா தாண்டிக் கதை சொல்லுறியள் என்ற டானியலுக்கு, எவ்வளவு நாளைக்கு குடாநாட்டைப் பற்றி மட்டும் கதைக்கிறது?

எல்லோருக்கும் அலுக்கக் கூடாதென்டால் ஆனையிறவும் தாண்டி அங்காலையும் பார்க்க வேண்டாமோ. அதாலை அப்பப்ப பல இடத்து விசயங்களையும் தெரிந்து கொள்ள வேணும்.

இப்படிப் பதிலளித்த விநாசியரை அவன் கிடக்கிறான், நீங்கள் சொல்லுங்கோ என்று தூண்டினான் லோகன்.




நடிகை என்டவுடனை பொடியன் படுற அவதியைப் பாருங்கோ என்று கடித்தாள் சின்னாச்சி.

கிழவியின் கடியைப் பொருட்படுத்தாமல் கதை கேட்கும் ஆவலில் இருந்த லோகனைப் பார்த்துச் சிரித்தபடி விநாசியர் தொடர்ந்தார்.

சுவிஸ்ஸிலை இருந்து கஷ்டப்பட்டு உழைச்ச காசோடை எங்கடை பொடியள் இரண்டு பேர் சினிமாப் படம் எடுக்கிறதுக்கு சென்னைக்கு வந்தினம். வரேக்கை அவையின்ரை நண்பன் ஒருவரிடமிருந்து சென்னையிலை திரைப்படத்துறையிலை இருக்கிற ஆள் ஒருவரின்ரை விலாசமும் வாங்கி வந்து பார்த்தவையாம்.

அவரும் இவைக்கு 7ஆயிரம் ரூபா வாடகையிலை ஒரு வீடு பிடிச்சுக் கொடுத்து சினிமாக் கொம்பனியும் தொடங்க உதவி செய்தாராம்.

கொம்பனி தொடங்கின பிறகு வழக்கமா டைரக்டர், படத்தின்ரை கதை ஆகியவற்றைத் தான் முதலில் முடிவு செய்வினம்.

ஆனா எங்கடை ஆக்கள் என்னஅவாவிலை இருந்தினமோ தெரியாது. முதலிலை நடிகை யைப் படத்துக்கு தீர்மானிக்க வேணும் என்று சொல்ல உதவி செய்யிறவர் ஒவ்வொரு நடிகை வீடா இவைரைக் கூட்டிக் கொண்டு போனாராம்.

எங்கடை ஆக்கள் எப்பிடியும் 'தேவ' லோக நடிகையைத்தான் படத்திலை நடிக்க வைக்கவேணும் என்று ஒத்தைக் காலிலை நின்றும் அது சரிவராமல் பிறகு, சிம்ம நடிகை, ஒன்றரைக் கண் நடிகை என்று போய் ஒருவழியாக இப்ப அவ்வளவு சினிமா வாய்ப்புகள் இல்லாத 'மீன்' நடிகையைத் தங்கடை படத்திலை நடிக்க ஒப்பந்தம் செய்திச்சினம்.

அப்ப தான் அவைக்கு சனி பிடிச்சிது.

அந்த நடிகை நிதிநிறுவன அதிபர் ஒருவரை, காசைக் கறந்து ஓட்டாண்டியாக்கி நிதி நிறுவனம் இழுத்து மூடப்பட்டது தமிழ் நாட்டில் பிரசித்தம்.

இது தெரியாமல் எங்கடை ஆக்கள் இரண்டு பேரும் மாறி, மாறி நடிகையிட்டை எடுக்கப் போற படத்தைப் பற்றி 'ஆலோசனை' நடத்தப் போச்சினம்.

பிறகு என்ன நடந்தது? அதுவரை திறந்த வாய் மூடாது கேட்டுக் கொண்டிருந்த லோகன் அவசரப் படுத்தினான்.

பிறகு என்ன; ஒரு படம் எடுக்கிற காசை ஒரு நடிகையிட்டை நகைகளாயும் காசாயும் கொடுத்துப் போட்டு தலையிலை துண்டைப் போட்டபடி சுவிஸுக்குப் பிளேன் ஏறினதுதான் மிச்சம்.

இதில வேடிக்கை என்ன என்றால் படம் எடுக்க வந்தவையிலை ஒருத்தருக்கு வயது 48. மற்றவருக்கு 52. சிரித்த படி கூறி முடித்தார் விநாசியர்.

அதுவரை கேட்டும் கேட்காதது போல் நாசுக்காக விநாசியரின் கதைக்கு காது கொடுத்துக் கொண்டிருந்த சின்னாச்சி, சுபாவத்தை விட முடியாமல், நடுக்கடலியையும் நாய்க்கு நக்குத்தண்ணி தானாம். அது போல எங்கடை ஆக்கள் வெளிநாட்டுக்குப் போனாலும்...! கூற நினைத்ததைச் சொல்லி முடிக்காமல் நிறுத்திக் கொண்டாள்.

உந்த மாதிரி கூத்தடிக்கிறவை எங்கை போனாலும் திருந்த மாட்டினம். அதுபோல விவரமானவை எங்கேயும் சாமர்த்தியம் காட்டிப் போடுவினம் என்றார் மாஸ்ரர்.

என்ன, ஏதோ விசயம் இருக்குப் போலை என்று கொக்கி போட்டார் விநாசியர்.

அதற்கு 'வவுனியா கல்வியியல் கல்லூரியிலை போன 27ஆம் திகதி ஏற்றப்பட வேண்டிய கொடியை ஏற்றிப் போட்டினம். உயர் பாதுகாப்பு உள்ள அந்தப் பகுதியில் கனநேரம் அந்தக் கொடி பறந்ததாம். இத்தனைக்கும் அந்தக் கல்லூரியிலை எல்லா இனத்தவரும் படிக்கினமாம். அப்பிடி இருந்தும் கொடி ஏற்றி பறக்கவிடப் பட்டதாம் என்று முடித்தார் மாஸ்ரர்.

இதைச் சொல்றீங்கள், யாழ். இந்துக் கல்லூரியின் பிரதான வாசலுக்கு முன்னால் தெருவுக்குக் குறுக்கே பெரிய பேனரே கட்டப்பட்டிருந்ததாம். அதிலை இருந்து கூப்பிடு தூரத்திலை காவல் இருந்தும், பரபரப்பா இயங்கும் கே.கே.எஸ். றோட்டிலை 27ஆம் திகதி பதாகை கட்டினது எப்பிடி என்று தெரியாமல் நிறைய மண்டைகள் குழம்பிப் போச்சுதாம் என்றான் டானியல்.

அப்போது தான் நடிகையின் கனவில் இருந்து மீண்டிருந்த லோகன், வடமராட்சியில் எல்லாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் தீபம் ஏற்றப்பட்டிருந்ததாம். கரணவாய், கம்பர் மலைப் பகுதியில் பல ஆலயங்களில் மணி ஓசை எழுப்பப்பட்டதாம் என்றான்.

எப்பிடியோ, எல்லாம் நல்லபடியாய் முடிஞ்சு. அடுத்த வருசம் இந்த நேரம் எல்லோரும் நிம்மதியாய், பயமில்லாமல் வாழவேணும். அதுக்கு ஆனைமுகன் தம்பியே நீதான் வழிகாட்ட வேணும்.

அனைத்து தமிழர்களின் மனங்களில் உள்ள வேண்டுதலுக்குச் சாட்சியாய் சின்னாச்சி முருகக் கடவுளை வணங்கியபடி கடலைக் கடையைக் கட்ட ஆரம்பித்தாள்.

தேரடி கலைய ஆரம்பித்தது.

# மட்டக்களப்பு புதிய எம்.பி எதிர் நோக்கும் சவால்!

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட நிமலன் சௌந்தரநாயகம் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அவருடைய இடத்துக்கு முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா புதிய எம்.பியாக நியமிக்கப்பட்டு உள்ளார் அல்லவா?

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடாத் தொகுதியில் பொன். செல்வராசா பெரும் சவாலை எதிர்நோக்குகிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட நிமலன் சௌந்தரநாயகத்தின் மறைவால் ஏற்பட்ட இடைவெளியை பொன்.செல்வராசா சரியானபடி நிரப்புவாரா?

கல்குடாத் தொகுதித் தமிழ்மக்களிடையே எழுந்துள்ள கேள்வி இது.

மட்டக்களப்பு மாவட்டம் மூன்று தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியது. கடந்த 94ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் மூவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பட்டிருப்புத் தொகுதியை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் செல்வராசாவும், மட்டக்களப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஜோசப் பரராஜசிங்கமும், கல்குடாத் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கி.துரைராஜசிங்கமும் எம்.பிக்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆனால் இவ்வாண்டு நடந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் கல்குடாத் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 94ஆம் ஆண்டு எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்ட கி.துரைராஜசிங்கம் போட்டியிடவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் நிமலன் சௌந்தரநாயகம் போட்டியிட்டார். அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதன்மை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவருக்கு 16542 வாக்குகள் கிடைத்தன. தலைமை வேட்பாளராகப் போட்டியிட்ட ஜோசப் பரராஜசிங்கத்திற்கு 12605 வாக்குகளே கிடைத்தன.

94ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டு 17450 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டிய பொன்.செல்வராசா இம்முறை 11698 வாக்குகளைப் பெற்றுத் தோல்வி அடைந்தார்.

கடந்த 07ஆம்திகதி கிரானில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நிமலனின் இடத்திற்கு அவரது மனைவியான றஞ்சினி நிமலன் சௌந்தரநாயகத்தை நியமனம் செய்யுமாறு கல்குடாத் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

நிமலன் சௌந்தரநாயகத்தின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளவந்த கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வி.ஆனந்தசங்கரியிடம் கல்குடாத் தொகுதியிலுள்ள நிமலனின் ஆதரவாளர்கள் கல்குடாத் தொகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் திருமதி நிமலன் சௌந்தரநாயகத்தையே நியமிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

தேர்தல் விதிமுறைகளுக்கமையவே இதற்குத் தீர்வு காணமுடியும் என ஆனந்தசங்கரி



பொன். செல்வராசா

தெரிவித்திருந்தார்.

இதேசமயம் கல்குடாத் தொகுதியைச் சேர்ந்த பல்வேறு அமைப்புக்கள், தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் என்பனவும் நிமலன் சௌந்தரநாயகத்தின் இடத்திற்குத் திருமதி நிமலன் சௌந்தரநாயகத்தை நியமிக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப்பீடத்திடம் வேண்டுகோள் விடுத்தனர்.

தேர்தல் சட்ட விதிமுறைகளுக்கு அமைய ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மரணமடைந்தால் அவரது இடத்திற்கு அவர் சார்ந்த கட்சியிலிருந்து போட்டியிட்டுத் தோல்வியுற்றவர்களில் முதன்மை நிலையில் இருப்பவர்களையே நியமிக்கவேண்டும். நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பார்.

தேர்தல்ஆணையாளர் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருடன் தொடர்புகொண்டு அக்கட்சியில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர்களில் முதன்மைநிலையில் இருப்பவரின் பெயரை சிபார்சு செய்து அறிவிப்பார். இதற்கமைய ஒருவர் நாடாளுமன்ற பிரதிநிதியாக நியமிக்கப்படுவார்.

ஆயினும் கட்சி தான் தீர்மானிக்கும் ஒருவரை நாடாளுமன்றப் பிரதிநிதியாக்க விரும்பினால் அக்கட்சியில் போட்டியிட்டு தோல்வி அடைந்த சகல வேட்பாளர்களும் தமது சம்மதக் கடிதங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் கட்சி தான் விரும்பும் ஒருவரை எம்.பியாக நியமிக்க முடியாது.

இந் நியமனம் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் கொழும்பில் கூடியபோது காலஞ்சென்ற நிமலன் சௌந்தரநாயகத்தின் மனைவியை எம்.பியாக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த வேட்பாளர்கள் பதவி விலகல் கடிதங்களைச் சமர்ப்பிக்க முன்வரவில்லை.

தேர்தல் சட்டவிதிமுறைகளுக்கமையவே தெரிவு இடம் பெறவேண்டும் எனத் தீர்மானித்ததைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக பொன். செல்வராசா நியமிக்கப்பட்டார்.

கடந்த 23ஆம் திகதி அவர் நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணமும் எடுத்துக் கொண்டார்.

கல்குடாத் தொகுதி தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் தங்கள் பிரதேசத்தின் குறை நிறைகளைத் தங்கள் பிரதேசப் பிரதிநிதி ஒருவராலேயே நிவர்த்தி செய்ய முடியும் என்கின்றனர்.

திரு.பொன். செல்வராசா பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்தவர். அவர் கல்குடாத் தொகுதி மக்களின் குறை நிறைகளைக் கண்டு எவ்வாறு திருப்திகரமாகக் கடமையாற்றப் போகிறாரென்று சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இதுதான் பொன்.செல்வராசா எம்.பி. எதிர்கொள்ள வேண்டிய சவால். கல்குடாத் தொகுதி மக்களின் தேவைகள், அபிலாஷைகள் ஆகியவற்றை சரிவர அறிந்து செயற்பட்டு அவர்களுடைய இதயத்தில் இடம் பிடித்துக் கொள்ள வேண்டும்.

—அபிமன்யு.

## வாசகர் இதயம் பேசுகிறது

எங்கள் இதயங்களில் தீபம் ஏற்றிய சுடர் ஒளியே சமூகத்தில் பரவியுள்ள இருளை அகற்றி எங்கும் ஒளி பரவச் செய்திடுவாயே.

—ஏ.ஆர்.எவ்.ஸிமாரா, கொழும்பு 12.

சுடர் ஒளியில் இடம்பெறும் அரசியல் கட்டுரைகள், நாட்டின் தற்போதைய நிலைவரங்களை விரிவாக விளக்குகின்றன. சிறப்புக் கட்டுரைகளும் புதுப்புதுத் தகவல்களை அள்ளித் தருகின்றன.

-- ஏ.சீ.எம்.முஸம்மில், குளியாப்பிட்டி.

"அரசியல்வாதிகளுக்குப் பயிற்சிப் பாடசாலை" ஒன்று இந்தியாவில் இருப்பது பற்றிய செய்தி பிரமாதம். உண்மையில் அத்தகைய பாடசாலை ஒன்று இலங்கையில்தான் தேவை — நாற்றம் எடுக்கிறது, எங்கள் அரசியல்.

— தா.சிவகுமார், கொட்டாஞ்சேனை.

பெண்கள் பக்கம், அரசியல் பக்கம், வெளிநாட்டுச் சம்பவங்கள், மசாலா மிக்ஸ், கவிதைப்புனல் என்று அனைத்து அம்சங்களுமே எம்போன்ற வாசகர்களைக் கவர்ந்து விடுகின்றன.

— ஹலீம் இஷாக், வீரப்பொக்குனை.

இந்திரா காந்தியின் இளைய பேரன் வருண் காந்தி நாடறிந்த நல்ல கவிஞனாக உருவாகிவிட்டார் என்ற தகவல் மன மகிழ்வைத் தந்தது.

-- எம்.கருணாநிதி, கினிகத்தேனை.

அகிலத்தின் அந்தரங்கங்களைச் சுவையாக வெளியிடும் "சுடர் ஒளி"யின் பாங்கு சிறப்பானது.

-- ஏ.டபிள்யூ.எம்.ஜவாஹிர், ஹொரவப் பொத்தானை.

மலையகக் கண்ணோட்டம், பித்தனின் பதில்கள் எம்மைக் கவர்ந்து இழுக்கின்றன. வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் பத்திரிகை என்பது உண்மைதான்.

-- வையாபுரி தியாகராஜா, பண்டாரவளை.

"பிரபாகரன் நேரில் வந்தால் ஜனாதிபதி பேசத் தயார்" என்னும் தலைப்பில் 'சீக்ரெட் செக்ஷன்' பகுதியில் வெளிவந்த தகவல்கள் சிந்திக்க வைத்தன.

— எம்.சண்முகம், வவுனியா.

"தேரடி அரட்டை"யில் அலசப்படும் விஷயங்கள் சுவையாக இருக்கின்றன. கடலைக்கார சின்னாச்சியின் கருத்துக்கள் வடபகுதித் தாய்க்குலத்தின் கருத்துக்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

— சி.ஆர்.விக்னராஜா, மட்டக்களப்பு.

யாண் உருவான கதை பற்றி எழுதினாலும் எழுதினீர்கள். மாவுக்கும் பாணுக்கும் விலையேறிவிட்டதே.

— த.சண்முகநாதன், மட்டக்குளி.

# தாதாக்கள், திருடர்களை பந்தாடும் பெண் போலீஸ்

விர்ரென்று சீறிப் பறக்கின்றது அந்த அதிவேக மோட்டார் பைக். ஒருவர் லாகவமாக ஓட்டுகிறார். இன்னொருவர் குதிக்கத் தயார் என்பதுபோல உட்கார்ந்திருக்கிறார். கைகளில் ஏகே 47, எஸ்.எல்.ஆர்., பிஸ்டல் என்று பயங்கர ஆயுதங்கள். இடுப்பிலே வாக்கி டாக்கி. இருவரும் பெண்கள்!

டிராஃபிக் சிக்னல் பற்றியெல்லாம் கவலைப்படாமல் பறக்கிறது மோட்டார் பைக். மும்பை மாநகரின் முக்கியமான வீதி அது. மும்பை பொலிஸ் புதிதாக அறிமுகப்படுத்தியிருக்கும் கமாண்டோக்கள்தான் இவர்கள்!

இருநூறு கமாண்டோக்கள் இருக்கிறார்கள். 9 பேர் பெண்கள். துடிப்பாகவும் அஞ்சா நெஞ்சர்களாகவும் இருப்பவர்களைத்தான் பல்வேறு டெஸ்டுகள் மூலம் கமாண்டோ பயிற்சிக்குத் தேர்வு செய்கிறார்களாம். கமாண்டோக்கள் வீட்டில் தங்கள் படுக்கையில் கூட பிஸ்டல் வைத்திருக்கிறார்கள்.

பத்து பெண்களை எடுத்து பயிற்சி அளித்ததில் கடைசிவரை தகுதி பெற்றது மூன்று பெண்கள் மட்டுமே. "நீங்களும் ஆர்வம் காட்டலேன்னா கமாண்டோ ஆகும் தகுதியே பெண்களுக்கு இல்லை என்று முடிவுகட்டிவிடுவார்கள். அதனால் எப்படியாவது ஜெயித்து வாருங்கள் என்று எங்களுக்கு பயிற்சியளித்தவர் சொன்னபோது ரோஷம் வந்துவிட்டது. இதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டேன். ஜெயித்தேன்!" என்று



மீனா சால்வி — விஜயா

சிரிக்கிறார் மீனா சால்வி.

கிரண்பேடியின் சாகசக் கதைகளைக் கேட்டு பொலிஸ் துறையில் சேர்ந்தவராம் மீனா.

"முதல் கேஸே எனக்கு வெற்றிதான்... பாதாள கோஷ்டி தாதா அருண்காவ்லியின் அடியாள் ஒருத்தன், எதிர் கோஷ்டியான தர்மா கூட்டாளிகளில் இரண்டு பேரைக் கொலை பண்ணிவிட்டான். இவன்தான் கொலைகளைச் செய்தவன் என்று கண்டு பிடிக்கவே மூணு மாசமாச்சு. அதுக்கப்புறம் ஆக்ஷன்ல இறங்கிட்டேன். துரத்தித் துரத்தி போனாலும் சிக்காம ஒவ்வொரு இடமா மாறிட்டு இருந்தான். கடைசியா ராத்திரி ரெண்டு மணிக்கு அவனை மடக்கிப் பிடிச்சப்போ கைதூக்கி சரண்டர் ஆயிட்டான். என் துப்பாக்கிக்கு வேலை இல்லாமப் போச்சு...!" என்கிறார் மீனா.

தாதாக்களால் இவர்கள் உயிருக்கு ஆபத்து வராதா..?

"வீட்டு கிச்சன்ல இருக்கிற கேஸ் அடுப்பிலகூடத்தான் ஆபத்து இருக்கு. துணிஞ்சுதானே துப்பாக்கி பிடிக்கிறோம். தவிர, இந்த தாதாக்கள் எல்லோருக்கும் இன்னொரு கும்பலைச்சேர்ந்தவன்தான் எதிரியா இருப்பானே தவிர பொலிஸ் கிடையாது..." என்கிறார்.

சென்ற வருடம் கமாண்டோ பயிற்சி முடித்திருக்கும் விஜயா மல்கோங்கர் என்ற பெண்ணுக்கு 'என் கவுண்டர் இளவரசி' என்ற செல்லப் பேரே இருக்கிறது. காரணம், இவர் கலந்து கொண்ட தேடல் நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை எதிரிகளைச் சுட்டு சாகடித்ததில் முடிந்தவைதான்!

"அந்த கொஞ்ச நேரமும் தீயசக்திகளை அழிக்க வந்த காளி தேவியாகவே என்னை நினைத்துக்கொள்வேன். தைரியம் தானாக வந்துவிடும்" என்று சொல்லும் விஜயாவுக்கு, வீட்டைவிட்டு ஓடிவரும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு கொடுத்து, திரும்பவும் அவர்களை அவரவர் வீட்டில் கொண்டுபோய் சேர்ப்பதுதான் சாதாரண நேரப்பணி.

'நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும்' உடைய இந்தப் பெண்களைப் பார்க்கும்போது, எவருக்கும் சந்தோஷமாக மட்டுமல்ல... பெருமிதமாகவும் இருக்கும்.

## இந்திராவின் காருக்கே அபராதம் விதித்தவர்!



கிரண் பேடி

துணிச்சலுக்கும், தைரியத்துக்கும் பெயர்பெற்ற பெண் பொலிஸ் அதிகாரியான கிரண்பேடியின் பெயர் கிரண்பேடிதான். டெல்லி போக்குவரத்துப் பொலிஸ் பிரிவில் பணியாற்றியபோது, அனுமதியில்லாத இடங்களில் நிறுத்தப்படும் வாகனங்களை 'கிரேன்' மூலம் அதிரடியாக தூக்கிச் சென்றதால், பெயர் 'கிரண்' பேடி என்றாயிற்று!.

அவர் தனது 24 வயதில், அதாவது 1973ஆம் ஆண்டு குடியரசுதின அணிவகுப்பின்போது டெல்லி பொலிஸ் படையைத் தலைமையேற்று நடத்தினார். கிரண்பேடியின் கம்பீரத்தைக் கண்டு வியந்துபோன அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி, மறுநாள் காலையில் தன்னோடு விருந்து சாப்பிட வருமாறு அவரை அழைத்தார்.

1982ஆம் ஆண்டு இந்திரா காந்தி வெளிநாடு சென்றிருந்த நேரத்தில் அவரது கார் போக்குவரத்து விதிகளுக்கு முரணாக சாலையில் நிறுத்தப்பட்டு இருந்தது. அந்தக் காரை கிரண்பேடியின் 'கிரேன்' அலாக்காகத் தூக்கிச் சென்று விட்டது. கூடவே அதிகாரிகளால் அபராதமும் விதிக்கப்பட்டது. என்னே ஆச்சரியம்!

"சட்டம் பிரதமருக்கும், சாமானியனுக்கும் சமமானது" என்று சொல்லும் 'கிரண்'பேடி, பொலிஸ் படையின் பெருமைமிக்க வீரப்பதக்கத்தையும், ஆசியாவின் மிகப்பெரிய விருதான "மாகசேசே" சமாதான விருதையும் பெற்றவர். சிறந்த டென்னிஸ் வீராங்கனையும் கூட.

## கொள்ளைக் கும்பலை கலக்கி அடித்த சோபா!

பீகாரில் ஹஸாரிபாக் மாவட்டத்தில் ஷோபா ஓஹாத்கர் என்ற பெண்ணின் பெயரைக் கேட்டாலே நிலக்கரிக் கொள்ளையர்களுக்குச் சிம்ம சொப்பனம்.

யார் இந்த ஷோபா என்கிறீர்களா? சமீபத்தில் அந்த மாவட்டத்தின் பொலிஸ் கண்காணிப்பாளராகப் பொறுப்பு ஏற்றிருப்பவர்தான் ஷோபா.

பிறந்தது மகாராஷ்டிர மாநிலம் என்றாலும் படித்தது, வளர்ந்தது எல்லாமே ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில்தான்.

பீகாரில் நிலக்கரிச் சுரங்கங்களில் வெட்டியெடுக்கப்படும் நிலக்கரியைச் கொள்ளையடிக்கும் கும்பல்தான் 'கோல் மாஃபியா'. நீண்ட காலமாக எவ்விதச் சிக்கலும் இல்லாமல் தொழில் நடத்தி வந்த இக்கும்பலைத் தனது அதிரடி நடவடிக்கை மூலம் ஒடுக்கி வருகிறார் ஷோபா. இதனால் இக் கும்பலைச் சேர்ந்தவர்கள் தங்கள் தொழிலை மாற்றிவிடலாமா என்று கூடச் சிந்தித்து வருகின்றனர்.

பதவிக்கு வந்த குறுகிய காலத்திலேயே சிறப்பாகவும், நேர்மையாகவும் செயல்பட்டுப் பொதுமக்களுக்குச் சட்டத்தின் மீது நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்தியுள்ளார்.

"ஹஸாரிபாக்கில் நான் எஸ்.பி.யாகப் பொறுப்பேற்றபோது 'கோல் மாஃபியா' கும்பல் பற்றியும், அவர்களுக்குப் பொலிஸ் அதிகாரிகளே உடந்தையாக இருக்கிறார்கள் என்ற தகவலையும் கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

உடனடியாக இதற்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணி, எனக்குக் கீழ் உள்ள அதிகாரிகளை அழைத்துப் பேச்சு நடத்தினேன். ஆனால் அவர்களோ எனக்கு ஒத்துழைக்கவில்லை. இருந்தும் நான் மனம் தளரவில்லை.



ஷோபா

எப்படியும் இந்தக் கும்பலை ஒடுக்க வேண்டும் என்ற உறுதியுடன் ஒரு திட்டத்தைத் தீட்டினேன்.

நிலக்கரிச் சுரங்கங்களைச் சுற்றி அதிரடிச் சோதனை நடத்தியபோது 70க்கும் மேலானவர்கள் பிடிபட்டனர். ரூ. 20 கோடி மதிப்புள்ள கடத்தல் நிலக்கரியும் மீட்கப்பட்டது. பிணையில் வெளிவர முயன்று தோற்ற கும்பல் வேறு வழியில்லாமல் சரணடைந்தது.

பொலிஸார் மீது பொதுமக்கள் தவறான அபிப்பிராயம் வைத்துள்ளனர். இந்த எண்ணத்தைப் போக்கி, பொலிஸ் மீது மக்களுக்கு நம்பிக்கையை ஊட்ட வேண்டும் என்பதற்காகவே இப்பணிக்கு வந்தேன்.

எனது மிகப்பெரிய சாதனை மக்களின் நம்பிக்கையைப் பெற்றதுதான். கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிந்தால் சமூக விரோதிகளைக் காட்டிக் கொடுக்க மக்கள் தயாராக இருக்கின்றனர் என்பதுதான் நான் கற்றுக்கொண்ட பாடம்" என்கிறார் ஷோபா.

இவரின் நேர்மையையும் செயல்திறனையும் கண்ட பொதுமக்கள் பலர் இவரை 'லேடி அமிதாப் பச்சன்' என்று அழைக்கத் தொடங்கியுள்ளனர். இன்னும் சிலர் 'பீகாரின் கிரண் பேடி' என்கின்றனர்.



சிம்ரன்

# ரொம்ப பிஸிங்க!

சிம்ரன் 'ஸ்டார்' படத்திற்காக 20 லகரம் அட்வான்ஸ் வாங்கியிருந்தார். இவருக்கு ஜோடியாக நடிக்கும் பிரசாந்த் கொடுத்த திகதிகளில் ஸ்டார் நைட் என வெளிநாடு சென்று விடுவதனால் தயாரிப்பாளரினால் குறித்த திகதியில் படப்பிடிப்பு நடத்த முடியவில்லை.சொன்னபடி பிரசாந்த் கால்ஷீட் தராததினால் சிம்ரனின் கால்ஷீட் வீணாகிப்போனது. தயாரிப்பாளருக்கு கொடுத்த திகதியில் சிம்ரன் எந்தப்படப்பிடிப்பிலும் கலந்து கொள்ளவில்லை.இப்போது பிரசாந்தின் கால்ஷீட் கிடைத்தாலும் சிம்ரன் பிஸியாகி விட்டார்('ஸ்டார்' படத்தில் சிம்ரனுக்குப்பதில் ஜோதிகா நடித்துக்கொண்டிருப்பது தெரிந்த செய்திதானே)



திவ்யா உன்னி

# மிஸிஸ் நாரதர்

'லூட்டி' யில் கொட்டமடித்து வரும் சத்யராஜ் கூடவே 'மிஸ்டர் நாரதர்' படத்திலும் நடித்து வருகின்றார்.இதில் சத்யராஜுடன் ஜோடி சேர்பவர் திவ்யா உன்னி (அப்போ மிஸிஸ் நாரதர் என்று சொல்லுங்க)

# ஓ....பெண்ணே தமிழ்ப் பெண்ணே செங்கடல் முத்து உன் கண்ணே

## அபிராமியின் 'வானவில்' அனுபவங்கள்

மலையாளப்படவுலகம் தந்திருக்கும் மற்றுமோர் நட்சத்திரம் அபிராமி. நல்ல உயரம், வசீகரமான தோற்றம், சுட்டித் தனமான பேச்சு என்று அசத்தும் இந்த அபிராமி தமிழ் ரசிகர்களுக்கு முகம் காட்டியிருப்பது தீபாவளிக்கு ரிலீஸான 'வானவில்'லில். அவரைச்சந்தித்தபோது மலையாளத்தில் பறைவார் (பேசுவார்) என்று பார்த்தால், தமிழில் சரளமாக பேசி நம்மை வியக்க வைக்கின்றார்.

**தொடர்ந்து அவரது வானவில் அனுபவங்களைக்கேட்போமா!**

''நான் திருவனந்தபுரத்துக்காரி என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

திருவனந்தபுரத்தில் பிறந்து, படித்து வளர்ந்தாலும் எங்களுக்குப் பூர்வீகம் தமிழ்நாடுதான். தமிழ்நாட்டைச் சேர்ந்த பாரம்பரியமான பிராமணக் குடும்பம். கிரைஸ்ட் நகர் மார்வாயின் கல்லூரியில் பிளஸ்டூ படித்து முடித்துள்ளேன்'' என்ற அபிராமியிடம், முதலில் பொதுவான கேள்வியுடன் ஆரம்பித்தோம்.

**கே: அபிராமி நீங்கள் நடிக்க வருவீர்கள் என்று எதிர்பார்த்தீர்களா?**

ப:இல்லை, படிக்கும்போது ஆரம்பத்தில் எனக்கு நடிப்பில் சிறிதும் ஆர்வமில்லை. ஆனால் என்னோடு படிக்கும் மாணவ, மாணவிகள் நாடகங்களிலும் கலைநிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு பாராட்டு,பரிசு என்று பெறும் போது என்னுள்ளும் ஒரு உந்துதல் ஏற்பட்டது.அவர்களைப் போன்று நாமும் ஏன் நிகழ்ச்சிகளில் பங்குபற்றக்கூடாது என்று என் மனதிலும் எண்ணத் தொடங்கினேன். எண்ணத்தின் பலனாகப்பாடசாலை நடன நிகழ்ச்சிகளிலும் நாடகங்களிலும் கலந்து கொண்டேன்.பல பரிசுகளையும் பெற்றுக் கொண்டேன்.

எட்டாவது படித்துக்கொண்டிருக்கும்போது தான் பிரபல மலையாள இயக்குனர் அடூர் கோபால கிருஷ்ணன் அவர்கள் இயக்கிய 'கதாபுருஷன்' படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

ஏகப்பட்ட விருதுகளை வாங்கிக் குவித்த 'கதாபுருஷன்' மூலம் எனக்குப் பாராட்டுக்கள் கிடைத்தது.

**கே: தொலைக்காட்சி மூலம் ரசிகர்களுக்கு அறிமுகமானவர் என்று கேள்விப் பட்டேன்.அப்படியானால்...!**

ப:'கதாபுருஷன்'படத்தைத் தொடர்ந்து ஆசியா நெட் தொலைக்காட்சி நிறுவனம் தயாரித்த சில மலையாள சீரியல்களில் நடித்தேன். அப்போதுதான் தொலைக் காட்சியில் 'பெப்ஸி டாப்டென்' நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆறு வாரங்கள் தொடர்ந்து செய்தேன்.

**கே: ஆக... கமெராவுக்கு முன்னால் நிற்பது அபிராமிக்குப்புதிதல்ல அல்லவா?**

ப: ஆமா. நான் தொகுத்து வழங்கிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப்பார்த்த சில தயாரிப்பாளர்கள் சினிமாவில் நடிப்பதற்கு அழைத்தார்கள். அப்படி வந்ததுதான் மலையாள இயக்குனர் ஜோஷி இயக்கிய 'பத்ரம்' பட வாய்ப்பு.இப்படத்தின் மூலம் சுரேஷ் கோபியின் ஜோடியாக நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

1998 இல் வெளியான இது சூப்பர் ஹிட்டாகவே எனக்கும் நல்ல பெயரும் புகழும் கிடைத்தது.

தொடர்ந்து மலையாளப் படவாய்ப்புக்கள் வந்தன.ராஜசேகரனின்இயக்கத்தில் ஜெயராம் ஜோடியாக'ஞங்கள் சந்துஷ்ட்ட ராணு'என்ற படத்தில் நடித்தேன்.இப் படத்தில் எனக்கு வெயிட்டான கரெக்டர். படம் 100 நாட்கள் ஓடியது.

பிஜூமோகனின் இயக்கத்தில் மீண்டும் ஜெயராமின் ஜோடியாக 'மில்லேனியம் ஸ்டார்' படத்தில் நடித்தேன். இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்ட இந்தப்படம் 2000ம் ஆண்டு பிறந்த அன்று இரவு 12 மணிக்கு அதன் முதல் காட்சி திரையிடப்பட்டது.

**கே: இந்த 'மில்லேனியம் ஸ்டார்ஸ்' படம் தான் 'சிவசங்கர்' என்று தமிழில் வெளிவருகின்றதா?**

ப:அப்படித்தான் நினைக்கின்றேன்.ஆனாலும் சரியாகச்சொல்லத் தெரியவில்லை.

**கே: சரி. தமிழில் நீங்கள் அறிமுகமாகியுள்ள 'வானவில்' படம் தீபாவளி ரிலீஸாக வெளிவந்து தற்போது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்த அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்களேன்.**

ப:'வானவில்'படத்தில் நடிக்கும் வாய்ப்புக்கிடைத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத்தரும் விஷயம். காரணம் என்னவென்றால் பல வெற்றிப்படங்களை வழங்கிய இயக்குனர் மனோஜ்குமார் அவர்களின் படம் என்பதோடு தமிழ்த்திரையுலகில் முன்னணி கதாநாயகர்களுள் ஒருவரான அர்ஜுனுக்கு ஜோடியாக நடிக்கிறேன் என்பது இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

எனக்கு தமிழ் நன்றாகப்பேச முடிந்ததால் மொழிப்பிரச்சினை இருக்கவில்லை.அர்ஜுன் சாரும் பிரகாஷ்ராஜ் சாரும் என் நடிப்பைப் பாராட்டியதோடு ஊக்கம் கொடுத்தார்கள்.படத்தில் எனக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரி வேடம். முதன் முதலில் இப்படி ஒரு பொறுப்பு வாய்ந்த கரெக்டரில் நடிக்கக் கிடைத்தது எனது அதிர்ஷ்டமே. படம் வெளியாகி எனக்கு நல்ல பெயரையும் பெற்றுத்தந்திருக்கின்றது. மற்றவர்கள் பாராட்டும்போது சந்தோஷமாக இருக்கிறது.ரசிகர்கள் நான் ரொம்ப இன்வால்வ்மெண்டோடு நடித்திருப்பதாகக் கூறுகின்றார்கள்.

**கே: எல்லாம் சரி அபிராமி மலையாளத்தில் ஹோம்லியான கரெக்டர்களில் அசத்தி விட்டீர்கள்.தமிழில் நிலவும் கிளாமர் போட்டியை எப்படிச் சமாளிக்கப்போகின்றீர்கள்?**

ப: அது கதாபாத்திரத்தின் தன்மையைப் பொறுத்தது.(எல்லோரும் இதையே தான் சொன்னார்கள் நீங்களுமா) நான் ஏற்கும் கரெக்டருக்கு கிளாமர் தேவையென்றால் அப்படி நடிக்க நான் தயார். ஆனால் நிச்சயமாக மற்றவர்கள் முகம் சுளிக்கும் விதத்தில் அல்ல.தமிழக ரசிகர்கள் திறமையானவர்களை வரவேற்கத் தயங்காதவர்கள். திரையுலகினர், ரசிகர்கள், உங்களைப்போன்ற பத்திரிகையாளர்கள் அனைவரது ஆதரவுடனும் தமிழில் ஒரு ரவுண்ட் வருவேன் என்பது என் நம்பிக்கை.

ஷாம்



# திரை மறைவில்...



*'காவிளமா' (ரிவேர்ஸுங்கோ) நடிகையின் கன்னம் ஒட்டி தாடைதான் தூக்கலாகத் தெரிகின்றது என்று யாரோ சொல்லி விட அம்மணி தலைகீழாக நிற்கிறாராம். சிரசாசனம் செய்தால் கன்னம் செழிப்பாகும் என்று நலன் விரும்பி சொன்னதை நம்பி...!

*மடிப்பு அம்சா என்று பெயரெடுத்த கவர்ச்சி நடிகை சினிமா வாய்ப்பு இல்லாததால் வெளிநாடுகளுக்குச் சென்று கலைச்சேவை செய்து வந்தார். இப்போது அதையும் விட்டு விட்டு உள்ளூரிலேயே காதலை முழுநேரபணியாக்கிக் கொண்டிருக்கிறாராம். நாளுக்கொருவரை காதலிப்பதில் அம்மணிக்கு 'காதல் நாயகி' பட்டம் கொடுக்கலாமாம். (அப்படி ஒரு பட்டம் இருக்காங்க.) காதல் ராசியோ என்னமோ அம்மணி பாலுமகேந்திராவின் புதிய படமான 'என் இனிய பொன் நிலாவே'யில் ஒப்பந்தமாகியிருக்கின்றார்)



பிரசாந்த்-ரிங்கி
படம்-'மஜ்னு'

# "மஜ்னு"வில் வாரிசு

'என்ன விலை அழகே','ஸ்டார்' படங்களில் முறையே அமீஷா பட்டேல்,ஜோதிகாவுடன் நடித்து வரும் பிரசாந்துடன் அடுத்து ஜோடி சேரப்போகின்றவர் பிரபல ஹிந்தி (முன்னாள்) நடிகை டிம்பிள் கபாடியாவின் மூன்றாவது மகள் ரிங்கி. படம் —'மஜ்னு' இதன் சில காட்சிகளை பூட்டான் மாநிலத்தில் எடுக்கத்திட்டமிட்டிருக்கின்றனராம்.


# தாடி சூர்யா

வித்தியாசமான கதைகளுக்காக காத்திருந்து நிதானமாக படங்களைத் தேர்வு செய்து கொண்டிருக்கின்றாராம் சூர்யா. 'சேது' வைத் தந்த பாலா இயக்கும் 'நந்தா'வில் கெட்டப்பை மாற்றி நடிக்கப்போகின்றார். இதற்கென தாடி வளர்த்துக் கொண்டிருக்கின்றார். போதுமான அளவு தாடி வளர்வதற்காகவே படப்பிடிப்பையும் தாமதப்படுத்தி யிருக்கின்றார்களாம்.



சூர்யா

தனது படங்களின் வெற்றிக்கு தான் மட்டுமல்ல படத்தின் இயக்குனர் மற்றும் தன்னோடு இணைந்து நடித்த நாயகிகளும் காரணம் என்று கூறும் விஜய் தன்னுடன் நடித்த நாயகியரைப்பற்றிக்கூறுவதைக் கேளுங்களேன்.



# என் நாயகியருள் மனதில் நின்றவர்கள்

**தேவயானி**

வெரி வெரி லக்கி ஆர்ட்டிஸ்ட் இவர். அறிமுகமாகி ஆறு வருடங்கள் ஆகின்றன. குடும்பப் பாங்கான வேடங்களில் நடித்து அசத்தி வருகின்றார்.தமிழ்ப்படங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றார்.சமீபத்திய



'பாரதி' அதற்கு எடுத்துக்காட்டு. நான் ஒரு படம் இயக்கினால் தேவயானிக்கு ஒரு கரெக்டர் கொடுத்து அவரின் நடிப்புத்திறமை முழுவதையும் வெளிக்காட்டுவேன்.

**சிம்ரன்**

இவர் தமிழில் அறிமுகமானதே என்னுடைய படத்தில் தான் 'ஒன்ஸ்மோர்'. அந்தப்படத்தில் எனக்கு இன்னுமோர் மறக்க முடியாத அனுபவமும் உண்டு. நடிகர் திலகம் சிவாஜி ஸார் கூட நடித்தேன்.

சிம்ரன் நல்ல நடிகை மெலிதாக இருப்பார். ஒரு முறை நான் சதை போட்டால் நன்றாக இருக்கும் என்று சொன்னபோது. பதறிப்போய் விட்டார். ஆனால் 'ஸ்லிம் தான்' அவருக்கே பிளஸ்பொயிண்ட். தமிழ் தெரியாமல் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவார்.

**ஷாலினி**

வெரிக்ளெவர் ஆர்ட்டிஸ்ட். இரு படம் தான் என்னுடன் நடித்தார். குழந்தை நட்சத்திரமாகப் புகழ்பெற்று பின் கதாநாயகியாகவும் நடித்து அதே புகழுடன் திருமணம் செய்து கொண்டது இனிய திருப்பம். திரையில் தொடர்ந்து நடிக்கா விட்டாலும் நல்ல தோழியான இவரது மணவாழ்க்கை சிறக்கும் என்பது நிச்சயம்.



**ஜோதிகா**

கலக்கலப்பான நடிகை. இவர் இருந்தால் ஷுட்டிங் ஸ்பொட்டே ஜாலியாக இருக்கும். 'குஷி' படத்தில் என்னுடன் நடித்திருக்கின்றார். இந்த சின்னப் பெண்ணின் வளர்ச்சி பிரமிக்கத்தக்கது. தொழிலில் அவருக்கிருக்கும் இன்வால்வ் மெண்ட்தான் அவரது வெற்றிக்குக்காரணம்.

**ரம்பா**


அழகானவர். படப்பிடிப்பின்போது அதிகம் அலட்டிக்கொள்ளாமல் அமைதியாகக் காணப்படுவார். நன்றாக டான்ஸ் ஆடக் கூடியவர். என்னைவிட சீனியர் ஆர்ட்டிஸ்ட் இவர். ஆனாலும் பந்தா இல்லாமல் பழகுவார். சமீபத்தில் ஹைதராபாத் ஏர்போர்ட்டில் இவரைச்சந்தித்தேன். சற்றுக் குண்டாகியிருப்பது போல் தெரிகிறது. (ரம்பா மேடம் கேட்கின்றதா?)





அர்ஜுன்- அபிராமி
படம்-'வானவில்'

டைரக்டர் மணிரத்தினம் அறிமுகப்படுத்திய மாதவனுக்கு காரில் ஃபாஸ்ட் டிரைவிங் என்றால் ரொம்பப்பிடிக்குமாம். சமீபத்தில் அவர் தன் மனைவி சரிதாவை அழைத்துக்கொண்டு மகாபலிபுரம் கடற்கரைச்சாலையில் 100 கி.மீட்டர் வேகத்தில் செல்ல முன் பக்கத்தில் அமர்ந்திருந்த மனைவி கத்தஆரம்பித்துவிட்டாராம். பின்னாடி வாகனங்களில் வந்தவர்கள் ஏதோ ஆபத்து என்று நினைத்து மாதவனின் காரை ஓவர் டேக் செய்து அவரின் காரை நிறுத்தி விசாரித்தார்களாம். தான் காரை வேகமாக ஓட்டுவதையும், அதனால் மனைவி பயந்ததையும் அவர்களிடம் மாதவன் சொல்லவே..சே இவ்வளவுதானா என்று சுவாரஸ்யமில்லாமல் போனார்களாம்.



மாதவன்-ரீமா சென்
படம்-சித்திரம்

# இவ்வளவுதானா?

# முகவரி தொலைந்ததாலோ...
# தொலைபேசிகள் அலறின!

ஜீவகவி என அழைக்கப்படும் கே.அமிர்தலிங்கம் தொகுத்த "முகவரி தொலைந்த முகங்கள்" கவிதை நூலின் வெளியீட்டு விழா சமீபத்தில் கொழும்பு சுகததாஸ ஸ்போர்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

உரை, கவிதை அரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் விழாவின் சிறப்பு அம்சங்களாக அமைந்தன.

விழாவில் அரசியல்வாதிகள், நகரசபை உறுப்பினர்கள், கலைஞர்கள் முதலானோர் கூடியிருந்தனர். பன்னீர் தெளித்த மாதிரி மழை, தூற்றலோடு ஆரம்பித்து சிறிது நேரத்தில் கொட்டத் தொடங்கிவிட்டது. அதனால் போலும் கூட்டம்

## கலையமுதம்

அதிகமாகக் காணப்படவில்லை. இளைஞர் சேவைகள் மன்றத் தமிழ்ப் பிரிவு அதிகாரி த. ஈஸ்வரராஜா தமது உரையின் போது இதனைக் கிண்டலாகக் கூறினார்.

"முகவரி தொலைந்த முகங்கள்" நூலின் விழா அழைப்பினை முகவரி தொலைந்த முகங்களுக்கே ஜீவகவி அனுப்பி வைத்துள்ளாரோ, என்னவோ, அழைப்பு அனுப்பப்பட்டவர்களில் பலர் கூட்டத்திற்கு சமுகமளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

மேல் மாகாண சபை உறுப்பினரான மனோ கணேசன் ஜீவகவியின் முயற்சிகளைப் பாராட்டிப் பேசினார். அரசியல்வாதிகளான தாங்களும் அவ்வப்போது தவறுகள் இழைப்பது உண்மை. அந்தத் தவறுகளை தரமான விமர்சனங்கள் மூலம் சுட்டிக் காட்டுவது விமர்சகர்களின் பொறுப்பு என்று அவர் கூறினார்.

கவிஞர்கள் பலரின் கவிதைகளை ஒரு நூலாகத் தொகுத்து வெளியிடுவதற்கு ஜீவகவி பெரிதும் சிரமப்பட்டதாகப் பட்டிமன்றப் பேச்சாளர் கம்பளைதாசன் குறிப்பிட்டார். ஜீவகவியின் முயற்சி பாராட்டுக்குரியது. இத்தகைய முயற்சிகள் இலைமறை காயாக உள்ள பல இளங் கவிஞர்களை வெளிக்கொணர்வதற்கு பெரிதும் உதவும் என்றும் அவர் சொன்னார்.

இவ்வாறான கருத்துக்களை மற்றும் பலரும் வெளியிட்டனர்.

விழா எளிமையாக நடைபெற்றது, சிறப்பாக இருந்தது. ஆயினும் ஒன்று, அடிக்கடி செலூலர் தொலைபேசிகள் அலறிக் கூட்டத்திற்கு வந்தவர்களின் பொறுமையைச் சோதித்தன.எரிச்சல் ஊட்டின. கூட்டங்களுக்கு செலூலர் தொலைபேசிகளுடன் வருபவர்கள் கூட்டம் முடியும் வரை அவற்றை இயங்காமல் நிறுத்தி வைக்கலாம் அல்லவா! ஜீவகவியின் முயற்சிகள் மென்மேலும் வளர எமது வாழ்த்துக்கள்.

– ஜெ.பிரேம்குமார்.



# நடிகர் பார்த்திபனின் கிறுக்கல் கவிதை நூல்

நடிகர் சங்கத்திலிருந்து வெளியே வந்த நடிகர், இயக்குனர், தயாரிப்பாளர் ரா.பார்த்திபன் (அட நம்ம பார்த்திபன்தான்) கையில் சின்னஞ்சிறிய புத்தகம். அட்டையில் அவர் படம். 166 பக்கம். புத்தக அளவு 4.5செ.மீ. அகலம், 5.5செ.மீ.உயரம். ரொம்பவும் சிறிசு.

அவர் எழுதிய 'கிறுக்கல்கள்' கவிதைப் புத்தகத்தின் அழைப்பிதழைத்தான் இப்படிப் புதுமையாக அமைத்திருந்தார்.

கவிதா விலாசமிக்க<br>
உங்களை<br>
இதயம் கூப்பி<br>
வணங்குகிறேன்<br>
நெல்லின் மேற்பரப்பில்<br>
பிஞ்சு விரல் கீறும்<br>
முதல் எழுத்து<br>
கிறுக்கல் போல...<br>
நானும் கூட எழுதி<br>
ஏதோ<br>
புத்தகமாய்...<br>
அட்சதை தூவும்<br>
உங்கள்<br>
பார்வைப்<br>
பரவசத்தில்...

இப்படி பக்கத்துக்குப் பக்கம் கவிதையாய் "கலைஞானத் தமிழறிஞர் தன் கலைக்கரங்களால்" என்று முதல்வர் கலைஞரின் கரங்களை மட்டும் படம்போட்டு 'வெளியிடுகிறார்' என்பதை சற்று முட்டை எழுத்துக்களில் பிரிண்ட் செய்திருந்தார்.

பார்த்திபன் என்றால் புதுமை என்ற பொருளையும் அகராதியில் சேர்த்துக் கொள்ளலாம்!

## கவிதைப் பூங்கா

# விதவை அல்ல அவளும் பாவைதான்

**ரதி சிவனேசநாதன்**

மூலைக்குள் முடங்கிக் கொண்டு...<br>
சேலைத் தலைப்பால் கண்ணீரின்<br>
கறைகளைத் துடைத்துக் கொள்கிறாள்!<br>
அவளது-<br>
ஆசைகளும் ஏக்கங்களும்<br>
மனக் கடலில் அலையாக...<br>
ஆர்ப்பரித்தாலும்...<br>
வசை பாடும் சமூகத்திற்காய்<br>
அவையெல்லாம் அமிழ்ந்து<br>
போவதுண்டு!<br>
முள் செருகிய வார்த்தைகளின்<br>
இம்சைகள் தாங்காமல்...<br>
அவளது இதயம்<br>
ரணங்களின் இருப்பிடமானது!<br>
கண்ணீரில் சோகத்தை<br>
கரைத்துக் கொண்டு...<br>
ஊமையாகிப் போனாள்!<br>
விதி எனும் பெயரில் சதியால்<br>
பெண்ணிற்குத்தான்...<br>
எத்தனை எத்தனை கொடுமைகள்

***

முன்பு-<br>
வஞ்சியவளும் யௌவன பருவத்தின்<br>
வனப்பினையே மிஞ்சிய<br>
எழில் தேவதை!<br>
புது உறவாய் மொட்டுவிட்ட<br>
சொந்தம்<br>
மலரும் முன்பே உதிர்ந்து போன<br>
அபாக்கியம்!<br>
உதயத்திற்காய் உவப்புடன்<br>
கனவுகளில் மிதந்த விழிகள்<br>
உதயமின்றியே அஸ்தமித்து<br>
போக... கண்ணீரில் நனைந்து<br>
கனவுகள் கலைந்து போன<br>
வேதனை தீரும் முன்னே...<br>
சமூகம் பாவை அவளுக்கு<br>
விதவை எனும் பட்டத்தை<br>
இலவசமாய் வழங்கியது!

***

பஞ்ச வர்ணங்களில்<br>
பட்டாடையும்<br>
அணிகலனாலும்...<br>
மிளிர்ந்த எழில் தேகம்<br>
வெள்ளைப் புடவைக்குள்<br>
முடங்கிக் கொள்வதுதான்<br>
துயரத்தின் விலாசமோ?<br>
பட்டாம் பூச்சியாய்<br>
வட்டமிட்ட மங்கை<br>
அவளின் சிறகுகள்<br>
முறிக்கப்பட்டு<br>
ஆயுள் கைதியாக்குவதுதான்<br>
சோகத்தின் முற்றுகையா?<br>
மூன்றாம் பிறை நுதலில்<br>
விற்புருவ மத்தியில்...<br>
பளிச்சிடும் திலகமது இன்றி<br>
நிலவில்லா ஆகாயமாய்<br>
வெறுமையை<br>
போர்த்திக்கொள்வதுதான்<br>
வேதனையின் வெளிப்பாடா?<br>
கார் குழல் மீதினிலே...<br>
வாசம் செய்த மல்லிகைப்<br>
பூச்சரம் மரங்களோடு<br>
முத்தமிட்டு வேதனையில்<br>
உதிர்வதுதான்....<br>
கவலையின் கண்ணீரா?<br>
புன் முறுவல் சிந்திடும்<br>
உதடுகளுக்குள் உறவாடத்<br>
தயங்கி நிற்கும் ஏக்கங்கள்<br>
பிறருக்கு புரியா மொழியில்<br>
புதைந்து போவதுதான்<br>
காலத்தின் கட்டாயமா?<br>
கழுத்தில் ஏறிய தாலியது<br>
கணவன் இறப்பால்...<br>
கழற்றப்பட்டால்...<br>
பெண்மையின் மென்மைதான்<br>
வன்மையாகுமா?

மலர் போலே<br>
நெகிழ்ந்த மனம்<br>
கல்லாக திரிந்து<br>
விடுமா?!<br>
பொட்டோடும்<br>
பூவோடும்<br>
நகை நட்டோடும்<br>
நடை<br>
பயின்ற பைங்கிளி!<br>
சொட்டும் கண்ணீரில்<br>
கவிபாடி<br>
கலங்கி நிற்பது யார்<br>
செய்த சதி?

***

பெண்களே...<br>
பெண்களிற்கு எதிரி!<br>
வார்த்தைகளால்<br>
சீண்டிவம்பளக்கும்<br>
பெண்கள்!<br>
விளக்கெண்ணெய்<br>
விட்டு குற்றம்<br>
தேடும் கண்கள்!<br>
நாடக மேடை<br>
தன்னில் நாளைக்கு<br>
உன் பாத்திரம்<br>
அதுவானால்...<br>
உன் நிலைதான்<br>
என்ன பெண்ணே?<br>
பாவையின்<br>
உணர்வுகள்<br>
வெள்ளைச்<br>
சேலைக்குள்<br>
முடங்கி<br>
விடக்கூடாது!<br>
பூவாக உதிர்ந்து<br>
விடக்கூடாது!<br>
பொட்டாகக் கரைந்து<br>
விடக்கூடாது!<br>
கொலுசொலியாய்<br>
அவள்<br>
சப்தித்து இன்னிசை மிழற்ற<br>
வேண்டும்!<br>
மனதளவில் சோகம்<br>
இருந்தாலே போதும்<br>
பலருக்கு தெரிய<br>
வேஷமிடலே<br>
பாவம்!<br>
சகோதரிகளே...<br>
வீடாளும் பெண்மை<br>
நாடாளும் காலமிது!<br>
பெண்களின் கொடுமையில்<br>
ஒன்று விதவை கோலமிது!<br>
பாவைதான் அவளும்<br>
புரிந்து நடப்போம்!<br>
அவளது<br>
கண்ணீரின் ஈரத்தை<br>
உலரச் செய்து...<br>
புன்னகைப் பூக்களை<br>
மலரச் செய்வோம்!<br>
அவளது சோகத்தில்<br>
பங்கெடுக்கா விடினும்<br>
இன்பத்தை சிதைக்காதீர்கள்!<br>
பெண்களே...<br>
21ஆம் நூற்றாண்டு இதழ்<br>
விரித்த<br>
நல் வேளையிதில் மங்கையின்<br>
சோகங்களோ பல...<br>
அவற்றில் சிலதை களைந்திட<br>
சபதமெடுப்போம்!<br>
பிரிவுத் துயரமதை பறை<br>
சாற்றும் வேஷமதை<br>
விரும்பாத...<br>
பாவையரையும் மதித்து<br>
நடப்போம்!<br>
"விதவை" அல்ல அவளும்<br>
"பாவை"தான்<br>
சகோதரிகளே!

***

# தேவி நீ வந்துவிடு!

**எஸ்.ஆர். விஜயரட்ணம்**<br>
நோர்வூட்

நாம் மனித நாகரிக ஊருக்குச்<br>
செல்லவிருந்தபோது<br>
சமாதான பஸ்ஸைத் தவற<br>
விட்டுவிட்டோம்<br>
இப்பொழுது நாம் இருளடைந்த<br>
அறியாமை ஊரில் இருக்கின்றோம்<br>
பொழுது புலர்ந்து எம்மைக் கூட்டிச்<br>
செல்ல<br>
நீ வருவதற்குள்<br>
மனிதாபிமானமற்ற அறியாமைத்<br>
திருடர்கள்<br>
எம்மை அழிக்க வந்துவிடுவார்கள்<br>
எனவே நீ அன்புத் தீபமேந்தி<br>
அறிவுப் பாதை காட்ட ஓடி வந்து<br>
விடு<br>
இல்லையென்றால் ஒற்றுமையென்ற<br>
உயரிய சொல்லைக் காக்க<br>
நம்மில் ஒருவர் கூட இல்லாமல்<br>
போவார்கள்<br>
அதனால் அகராதியிலும் அச்சொல்<br>
இல்லாமற் போகும்<br>
நீ ஓடி வந்துவிடு சமாதானத்<br>
தேவியே<br>
விரைவாக.

மலையகக் கண்ணோட்டம்

மலையக மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் பேசித்தீர்வு காண்பதற்காக மலையகத் தலைவர்களின் ஒன்று கூடல் விரைவில் நடக்கும். அதற்கான ஏற்பாட்டில் இ.தொ.கா. கவனம் செலுத்தி வருகிறது.

கால்நடை அபிவிருத்தி பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரும் இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஆறுமுகம் தொண்டமான் ''சுடர்ஒளி'' க்கு இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

''சுடர்ஒளி''க்கு அமைச்சர் தொண்டமான் விசேஷ பேட்டி அளித்தார். கேட்கப்பட்ட கேள்விகளும் அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:-

**கே :மலையக மக்களுக்காக என்ன புதிய திட்டங்கள் வகுத்துள்ளீர்கள்?**

ப :குடியிருப்பு, சுகாதாரம், கல்வி, அபிவிருத்தி, குடிசைக் கைத்தொழில் வாய்ப்புகளுக்கான திட்டங்களைத் தயாரித்துள்ளேன். அவை கூடிய விரைவில் செயற்படுத்தப்படும்.

**கே :முன்னாள் பிரதி அமைச்சர் சந்திரசேகரன் வீடமைக்கக் காணிகள் வழங்கப்பட வேண்டுமென்றார். அமைச்சர் தகவலின் பேரிலேயே இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பலரும் கூறுகின்றனர். குறிப்பாக மலையக மக்கள் முன்னணி நேரடியாகவே உங்கள் மேல் குற்றம் சுமத்தியுள்ளது. இது பல பத்திரிகைகளிலும் பிரசுரமாகியுள்ளது. நீங்கள் எந்த விதமான மறுப்பும் தெரிவிக்கவில்லையே ஏன் மௌனம்?**

ப :நானும் பல பத்திரிகையாளர்களை அழைத்து மறுப்பு விட்டிருக்கலாம். அது வேலையில்லாதவர்களுக்குச் சரி. எனக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் தேடித் தர வேண்டும். நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும். அறிக்கை விட்டுக் காலத்தை வீணடிக்காமல் நான் செயலில் இறங்கியுள்ளேன். முதற்கட்டமாக நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது.

**கே :நீங்களும் அமைச்சர் திஸாநாயக்காவும் தனிப்பட்ட முறையில் பணமாக வழங்குவதை விட ஒரு பொதுத்திட்டத்தின் கீழ் பாதிப்படைந்த அமைச்சர் அலவி மௌலானாவும் அமைச்சரவையில் இருக்கிறீர்கள் அடுத்த பட்ஜெட்டிலாவது வேலை நிறுத்தம் செய்யாமல் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு பெற்றுத் தருவீர்களா?**

ப :முதலில் நாணய மதிப்பு குறைக்கப்பட்ட போது ஏனைய துறையினருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு 400/- ரூபாவும் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்க ஆவன செய்து வருகிறோம்.

**கே :அப்படியானால் சம்பள உயர்வு?**

ப :நான் ஏற்கனவே கூறியது போல் எல்லோரும் ஒன்றுபட்டால் எல்லா வெற்றிகளையும் பெறலாம்.

**கே :எதிர்த் தரப்பில் இருக்கும் ரணிலும், சந்திரிகாவும் கூட கூடிப் பேசுகின்றனர். இப்போது பிரபாகரனும் சந்திரிகாவும் பேசத் தயாராகிவிட்டனர். நீங்கள் ஏன் விட்டுக்கொடுப்புடன் அனைவரையும் அழைத்துப் பேசக்கூடாது?**

ப :பிரிந்தவர்கள் எங்கும் போய்விடவில்லை. ஒரு வீட்டிற்குள் அந்த வீட்டின் பல ஈட்டை வழங்க அமைச்சர் பேரியல் அஷ்ரப் உத்தரவிட்டுள்ளார். ஆனால் கொட்டகலையில் இறந்தவருக்கு நஷ்ட ஈடு ஏதும் அறிவிக்கப்படவில்லையே ஏன்?

ப :இது தொடர்பாக அமைச்சருடனும் ஜனாதிபதியுடனும் பேசிக் கொட்டகலையில் இறந்தவரின் குடும்பத்துக்கும் நஷ்ட ஈடு பெற்றுக் கொடுக்க ஆவன செய்வோம்.

**கே :இப்பொழுது கொழும்பில் கண்ட கண்ட இடங்களில் மலையக இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்படுகின்றனர். வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்படும் தோட்டப்புற சிறுவர் சிறுமியரும் பலவாறான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவர்கள் தொடர்பாக தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை என்ன?**

ப :இது ஒரு நல்ல கேள்விதான். பெற்ற தாய் தகப்பனே பிள்ளைகளை வேலைக்குக் கொண்டு வந்து சேர்க்கின்றனர். பிள்ளைகள் என்ன ஆனார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. இதற்கு முற்றுப் புள்ளி வைக்க நல்ல திட்டமொன்றை

# மலையகத் தலைவர்கள் விரைவில் ஒன்று கூடல்

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறுகிறார்

தொண்டமான் லயன் காம்பராவும் சுற்றியுள்ள இடமும் உரிமையாக்கப்பட வேண்டுமென்றார். ஆனால் இவை இரண்டுமே எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை. நீங்கள் என்ன புதிய திட்டத்தை வகுத்துள்ளீர்கள்?

ப : ஒவ்வொரு தொழிலாளிக்கும் சொந்தமாக வீடு அமைத்துக் கொடுப்பதே எனது புதிய திட்டம். இதற்கான பணத்தைப் பெறுவதற்கு எனது ஆலோசனையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளேன். இது எனது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**கே :முன்னைய அமைச்சரவையில் பெருந்தோட்ட வீடமைப்புக்கென தனியான அமைச்சு இருந்தது. இம்முறை அது இல்லை. எப்படி வீடமைப்புக்கு நிதி ஒதுக்கப் போகிறீர்கள்?**

ப :தோட்ட வீடமைப்பு அமைச்சு என்று பெயர் இடப்படவில்லை. ஆனால் தோட்ட உட் கட்டமைப்பு என்ற பெயரில் வீடமைப்பும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

**கே :மலையகத்தில் இடம் பெற்ற அசம்பாவிதங்களுக்குப் பின்னணியில் நீங்களே இருந்ததாகக் கூறப்படுகிறது. உங்களுடைய கட்டடங்களை அமைத்துக் கொடுத்தால் இன்னும் நன்றாக இருக்கும் அல்லவா?**

ப :இருக்கலாம், ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் விருப்பத்திற்கமையவே பணமாக வழங்கத்தீர்மானிக்கப்பட்டது.

**கே :காங்கிரஸில் இருந்து வெளியேறிய 5 பேரும் புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ளனர். ஆனால் தொடர்ந்து அவர்கள் தாம் இ.தொ.கா. உப தலைவர்கள் என்றே சொல்லி வருகின்றனர். இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?**

ப : நான் இவ்விடயத்தில் அக்கறை காட்டவில்லை. இவர்களும் ஏன் செல்லச்சாமியும்கூட நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். தீர்ப்பு வந்ததும் காங்கிரஸின் பொதுச்சபையும், நிர்வாக சபையும் கூடி இது பற்றித் தீர்மானிக்கும்.


ஆறுமுகம் தொண்டமான்

**கே : நீங்களும் தொழில்** அறைகளில் இருக்கின்றனர். விசேஷ நிகழ்வு, விருந்துச் சாப்பாடு நடக்கும் போது ஓரிடத்தில் கூடிவிடுவார்கள்.

**கே :அந்த விருந்தை எப்போது போடப் போகிறீர்கள்?**

ப :கூடிய விரைவில்.

**கே :தலைவர்கள் ஒன்று கூடாவிட்டால் அவர்களைத் தூக்கியெறிந்து விட்டு மலையக மக்கள் ஓரணியில் திரளும் சூழ்நிலை வந்து விட்டது. இந்த சந்தர்ப்பத்தை ஏன் நீங்கள் பயன்படுத்தக்கூடாது**

ப : நீங்கள் கூறுவதும் சரிதான் அவசரப்படாதீர்கள், கூடிய விரைவில் அந்த நல்ல செய்தியை அறிவிப்பேன்.

**கே : பிந்துனுவெவ சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த 20 பேர் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 7 பேர் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபா நஷ்ட** வகுத்துள்ளேன்.

தோட்டப்புறங்களிலிருந்து கொழும்பிற்குத் தொழில் நிமித்தம் வருபவர்கள் எல்லோரும் இ.தொ.கா தலைமை அலுவலகத்தில் வந்து தமது பெயர், பிறப்பிடம், பெற்றோர் விவரம், தொழில் செய்யும் இடம் போன்றவற்றைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாகவும் இருக்கலாம். சந்தா செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. இதை எமது தோட்டப்புற மக்களின் நலன் கருதி ஒரு சேவையாகவே கருதுகிறேன்.

இதற்கென இ.தொ.கா தலைமை அலுவலகத்தில் தனியான பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும். இதன் மூலம் அனாவசிய கைதுகளையும் ஏனைய பிரச்சினைகளையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

மலையகத்தில் அமைக்கப்பட்டுவரும் தொழிற் பேட்டைகளில் தகுதி அடிப்படையில் பலருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும். தற்பொழுது தலைவர் தொண்டமான் பெயரில் தொழிற்பேட்டை ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

**- இரா. புத்திரசிகாமணி**

**- ப. பன்னீர்செல்வம்**

# மலையகத்தில் புலி என்று கிலி! மாகாண சபையில் எதிரொலி!

மலையகத்தில் புலிகள் இருக்கிறார்கள் என்ற கிலி மலையகம் எங்கும் ஏற்பட்டிருக்கிறது. மத்திய மாகாண சபைக் கூட்டத்திலும் இது எதிரொலித்தது.

கடந்த மாத இறுதியில் நடைபெற்ற மத்திய மாகாண சபைக் கூட்டத்தில் ஐ.தே.க உறுப்பினர் அருள்சாமி பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகள் மற்றும் தலவாக்கலை சம்பவங்கள் குறித்து கனல் தெறிக்கப் பேசினார்.

இந்தப் பேச்சைக் கேட்டு வெகுண்டு எழுந்த அமைச்சர் சாலிய திஸாநாயக்க எரிமலையென வெடித்தார்.

உறுப்பினர் அருள்சாமி தமது உரையில், ''மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'', மலையகத்தில் நிலைமை மாறிவிட்டதால் மலையகத்தில் உள்ள வர்கள் புலிகள் என்று தவறாகக் கருதப்படுவதாலேயே பிந்துனுவெவ, தலவாக்கலைத் துயரச் சம்பவங்கள் நடைபெற்றன. இவற்றிற்குப் பின்னணியில் சிஹல உறுமய என்ற சிங்கள இனவாதக் கட்சி இருக்கிறது. என்ற பீடிகையுடன் கேள்விகளை எழுப்பினார:

இலங்கை ஒரு பௌத்த நாடா?

பௌத்த மதம் , கொலை செய்யும் படி கூறுகிறதா?

அரந்தலாவை பிக்குமார் கொலையை பிந்துனுவெவ, தலவாக்கலை படுகொலைகளோடு சம்பந்தப்படுத்துவது சரியா?

ஒருவர் இறந்தால் துக்கத்தின் அடையாளமாக எந்த நிறக் கொடிகளையும் போடலாம். கறுப்புக்கொடியைக் கத்தோலிக்கர்கள் பயன்படுத்துகிறார்கள்.

தலவாக்கலையில் திடீரென்த் தோன்றிய 50 பேர் அடங்கிய கும்பல் தான் சந்திரசேகரன் பேசிக் கொண்டிருந்த பொழுது கலகத்தை உண்டு பண்ணியது.

பிரபாகரன் சமாதானத்திற்கு வரும் பொழுது சிஹல உறுமய கொதித்தெழுகின்றது. அது ஏன்? இப்படி அருள்சாமி கேட்டார்,

இவரது உரை சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

உரையைக்கேட்டுக்கொண்டிருந்த அமைச்சர் சாலிய திஸாநாயக்க எரிமலை வெடித்தாற் போலப் பேசிச் சபையை அதிர வைத்தார்.

அவர் தனது உரையில் பின்வருமாறு கூறினார்.

மலையகத்தில் புலிகள் இல்லை என்கிறார்கள். அவ்வாறானால் ரொசிட்டாவில் இறந்த தமிழ் இளைஞர் புலிகளுடன் தொடர்புடையவர் எனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரன் கூறி இருக்கிறாரே, அது பொய்யா?.

புலிகள் இங்கு இல்லை என்றால் கொடிகள் ஏற்றப்பட்டதேன்? சிங்களவர்கள் பயந்தவர்கள் அல்லர். சமாதானம் காக்க அவர்கள் பொறுமையுடன் இருக்கின்றனர். அதனால் சிங்களவர்கள் பயந்தாங்கொள்ளிகள் எனக் கருதுவது சரியாகாது.

அரந்தலாவையில் குருமார் கொல்லப்பட்ட போதும் கண்டியில் தலதா மாளிகை சேதமாக்கப்பட்ட போதும் மலையகத்தில் உங்களால் அனுதாபக் கொடிகள் கட்டப்படவில்லையே. புலிகள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் இறந்தால் மட்டும் மலையகத்தில் கொடி கட்டப்படுகிறது இது முறையா?

புலிகளுக்குக் கொடி போடுபவர்களும் புலிகளேதான். மலையகச் சம்பவங்கள் தொடர்பாக நடவடிக்கையில் இறங்கிய தொழிலாளர்களுக்கும், இராணுவத்திற்கும் மிக்க நன்றி. இப்படிக் கூறி முடித்தார் சாலிய திஸாநாயக்க.

பிந்துனுவெவ முகாம் சம்பவத்தை வன்மையாக நாம் கண்டிக்கும் அதே வேளையில் இனவாதக் கட்சியொன்று மலையகச் சம்பவம் தொடர்பாக ஆதாயம் தேட முற்பட்டது. இங்கு கறுப்புக்கொடியோ, வெள்ளைக்கொடியோ என்பது அல்ல பிரச்சினை. இனவாதக் கொடிதான் பிரச்சினை என்றார் ஜே.வி.பி உறுப்பினர் திமுது பண்டா.

எஸ்.எல்.எம். ஜவுபர் (ஐ.தே.க) இப்படிக் கூறினார்.

மலையகக் கலவரம் தொடர்பாகப் பலர் கைது செய்யப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு நடைபெறவில்லை. முஸ்லிம்களின் உரிமைக்காக பல கோரிக்கைகளை விடுவதால் ஜனநாயகத்துக்குக் குந்தகமாக அவை இருக்கின்றன'' என்றார்.

எஸ். இராஜரட்ணம் (ஐ.தே.க) கூறுவதாவது :

ஆறு தமிழர்கள் மலையகக் கலவரத்தில் கொல்லப்பட்டுள்ளனர். 100பேர் காயமடைந்து இருக்கிறார்கள்.

சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதால் அவருக்கு ஆதரவுதான் மேலும் பெருகியுள்ளது.

1978இல் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். அங்கிருக்கும் தமிழ் யுவதி ஒருவர் விஷயத்தில் பாதுகாப்புப் படையினர் செய்த தவறினால்தான் கலவரம் ஏற்பட்டது. இங்கும் அந்த நிலைமையை ஏற்படுத்த முயற்சிக்காதீர்கள்.

மலையக இராணுவ முகாமை அகற்ற வேண்டும், மலையகத்தில் வாழும் சாதாரண தமிழ் மக்களும் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுகின்றனர். இந்த நிலை மாற வேண்டும். இப்படி அவர் கூறினார்.

அமைச்சர் வே.இராதா கிருஷ்ணன் பேசியதாவது:

தமிழர்களைப் புலிகள் என்கின்றனர் தமிழர்கள் எல்லோருமே புலிகளா?

மலையக மக்களைப் புலிகளெனப் பட்டம் சூட்டி அவர்களை ஓரவஞ்சனையுடன் நடத்தினால் இங்கு எப்படிச் சமாதானம் ஏற்படும்?.

மலையகப் பிரச்சினை வேறு, வட பிரதேசப் பிரச்சினை வேறு.

நாம் தனிநாடு கேட்கவில்லை.

150 வருடங்களுக்கு முன்னர் உழைப்பதற்கு வந்த நாம் உரிமையோடு வாழ வேண்டும். இப்படி அவர் கூறினார்.

**கண்டியூர்க் காவலன்**

# நடுவர் குழு இயக்குனருக்கு எதிராக அமைச்சரிடம் மனு

இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் நடுவர் குழு இயக்குனர் கே.ரி. பிரான்ஸிஸ் இனவாதமாக செயற்படுவதாக குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

சிரேஷ்ட நடுவர்கள் எண்மர் கையெழுத்திட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

'தமக்கு டெஸ்ட் போட்டிகளில் பணியாற்ற வாய்ப்பளிப்பதில்லை. தமிழ் கிறிஸ்தவரான கே.ரி. பிரான்ஸிஸ் சிங்கள பௌத்த நடுவர்களுக்கு பாரபட்சமாக செயற்படுகிறார்' என்பதே இவர்களது குற்றச்சாட்டு.

கே.ரி. பிரான்ஸிஸ் மிகுந்த அனுபவம் வாய்ந்த நடுவர். இலங்கையின் முதலாவது டெஸ்ட் போட்டியிலும் இவர் நடுவராகக் கடமையாற்றினார். அண்மையில் நடுவர் பணியிலிருந்து இவர் ஓய்வு பெற்றார்.

அதன்பின்இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் நடுவர் குழு இயக்குனராக நியமிக் கப்பட்டார்.

ரி.எம். சமரசிங்க, சி.பீ.சி. ரொட்ரிகோ, சி.எஸ். திஸாநாயக்க, ஈ.கே.ஜே. விஜேவர்தன, டி.எம்.எஸ். திஸாநாயக்க, டி.என். பத்திரன, ஜே.டபிள்யூ.கே. பொதேஜு, சமன் அமரசிங்க ஆகியோரின் கையொப்பங்கள் இதில் அடங்கியுள்ளன.

ஆனால் இம்மனுவில் தாம் கையொப்பமிடவில்லை என்று சமன் அமரசிங்க கூறுகிறார். தனது கையொப்பம் அதில் இருந்தால் அது பெரும் மோசடியாகும் என அவர் கூறியுள்ளார்.



கே.ரி. பிரான்ஸிஸ்

பிரான்ஸிஸ் இக்குற்றச்சாட்டுகளை மறுக்கிறார்.

"டெஸ்ட் போட்டிகளுக்கான நடுவர்களைத் தேர்வு செய்வது திரு.ஏ.ஆர்.எம். அருஸ் தலைமையிலான தேர்வுக் குழுவினரே. தெரிவு செய்யப்பட்ட நடுவர்களது பணியை நெறிப்படுத்துவதே எனது கடமை.

இவர்கள் கூறுவது போல் சிங்கள பௌத்தர்களுக்கு பாரபட்சமாக செயற்படுவதாக இருந்தால் அசோக டி சில்வா ,காமினி சில்வா போன்றோர் விரைவிலேயே டெஸ்ட்போட்டிகளுக்கான நடுவர்களாக தெரிவு செய்யப்பட்டது எப்படி?

உண்மையில், முதல்தர கிரிக்கட் விளையாடிய அனுபவமுடைய இளைஞர்களை நடுவர்களாக நியமிப்பதே ஐ.சி.சியின் திட்டமாகும். கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையும் அதற்கேற்ற விதமாக செயற்படுகிறது.

மேற்குறிப்பிட்ட நடுவர்கள் இத்தகுதிக்குரியவர்களா என்பது கேள்விக்குரியதே" என்று பிரான்ஸிஸ் கூறியுள்ளார்.

நடுவர்கள் தேர்வுக்குழுத் தலைவர் ஏ.ஆர்.எம். அருஸிடம் இதுபற்றி 'சுடர் ஒளி' கேட்டபோது;

"இக்குற்றச்சாட்டுக்கள் தவறானவை. இந்த நடுவர்கள் ஓய்வு பெற வேண்டிய நிலையிலுள்ளவர்கள். இளையவர்களுக்கு வாய்ப்பளிப்பதே கிரிக்கட்டுக்கு நன்மை தரும். அதனையே நாம் செய்கிறோம்.

விளையாட்டுத்துறை அமைச்சர் இதுவரை என்னிடம் இதுகுறித்து எதுவும் கேட்கவில்லை" என்று கூறினார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவே நடுவர்கள் சங்கத்தின் தலைவராக உள்ளார். அமைச்சுப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னரே இச்சங்கத்தின் தலைவராக அவர் தேர்வு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

## ஆயுட் காலத் தடைக்கு இடைக்காலத் தடை

சலிம் மலிக் மீது விதிக்கப்பட்டிருந்த ஆயுள்காலத் தடைக்கு இடைக்காலத் தடை விதிககப்பட்டுள்ளது.

ஆட்டநிர்ணயச் சதியில் ஈடுபட்டார் என்று சலிம் மலிக் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனால் அவர் முதல்தரக் கிரிககட் போட்டிகளில் பங்குபற்ற ஆயுள் காலத்தடை விதிக்கப்பட்டதோடு ஒரு மில்லியன் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டிருந்தது.

பாக். கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை இத்தண்டனைகளை விதித்தது.

இத்தண்டனைக்கு எதிராக ஆட்சேபனை மனுக்களை அனுப்பிய போதிலும் பாக். கிரிக்கட் சபையினால் அவை நிராகரிக்கப்பட்டன.



சலிம் மலிக்

இதற்கு எதிராக லாகூர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார் மலிக்.

கடந்த 25ம் திகதி நீதிபதி மொஹமட் கயாம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அதனால் டிசம்பர் 7ஆம் திகதிவரை கிரிக்கட் சபை விதித்த தண்டனைக்கு இடைக்காலத் தடைவிதித்தார் நீதிபதி.

அண்மையில் இந்தியாவின் மத்திய புலனாய்வுப் பணியகம் சமர்ப்பித்த அறிக்கையிலும் சலிம் மலிக் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## இந்திய அணியில் சோதி, சோப்ராவிற்கு இடம்

இந்திய, ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டித் தொடர் டிசம்பர் 2-14 வரை நடைபெறவுள்ளது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதல் 3 போட்டிகளுக்கு ரொபின்சிங் நீக்கப்பட்டுள்ளார்.

இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிப்பதே எமது நோக்கம். ரொபின்சிங் திறமையானவர். அவரை எப்போதும் நாம் அணியில் சேர்த்துக் கொள்வோம் என்று தேர்வுக்குழுத் தலைவர் சந்து போர்டே கூறியுள்ளார்.

இவ்வணியில் நிகில் சோப்ரா, ரீட்டிந்தர்சிங் சோதி ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.



சோதி



சோப்ரா

நிகில் சோப்ரா முன்னர் சூதாட்டக்காரர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டவர்.

இதனால் அவருக்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் மத்திய புலனாய்வுத் துறையினர் சமர்ப்பித்த அறிக்கையில் அவர் மீது குற்றம் சாட்டப்படவில்லை.

ரீட்டிந்தர் சிங் சோதி உலகக்கிண்ணத்தை வென்ற 19வயதின் கீழ் இந்திய அணியின் உப தலைவராவார். அத்தொடரின் இறுதிப் போட்டி நாயகனாகவும் சோதி தெரிவாகியிருந்தார்.

1996 ல் நடைபெற்ற 15 வயதின் கீழ் உலகக் கிண்ணத் தொடரிலும் இவரது தலைமையிலேயே இந்தியா உலகக்கிண்ணத்தை வென்றது.

சோதி அணியில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன்னாள் வீரர்கள், விமர்சகர்கள் உட்படப் பலரும் வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

19வயதின் கீழ் அணியில் இடம்பெற்ற கைஃப்இ, சஹீர் கான், யுவராஜ் சிங் ஆகியோர் ஏற்கனவே சிரேஷ்ட அணியில் இடம்பெற்றுள்ளனர். சோதிக்கு இப்போது தான் முதல்தடவையாக வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணி வீரர்கள் விபரம்: கங்குலி, டிராவிட், டெண்டுல்கர், யுவராஜ்சிங், ஹேமாங் பதானி, சிவ் சுந்தர் தாஸ், ஸ்ரீதரன் ஸ்ரீராம், விஜய் தஹியா, சுனில் ஜோஷி, நிகில் சோப்ரா, ஸஹீர் கான் வெங்கடேஸ் பிரசாத், அகர்கர், ரீட்டிந்தர்சிங் சோதி.

**ஒருநாள் போட்டிகள் நடைபெறும் திகதிகளும் நகரங்களும்:**

டிச. 2 - கட்டாக்,
5 - அஹமதாபாத்,
8 - ஜோத்பூர்,
11- கான்பூர்,
14- ராஜ்கொட்

## மேற்கிந்திய அணியை தாயகம் திரும்பக் கோரிக்கை

மேற்கிந்திய கிரிக்கட் அணி அவுஸ்திரேலியாவில் அடைந்த படுதோல்விகள் காரணமாக அவ்வணி பலத்த கண்டனங்களுக்கு இலக்காகியுள்ளது.

முதலாவது டெஸ்ட் போட்டியில் ஒரு இனிங்ஸ் மற்றும் 126 ஓட்டங்களால் மே. தீவுகள் அணி தோல்வியடைந்தது. முதல் இன்னிங்ஸில் 82 ஓட்டங்களுடனும் இரண்டாவது இன்னிங்ஸில் 124 ஓட்டங்களுக்கும் சகல விக்கட்டுக்களையும் இழந்தது அவ்வணி.



அடம்ஸ்



லாரா

இதற்குமுன் மேற்கு அவுஸ்திரேலிய பிராந்திய அணியுடன் நடைபெற்ற போட்டியிலும் தோல்வியே கிடைத்தது.

இத்தொடரின் ஏனைய போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணி பெரு வெற்றியீட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணி உடனடியாகத் தாயகம் திரும்ப வேண்டும் என்று கொலின் குரொஃப்ட் கூறியுள்ளார்.

இதன் மூலம் மேற்கிந்திய அணி அவமானகரமான தோல்விகளைச் சந்திப்பதைத் தவிர்க்கலாம் என அவர் கூறுகிறார்.

"திட்டமிடப்பட்ட ஏனைய போட்டிகளில் அவுஸ்திரேலியாவுடன் பங்களாதேஷ் அணியை மோதவிடலாம்.

புதிதாக டெஸ்ட் அந்தஸ்தைப் பெற்ற அவ்வணிக்கு சில விடயங்களைக் கற்றுக்கொள்வதற்காகவாவது சந்தர்ப்பம் கிடைக்கும்.

மேற்கிந்திய அணி அவுஸ்திரேலியாவில் தங்கியிருப்பதால் பலன் எதுவும் கிட்டாது" என்கிறார் கொலின் குரொஃப்ட்.

இவர் மேற்கிந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளராவார்.

இதேவேளை மேற்கிந்திய அணியுடனான வெற்றியால் தொடர்ச்சியாக 11 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்ற சாதனையை அவுஸ்திரேலியா சமப்படுத்தியுள்ளது.

1982-84 காலத்தில் மேற் கிந்திய அணியே முன்னர் இச்சாதனையை ஏற்படுத்தியிருந்தது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் புதிய சாதனையையும் படைக்கும் வாய்ப்பு நெருங்கியுள்ளது.

அவுஸ்திரேலியா ஒரு உலக சாதனையை சமப்படுத்தியது போல் மேற்கிந்திய தீவுகள் அணி விரும்பத்தகாத சாதனையொன்றை சமப்படுத்தியுள்ளது.

ஒரு போட்டியில் 9 பேர் ஓட்டங்களெதுவும் இன்றி ஆட்டமிழந்ததே அச்சாதனையாகும்.

தமது அணியின் தோல்விகளால் அனுசரணையாளர்களை இழக்க நேரிடும் என்று மேற்கிந்திய அணி முகாமையாளர் ரிக்கி ஸ்கரிட் அச்சம் தெரிவித்துள்ளார்.

"ஆஸி அணியை நாம் வெல்லுவோம்" என்று இவர் முன்னர் கூறியமை குறிப்பிடத்தக்கது.

## அகில இலங்கைச் சாம்பியன்கள்



பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முதல் பிரிவில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி சாம்பியனாகியுள்ளது.

மைலோ கிண்ணத்துக்கான இச்சுற்றுப் போட்டி 11 வருடங்களாக நடைபெற்று வருகிறது. இதில் 18 வயதிற்குட்பட்டோருக்கான பிரிவில் இந்துக்கல்லூரி முதல் தடவையாகச் சாம்பியனாகியுள்ளது.

படத்தில் வெற்றிக்கிண்ணத்துடன் சாம்பியன் அணியினர் காணப்படுகின்றனர்.

இடமிருந்து வலமாக: நிற்பவர்கள்- பி. சுதர்ஷன், ஆர். செந்தூரன், எம். அர்ஷாத், கே. சஞ்சீவ், கே. ராஜீவ், பீ. பார்த்திபன், ரி. கோவிந்தன், சி. பிரஸன்னா, ரி. தினேஷன், ஏ. சின்னத்தம்பி (பயிற்றுநர்)

அமர்ந்திருப்பவர்கள்: என். ஜதீஸ்பரன், எம். பஸ்மின், எல். மதனராஜ், ஜி. ராகேஸ், ஆர். பிரசாந்த், என். சங்கர், பி. அருள்ராஜ் (அணித்தலைவர்)

இந்துவின் வெற்றிப்பாதையில் எதிர்கொண்ட அணிகளும் பெறுபேறுகளும்:

முதல் சுற்று:
புனித ஜோசப் - திருமலை - 2-2
தர்மராஜக் கல்லூரி - கண்டி 7-2
டி. மஸிநோட். - கந்தானை 2-0
வெஸ்லி - கொழும்பு 2-0
டி.எஸ். சேனாநாயக்க 5-1
புனித அந்தோனியார் - வத்தளை 5-0
இஸிபத்தானைக் கல்லூரி 1-1
காலிறுதி: ஸாஹிரா - கொழும்பு 4-3
அரையிறுதி: இஸிபத்தானை - 4-3
இறுதிப்போட்டி: ஹமீட் அல் ஹுஸைனியா - கொழும்பு - 3-1

# இஸ்ரேலுக்கு முஸ்லிம் மக்கள் கடும் எதிர்ப்பு: தலைவர்கள்....?

## சம்மாந்துறையில் மாபெரும் ஆர்ப்பாட்டம், பேரணி

பாலஸ்தீன மக்களை இஸ்ரேல் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்து வருவதையும் அவர்கள் மீது வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டு வருவதையும் நாடெங்கும் உள்ள முஸ்லிம்கள் கண்டித்து வருகிறார்கள்.

அரசியல் கட்சி வேறுபாடுகளை எல்லாம் மறந்து இஸ்ரேல் எதிர்ப்பில் முஸ்லிம் மக்கள் அனைவரும் என்றைக்குமே ஒன்றுபட்டு நிற்கிறார்கள்.

ஆனால் முஸ்லிம் தலைவர்களோ தடுமாறுகிறார்கள். பலர் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு பேசி வருகிறார்கள். நழுவல் கொள்கையைக் கடைப் பிடிக்கிறார்கள்

சமீபத்தில் சம்மாந்துறையில் ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் ஒன்று திரண்டு இஸ்ரேலுக்கு எதிரான மாபெரும் கறுப்பு ஆர்ப்பாட்டமும் பேரணியும் நடத்தினார்கள்.

காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது ஆட்சிக் காலத்தில் பாலஸ்தீனர்களுக்கு ஆதரவு தெரிவித்தார். அவர்களின் பரம விரோதிகளான இஸ்ரேலர்களை - அவர்களின் தூதுவராலயத்தை இலங்கையில் மூடி எல்லோரையும் வெளியேற்றினார்.


கண்டனக் கோஷங்கள் எழுப்பப்படுகின்றன

அப்போது முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் இதை ஆதரித்தனர்.

பின்னர் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, வடக்கு-கிழக்கு யுத்தத்தை வெல்வதற்கு இஸ்ரேலின் ஆதரவைப் பெறுவதற்காக அந்த நாடு இங்கே தனது நலன் காக்கும் பிரிவு ஒன்றை அமெரிக்கத் தூதரகத்தில் வைத்து நடத்த அனுமதி அளித்தார்.

இதை அப்போது எதிர்க்கட்சியில் இருந்த முஸ்லிம் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள். எதிர்த்துப் போர்க்கொடி தூக்கினார்கள்.

ஐ.தே.கவுடன் இணைந்திருந்த முஸ்லிம் தலைவர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவதிப்பட்டார்கள். ஏடா கூடமாக எதையாவது பேச, அதனால் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்குக் கோபம் வந்து விட்டால்.....? பல முஸ்லிம் தலைவர்கள் பேசா மடந்தைகள் ஆனார்கள். சிலர் மட்டும் அடக்கி வாசித்தார்கள்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்குப் பின்னர் பதவிக்கு வந்த ஆர். பிரேமதாச இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை இலங்கையிலிருந்து வெளியேற்றினார். அதாவது இந்திய அமைதி காக்கும் படையை இங்கிருந்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பியது போல.

ஐ.தே.கவில் இருந்த முஸ்லிம் தலைவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள். ஆறுதல் அடைந்தார்கள்.

எதிர்க்கட்சியில் இணைந்திருந்த முஸ்லிம் தலைவர்களும் ஜனாதிபதி பிரேமதாசவின் நடவடிக்கைக்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

இன்று அதே எதிர்க்கட்சியின் ஆட்சிநடக்கிறது. பிரேமதாச விரட்டி அடித்த இஸ்ரேலுக்கு இந்த ஆட்சியில் செங்கம்பள வரவேற்பு. தூதரகம் அமைக்க அனுமதி. எல்லாம் இந்த வடக்கு-கிழக்கு யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு இஸ்ரேலின் உதவியை நாடித்தான்.

ஆட்சியில் இருக்கும் கட்சியுடன் இணைந்துள்ள முஸ்லிம் தலைவர்கள் எங்கே? பேச்சு மூச்சைக் காணோம். தேடிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஜே. ஆர். ஜெயவர்த்தன இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவுக்கு அனுமதி வழங்கியபோது எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்திய முஸ்லிம் தலைவர்கள், இன்று தமது பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு இஸ்ரேல் தூதரகம் அமைக்க அனுமதிக்கும் போது பெட்டிப் பாம்பாக அடங்கி ஒடுங்கிப் போய் இருக்கிறார்கள். என்னே இந்த அரசியல் தலைவர்களின் அலங்கோலநிலை!

முஸ்லிம் மக்களோ இஸ்ரேலை எதிர்க்கும் விஷயத்தில் அன்று போல் இன்றும் உறுதியாக முன்னணியில் நிற்கிறார்கள்.

பாலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலைகளையும், அடக்குமுறை வன்செயல்களையும் கண்டித்து சம்மாந்துறையில் மாபெரும் ஆர்ப்பாட்டமும், கண்டனப்பேரணியும் கடந்த மாதம் 17 ஆம் திகதி நடைபெற்றன.

அம்பாறை மாவட்டத்தில் இதுவரை நடைபெற்ற இஸ்ரேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்குள் மிகப்பிரமாண்டமான முறையிலும், ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமும், கண்டனப் பேரணியும் இவையாகும்.

சம்மாந்துறையிலுள்ள பிரபல சமூக சேவை அமைப்பான 'சுவாட்' அமைப்பு, சம்மாந்துறை உலமாசபை, பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர்சபை என்பவற்றின் ஆதரவுடன் இந்த ஆர்ப்பாட்டத்தையும், கண்டனப் பேரணியையும் ஏற்பாடு செய்திருந்தது.

''இஸ்ரேலுக்கு எதிரான கறுப்பு எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும், பேரணியும்'' எனும் தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்திலும், கண்டனப் பேரணியிலும், ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்.

வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையின் பின் சம்மாந்துறை பத்ர் பள்ளிவாசல் முன்பாகத்திரண்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதுடன், ஹிஜ்ராசந்திவரை இஸ்ரேலுக்கு எதிரான வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் கண்டனப் பேரணி ஒன்றையும் நடத்தினர்.

சுவாட் அமைப்பின் தலைவர் எம். எல். ஏ. மஜீத் தலைமையில் இடம் பெற்ற கண்டனப் பேரணியின் இறுதியில் அமெரிக்க, இஸ்ரேலியத் தேசியக் கொடிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.



சுலோக அட்டைகள் சகிதம் ஆர்ப்பாட்டக்காரர்கள்

இஸ்ரேலியத் தேசியக் கொடிக்கு ''மர்ஹூம் அமைச்சர் எம். எச்.எம்.அஷ்ரப் மன்றத்தின்'' தலைவர் சட்டத்தரணி அன்வர் இஸ்மாயிலும், அமெரிக்க தேசியக் கொடிக்கு சுவாட் அமைப்பின் தலைவர் எம்.எல்.ஏ. மஜீதும் தீ வைத்து அவற்றைக் கொளுத்தினர்.



பேரணியில் பெரும் எண்ணிக்கையில் மக்கள்

''எகுட்பராக் கைக் கல்லெறிந்து கொல்வோம்,'' ''பாலஸ்தீனத்தை ஜிஹாத் செய்து மீட்போம்'' பாலஸ்தீனர்களின் தாயகத்தை விடமாட்டோம்'', ''கிளின்டனே விட்டுவிடுவதற்கு இது மோனிக்கா அல்ல'', ''சியோனிஸ வெறியர்களிடமிருந்து பாலஸ்தீனத்தைக் காப்போம்'' - போன்ற வாசகங்கள் ஆர்ப்பாட்டத்திலும், கண்டனப் பேரணியிலும் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்த சுலோக அட்டைகளில் காணப்பட்டன.

ஆர்ப்பாட்டமும், கண்டனப்பேரணியும் நடைபெற்ற அன்றையதினம் சம்மாந்துறை நகர் முழுவதும் இஸ்ரேலைக் கண்டிக்கும் வாசகங்களைக் கொண்ட பதாதைகள் காணப்பட்டன. சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டு இருந்தன. கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

**- ஏ.எல்.எம். சலீம்**

# சாண்டோ ஸ்ரீதாஸின் பிரமிப்பூட்டும் சாகஸம்





ஈழ மண்ணிற்கு அதிலும் குறிப்பாக மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்புக்குப் பெருமை தேடித் தருபவர்களில் ஒருவராக சாண்டோ வே. ஸ்ரீதாஸ் விளங்குகிறார்.

சாண்டோ சங்கரதாஸின் சிஷ்யரான சாண்டோ வே.ஸ்ரீதாஸ் வீரதீர பராக்கிரமச் செயல்களைச் செய்து காட்டி இந்தியாவிலும் இலங்கையிலும் பல வெற்றிப் பட்டயங்களைப் பெற்றுள்ளார்.

அதிவீர பராக்கிரமசாலியான சாண்டோ ஸ்ரீதாஸ் அண்மையில் மட்டக்களப்பு மக்களை அதிசயிக்கவும் ஆச்சரியப்படவும் வைத்த பல நிகழ்ச்சிகளைச் செய்து காட்டினார்.

சாண்டோ ஸ்ரீதாஸின் திறமைகள் அபாரமானவை. அதனால் அவரது பெயரும் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெற வேண்டியது. ஆயினும் இதுவரை அது நடைபெறவில்லை. அவர் தமிழனாகப் பிறந்ததுதான் காரணமோ என்னவோ!

அண்மையில் மட்டுநகரில் சாண்டோ ஸ்ரீதாஸ் தனது உடலில் உழவு இயந்திரத்தை ஏற்றி சாகஸம் காட்டி அனைவரையும் பிரமிக்க வைத்தார்.

அதை இங்கே படங்களில் காண்கிறீர்கள்

-அபிமன்யூ

# வாழ்க்கையில் வெற்றி பெற....

வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமா...? அப்படியானால் சில குறிக்கோள்களை உங்களுக்கென்று வைத்துக்கொள்ளுங்கள்.

சிலர் அதிஷ்டத்தால் வாழ்க்கையில் வெற்றியடைந்துவிடுவார்கள். ஆனால் அதிஷ்டம் எல்லோருக்கும் கைகூடாது.

உங்களுக்கெனச் சில குறிக்கோள்களை வரையறுத்து அதை அடைவதற்கு உழைத்தால் நிச்சயமாக வாழ்க்கையில் வெற்றி கிடைக்கும்!

அந்த முறையில் கிடைக்கும் வெற்றி மிகுந்த சந்தோஷத்தையும், திருப்தியையும் தந்து வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும்.



வாழ்க்கையில் வெற்றியடையத் திட்டம், முயற்சி, உழைப்பு ஆகிய மூன்றும் அவசியமானவை.

உங்களது இலட்சியம் என்ன? என்று முதலில் திடமாக முடிவு செய்யுங்கள். பின்பு அந்த இலட்சியத்தை எந்நேரமும் மனதில் நினையுங்கள்.

மனதில் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் இலட்சியத்தை அடைய இதுவரை என்ன முயற்சி செய்தீர்கள் என அடிக்கடி சிந்தியுங்கள். சுயமாக முயற்சி செய்ய ஆரம்பித்து விடுவீர்கள்.

50 ரூபாய் இலட்சியம் என்றால் 500 ரூபாய்க்கு முயற்சி செய்யுங்கள். விரைவில் 50 ரூபாவைப் பெற்றுவிடலாம்.

எனவே தன்னம்பிக்கையுடன் விடா முயற்சி செய்தால் என்றாவது ஒரு நாள் அது வெற்றியை ஈட்டித் தரும்.

கடந்த காலத்தையும், நிகழ் காலத்தையும் ஒப்பிட்டு எடைபோட்டுப் பாருங்கள். உங்கள் தகுதி உங்களுக்குப் புரியும். அத்துடன் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்பதையும் உங்களால் ஓரளவு தெரிந்து கொள்ள முடியும்.

அடுத்த ஆண்டு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இந்த ஆண்டே முயற்சி செய்யுங்கள். வெற்றிக்கு வழி தெரியும்.

வரவு செலவு இரண்டையும் எழுதி வந்தால் சிக்கனத்தைக் கடைபிடிக்கத் தோன்றும், நாளடைவில் அது சேமிப்பாக மலரும்.

போராட்ட உள்ளம் வேண்டும். துயரத்திலும், கஷ்டத்திலும் பின்னடைந்து விடக்கூடாது. அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதில் குறியாக இருக்க வேண்டும்.

மற்றவர்களின் தோல்வியான வாழ்க்கையை உங்களுக்கு ஆறுதலாக எடுத்துக் கொள்ள வேண்டும். வெற்றி வாழ்க்கையை ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.

இத்தனையும் இருந்தால் வெற்றிகரமான வாழ்க்கை உங்களுக்கே...!

# புகை பிடிக்கும் பெண்கள்

சிகரெட் பிடிக்கும் பழக்கம் என்றவுடன் நமக்குச் சட்டென்று நினைவுக்கு வருபவர்கள் ஆண்கள்.

ஆனால் ஆண்களை விடப் பெண்கள் இலகுவில் சிகரெட் பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகிவிடுகிறார்களாம். என்ன அதிர்ந்துபோய்விட்டீர்களா...? இதை நாம் கூறவில்லை.

நியூயோர்க் நகர மனோவியலாளர் அமைப்பினர் தாம் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் இக்கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

இவ்வமைப்பைச் சேர்ந்த ''டெனிஸ் கேண்டல்'' என்ற பெண்மணியும் அவரது சகாக்களும் இணைந்து 2000க்கும் மேற்பட்ட புகைபிடிக்கும் அமெரிக்கர்களிடம் நடத்தியுள்ள ஆய்வில் இந்த உண்மை தெரியவந்துள்ளது

இதோ விபரம்!

1991-1993 வரை நடத்தப்பட்ட இந்த ஆய்வில் ஆண்களை விடப், பெண்களிடம் சிகரெட் பிடிக்கும் பழக்கம் எளிதில் தொற்றிக் கொள்கிறது என்றும், இதிலிருந்து மீள முடியாமல் அதிகம் திணறுபவர்கள் பெண்கள் என்றும் கூறுகிறது.

இது குறித்து ஆராய்ச்சியை நடத்திய கேண்டல் கூறுகையில் ''சம அளவு நிகொடின் செலுத்தப்பட்ட ஆண்களையும், பெண்களையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் சிகரெட் பழக்கத்திற்கு அடிமையாகும் அறிகுறிகள் பெண்களிடம்தான் அதிகளவில் காணப்பட்டன'' என்கிறார்.



ஆண்களை விட பெண்கள் விரைவில் சிகரெட் பழக்கத் திற்கு அடிமையாகிவிடும் அபாயம் உள்ளது.

சிகரெட் பழக்கத்திற்கு ஒருவர் அடிமையாவதில் உடலமைப்புக்கும் முக்கிய பங்குள்ளது அதை நிருபிக்க மேலும் பல பரிசோதனைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் கேண்டல் தெரிவித்துள்ளார்.

மேலும் பெண்கள் எதிலும் எளிதில் மயங்கக் கூடிய தன்மை உடையவர்கள் என்றும் இது அவர்களின் ''சிகரெட்'' பழக்கத்தை விட முடியாமல் இருப்பதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் ''புற்று நோய் ஆராய்ச்சிக் குழுவின்'' இயக்குனர் ''ஜீன் கிங்'' தெரிவித்துள்ளார்.

பெண்களிடையே பெருகிவரும் சிகரெட் பழக்கத்தால் நுரையீரல் புற்றுநோய் காரணமாக மரணமடையும் பெண்களின் எண்ணிக்கை 36% அதிகரித்துள்ளது.

1999ஆம் ஆண்டில் மட்டும் 12,765 பெண்கள், நுரையீரல் புற்றுநோயால் இறந்துள்ளனர். இத் தொகை, அதே ஆண்டில் மார்பகப் புற்றுநோயால் இறந்தவர்களின் எண்ணிக்கையைவிட அதிகம் என்று ''புற்று நோய் ஆராய்ச்சிக் குழு'' வெளியிட்டுள்ள புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

எனவே பெண்களே கவனமாக இருங்கள். எந்த ஒரு தூண்டுதல் காரணமாகவும் நீங்கள் இந்த ஆட்கொல்லிப் பழக்கத்திற்கு அடிமையாகிவிடாதீர்கள்.

# படித்ததில் பிடித்தது

[illegible]



## பெண்

பிரதீபா – பசீனா

# நேற்று இல்லாத மாற்றம்

அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்வுகள் பல சந்தர்ப்பங்களில் எமது பழக்க வழக்கங்களை மாற்றிவிடுகின்றன.

அதிலும் ஒருவர் காதல் வயப்பட்டுவிட்டால் கேட்கத் தேவையில்லை. முழுமையாகவே மாறிவிடுவார்கள்.

* டி.வி.செய்தி கவனிப்பதை நிறுத்தி விடுவார்கள். உலக அரசியல் மீது ஆர்வம் போய்விடும்.
* உள்ளாடைகளைக் கூட வெளியாடைகளுக்குப் பொருத்தமாக அணிவார்கள்.
* இருக்கும் இடத்தின் தொலைபேசி இலக்கம் மறந்துவிடும்.
* கம்பியூட்டர் பாஸ்வேட் அவரின் பெயராக மாறிவிடும்.
* உடல் சுகயீனத்தை உள்ளம் ஏற்றுக் கொள்ளாது.
* முகத்தில் சூரியனின் பிரகாசம் தெரியும்.
* தொலைபேசி சிணுங்கும் போதெல்லாம் இதயம் படபடக்கும்.
* ஷேவ் செய்யாத ஆண்கள் கூடக் கவர்ச்சியாகத் தெரிவார்கள்.
* நீங்கள் உயிரோடு இருக்கிறீர்களா என அறிய உங்கள் நண்பிகள் ஈமெயில் அனுப்புவார்கள்.
* ஐயசூரியவைக் கதாநாயகனாகவைத்துப் படம் எடுக்க நினைப்பீர்கள்.



# அம்மாவின் சிம்மாசனம்!

அதிகாலை வேளை...

மொட்டை மாடியில் நின்று கீழே பார்த்தான் சேகர். கிணற்றடியில் குவிந்திருந்த துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தாள் அம்மா.

வீட்டிலுள்ள அத்தனை பேரின் துணிகளையும் அவள்தான் துவைப்பாள். அது மட்டுமல்ல பாத்திரம் தேய்ப்பது, கடைக்குப் போவது, சமைப்பது, வீடு மெழுகுவது எல்லாமே அம்மாதான். சுருக்கமாகச் சொன்னால் இந்த வீட்டில் அவள் ஒரு சம்பளம் வாங்காத வேலைக்காரியாக இருந்தாள்.

அதற்குக் காரணம் அந்த வீட்டில் சேகருடைய அண்ணியின் ராஜ்யம்தான் நடக்கிறது.

"அம்மா... என்ன இன்னும் முடியலையா?" அண்ணன் ரவி கிணற்று மேடை அருகே வந்து இரைவது கேட்டது.

"இதோ" – அம்மா பரபரத்து ஓடினாள். மொட்டை மாடியிலிருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த சேகரின் உள்ளம் ஆத்திரத்தால் கொதித்தது. நேரே கீழே போய் அண்ணனைப் பிடித்துக் கன்னத்தில் ஓங்கி நாலு அறை அறையலாம் போலிருந்தது.

ஆனால், அவனால் முடியவில்லை. வயதில் மூத்தவன் என்பதினால் அல்ல. அண்ணன் தயவில்தான் அம்மாவும் அவனும் வாழ்கிறார்கள். இன்றும் இரண்டு ஆண்டு சேகரின் மேற்படிப்பு நிறைவு பெறக் காத்திருக்க வேண்டும். அது ஒழுங்காக நிறைவு பெற அண்ணனின் உதவி நிச்சயம் தேவை.

ஆனால் படிப்பு மட்டும் முடிந்து விட்டால் அவன் யாரையும் அண்டி வாழாமல் சொந்தக் காலில் நிற்க முடியும். அம்மாவை ஒரு மகாராணி போல் வைத்திருக்க முடியும். வீடு முழுக்க அம்மாவின் சாம்ராஜ்யத்தில் இயங்க வேண்டும். அம்மா பட்ட கஷ்டம், அவமானம் அத்தனையும் போக்கி அவளைச் சிம்மாசனத்தில் அமர்த்திச் சிரிக்கச் செய்ய வேண்டும்.

ரவியைப் போல் நிச்சயம் சேகர் இருக்க மாட்டான். அண்ணியின் புடவைக்குப் பின்னால் அண்ணன் பதுங்குவது போல் பதுங்க மாட்டான். அம்மாவுக்கு என்றே ஒரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தி அவளை அதன் சிம்மாசனத்தில் அமர்த்தி அழகு பார்ப்பான்.

அன்று அவன் கல்லூரியிலிருந்து வரும்போதே அம்மாவின் முகம் சோம்பியிருந்தது. என்னம்மா? என்று கேட்பதற்குள் அவளது விழிகளிலிருந்து சொட்டுச் சொட்டாக நீர் சிந்தியது. நாசி சிவந்து துடித்தது. சாப்பாட்டுக் கையை உதறிவிட்டு என்னம்மா உடம்புக்கு என்ன...? என்றான் பதறிப்போய்.

"எனக்கு ஒண்ணுமில்லேடா... நீ சாப்பிடு..."

அம்மா சொல்லாது விட்டாலும் அவனுக்குப் புரிந்தது.

"நீ சொல்ல மாட்டேம்மா... சொல்லவும் வேண்டாம். அண்ணி உன்னை ஏதாவது குற்றம் சொல்லிப் பேசியிருப்பாள். பதிலுக்கு நீயும் ஏதாவது சொல்லியிருப்பே... உடனே அவள் கண்ணைக் கசக்கிட்டு ஐயாக்கிட்ட... அதுதான் உன் பெரிய மகன் ரவிக்கிட்ட போய்ச் சொல்லி அழுதிருப்பா... அவரும் புர்ருன்னு ரோசம் கிளம்ப உன்னை நல்லாத் திட்டியிருப்பார்... என்ன கரெக்டா?"

அம்மா தலையைக் குனிந்து புடைவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"அழாதேம்மா...! இன்னும் கொஞ்ச நாள்... இரண்டே வருஷம்... என் படிப்பு முடிஞ்சிடும். சீக்கிரமா ஒரு வேலையைத் தேடிக்கிட்டு உன்னை எப்படி வைச்சுக்கறேன் பாரு... ஒரு மகாராணி மாதிரி உன்னை சிம்மாசனத்தில் வைச்சுத் தாங்குறேனா இல்லையான்னு பாரேன். வீடு முழுக்க உன் அதிகாரம் தான். உன் ராஜ்யம்தான். அண்ணனுக்கு உன் மதிப்புத் தெரியலைன்னா என்ன... நான் இருக்கேம்மா. உனக்கு... ஒரு தாயோட மதிப்புத் தெரிஞ்ச பிள்ளையா நான் இருக்கேம்மா உனக்கு. நீ எதுக்கும் கவலைப்படாதே என்ன... அழா..."

அம்மா சோகமாய் சிரித்தபடி "பேசாம சாப்பிட்டுட்டுப் போய் படிடா..." என்றாள்.

இரண்டு வருடங்கள் உருண்டோடின. சேகரின் அதிஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். அவன் படிப்புக்கும் தகுதிக்கும் ஏற்றமாதிரி ஒரு நல்ல வேலை கிடைத்தது. நாலு இலக்கத்தில் சம்பளம். கம்பெனிக்கார், குவார்ட்டர்ஸ் என்று வசதிகள் பல.

முதல் மாதச் சம்பளம் வாங்கியதுமே அம்மாவிடம் அதனைக் கொடுத்துவிட்டு வணங்கினான்.

"அம்மா கம்பெனி எனக்கு அருமையான வீடு கொடுத்திருக்கு. புறப்படும்மா" என்றான்.

அம்மா சிரித்தாள்.

"அதிருக்கட்டும்டா... முதல்ல உனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைச்சிட்டு அப்புறமா உன் கூடவே இருந்திடறேன். நான் வேற எங்க போகிறேன்... உன்னை விட்டுட்டு?" என்றாள் அம்மா.

கல்யாணத்துக்கு இப்ப என்னம்மா அவசரம்? சேகரின் குரல் தயங்கினாலும் மனதில் உற்சாகம் கரை புரண்டது. இதுதான் சமயம் சொல்லி விடலாம்.

அவனது மனதைப் படித்தவளாக அம்மா கேட்டாள். "என்னடா... என்ன தயங்கறே? என்ன இருந்தாலும் மறைக்காம என்கிட்ட சொல்லிடு!"

"அம்மா... வந்து... எங்க கம்பெனி மனேஜிங் டிரெக்டர் மூர்த்தி ரொம்ப நல்லவரும்மா... அவருக்கு ஒரே பொண்ணு... நந்தினின்னு பேரு... ரொம்ப அழகா இருப்பா. ஒரு வாரத்துக்கு முன்னாலே மிஸ்டர் மூர்த்தி என்னைக் கூப்பிட்டு, உன்னை என் மருமகனாக்கிக்கொள்ள எனக்கு ஆசை. நந்தினிக்கு உன்மேல் ரொம்பப் பிரியம். என்று சொன்னார். எனக்கு ஒண்ணுமே ஓடலை. சந்தோஷமா சரின்னுட்டேன். இப்ப உன்னோட விருப்பம் தெரிஞ்சதுன்னா ஒரு நல்ல நாளாப் பார்த்து அவங்களை இங்கே வரச் சொல்லலாம்னுதான்..."

அம்மா ஒரு கணம் திகைத்து நின்ற மாதிரி இருந்தது. பிறகு தன்னிறைவுடன் "உன் விருப்பப்படியே செய்டா. எப்ப போகலாம் அவங்க வீட்டுக்கு? ஏன்னா என் மருமகளைப் பார்க்க ரொம்ப ஆசையா இருக்குடா" என்றாள். அவனுக்கு சந்தோஷம் தாளவில்லை.

நினைத்தபடியே சில நாட்களுக்குள் சேகர் நந்தினி திருமணமும் நடந்து முடிந்தது. ஒரு நல்ல நாளில் சேகரும், நந்தினியும் புது வீட்டுக்குக் குடியேறினார்கள். அம்மாவுந்தான்.

நந்தினி படபடப்பான டைப். எதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்கிறமாதிரித்தான் பேசுவது வழக்கம். பணத்திமிர் அதிகமாகவே இருந்தது. அவளது கோபத்துக்கும் வேகத்துக்கும் யாராலும் ஈடு கொடுக்க முடியாது. விளைவு நாலு நாளில் வேலைக்காரி வேலையை விட்டு நின்றுவிட்டாள்.

"பணத்தை விட்டெறிந்தால் ஆயிரம் பேர் வருவா" நந்தினி அலட்சியமாகப் பேசினாள்.

நந்தினி விட்டெறிந்த பணத்துக்கு வேலை செய்ய ஆட்கள் வந்தார்கள். ஆனால் யாருமே இரண்டு நாட்களுக்கு மேல் அங்கு தாக்குப்பிடிக்க இயலாது போனார்கள். சேகர் இதையெல்லாம் கண்டுகொள்ளவே இல்லை. மேலும் மேலும் உழைக்க வேண்டும். பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதிலேயே குறியாய், வெறியாய் இருந்தான்.

நந்தினி மேல் அவனுக்கு கொள்ளை கொள்ளையாய் மோகம் இருந்தது. பணத்தாலும், பட்டுப்புடைவையாலும், நகையாலும் அவளைத் திக்குமுக்காடச் செய்ய வேண்டும். தன் சிறு வயது நிலைமை தன் வாரிசுகளுக்கு வரக்கூடாது. என்றெண்ணித் தீவிரமாகத் தன் வேலைகளில் மூழ்கிப் போனான்.

கொதிக்கும் எண்ணெய்க்குப் பயந்து மூண்டெரியும் நெருப்புக்குள் வந்து விழுந்த கதையாயிற்று அம்மாவுக்கு. அவளால் அவளது வயதுக்கும் பலவீனத்துக்கும் ஏற்ப நந்தினியைச் சமாளிக்க இயலவில்லை.

மாடியில் தன் அறையில் நந்தினியின் இடுப்பில் கை போட்டுக்கொண்டு படுத்திருந்த சேகர் உறக்கம் கலைந்து எழுந்தான். பொழுது விடிந்து விட்டிருந்தது. மாடியில் இருந்து தோட்டத்தைப் பார்த்தவன் கண்களில் அந்த உருவம் தெரிந்தது.

அந்த அதிகாலை வேளையில் குவியலாக நிரம்பியிருந்த துணிகளைத் துவைத்தபடி... அம்மா? அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சொல்லி வைத்தாற் போல் கீழிருந்து அம்மாவும் அவனைப் பார்த்துச் சோகையாய்ச் சிரித்தாள்.



அம்மாவுக்கு ஒரு சிம்மாசனம் தரும் ஆசை பிள்ளைகளுக்கு அவர்கள் பிரம்மச்சாரிகளாக இருக்கும் போது ஏற்படக்கூடும். ஆனால் அவர்கள் மணம் முடித்து பெண்டாட்டி தாசர்களாகி விட்டால் அந்த ஆசைகள் நிராசைகளாகி விடும். நிச்சயம்.

— எம்.ரி. சிபாயா

# இந்தியரை மறக்கவே முடியாது என்கிறார் அமெ. ஜனாதிபதி மனைவி

நியூயார்க் மாநில செனட்டராக ஜனநாயகக் கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் அல்லவா ஹில்லரி கிளின்டன்? பதவியிலிருக்கும் ஒரு ஜனாதிபதியின் மனைவி இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல் தடவை.

எட்டு வருடங்களாக அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கிளின்டன் ஜனவரி 20-ஆம் தேதி ஓய்வு பெறப் போகிறார். அமெரிக்க தேர்தல் விதிகளின்படி ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட முடியாது. அதே சமயம், இப்போது செனட்டராக தேர்வு செய்யப்பட்டதன் மூலம், அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பைப் பெறுகிறார் ஹில்லாரி.

இதன் மூலம் நியூயோர்க் மாநிலம் குடியரசுக் கட்சியின் கோட்டை என்று இதுவரை இருந்து வந்த தோற்றத்தை ஹல்லரி தகர்த்துவிட்டார்.

வெற்றி பெற்றதுமே ஹில்லரி நியூயோர்க்கிலுள்ள புகழ்பெற்ற கிராண்ட் ஹயாத் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வெற்றி விழாவில் தன் கணவர் கிளின்டன் மற்றும் மகள் செல்ஷியுடன் கலந்து கொண்டார்.

ஹில்லரியுடன் பேசச் சிறிது வாய்ப்பு கிடைத்தது. கூடவே நின்றிருந்த கிளின்டன் ஹில்லரி சொல்வதை உன்னிப்பாக கவனித்து இடையிடையே 'வெல்டன்' என்று மனைவியைப் பாராட்டினார்.

**"நியூயோர்க் தேர்தலில் அமெரிக்கா வாழ் இந்தியர்களின் பங்கு என்ன?.**



" நிறைய இருக்கிறது. காலங் காலமாகவே இந்தியர்கள் ஜனநாயகக் கட்சியையே இங்கு ஆதரித்து வருகிறார்கள். அவர்கள் பல இடங்களில் என்னைப் பேச அழைத்தார்கள். எனக்காக தேர்தல் வேலை செய்தார்கள். என் வெற்றியில் பெரும்பங்கு ஆசியர்கள், கறுப்பர் இன மக்கள் ஆகியோருக்கு. தொழிலாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கும் இருக்கிறது. அவர்களை மறக்க முடியாது".

**"உங்கள் வெற்றியில் கணவரின் பங்கு எவ்வளவு?".**

" நிறைய உண்டு. நான் அரசியலில் இறங்க வேண்டும் என்று ஆசைப்பட்டவரே அவர் தான். சிறு வயது முதலே எனக்கு குழந்தைகள் நலம், பெண்கள் முன்னேற்றம், மருத்துவம் ஆகிய துறைகளில் ஆர்வம் உண்டு. இத்தனை ஆண்டுகள் என் கணவரின் வெற்றியே என் குறிக்கோளாக இருந்தது. இப்போதுதான் அதற்குச் சரியான சந்தர்ப்பம் வந்திருக்கிறது."

**"ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது நீங்கள் ஏன் உடன் செல்லவில்லை?**

" அந்தச் சமயத்திலேயே தேர்தல் பிரசாரத்தைத் துவக்கிவிட்டேன். நியூயோர்க் முழுவதும் சுற்றி வர வேண்டியிருந்தது. அதனால் அவருடன் இந்தியா செல்லும் நல்ல வாய்ப்பை இழந்தேன். அடுத்த வருடம் நானும் என் மகளும் இந்தியா போவோம். இந்தியாவில் பெண்கள் அதிக அளவில் அரசியலில் ஈடுபடுகிறார்கள். அது போல் அமெரிக்காவிலும் வர வேண்டும் என்பது என் விருப்பம்.

# பித்தன் பதில்கள்

ஏ. லோரன்ஸ், மன்னார்
**கே : சினிமா நடிகைகள் கனவு காண்பது உண்டா?**
ப : அநேகமான நடிகைகளுக்குக் கனவில் கர்ப்பத்தடை மாத்திரைகள் தோன்றுகின்றனவாம். இதற்கு என்ன பலனோ தெரியவில்லை.

ஏ. சமத், கஹற்றோவிட்ட
**கே : மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**
ப : மிருகங்கள் பொய் சொல்வதில்லை.

எம். ரமணன், இரத்தினபுரி
**கே : நாட்டில் இன்று கலப்படம் இல்லாமல் சுத்தமாகக் கிடைப்பது எது?**
ப : அரசியல்வாதிகள் சொல்லும் பொய்கள் நூற்றுக்கு நூறு வீதம் சுத்தமானவை.

ஆர். மனோகர், வவுனியா
**கே : ஒரு பெண் என்னைப்பார்த்து சிரிக்கிறாள். இதன் அர்த்தம் என்ன?**
ப : உங்கள் பணப்பை காலியாகப்போகிறது என்று அர்த்தம்.

ஐ. பரீனா, சிலாபம்
**கே : வாழ்க்கையில் துன்பம் இல்லாமல் இன்பமாக வாழ்வது எப்படி?**
ப : துன்பத்தை "து" என்று உதறிவிடுங்கள். அப்புறம் .....ன்பம் தானாகவே வந்து விடும்.

பி. சோமநாதன், திருகோணமலை.
**கே : மனிதனின் ஆணவத்தை எவ்வாறு அடக்கலாம்?**
ப : மனிதனுக்கு "ஆண்" அவம் இருப்பது நியதிதானே. "பெண்"ணால் தான் அதை அடக்க முடியும். ஏனென்றால் பெண்ணிடம் பெண்ணவம் இருப்பதில்லை.

வி. அமுதன், கொழும்பு
**கே : செத்த பிணத்தைப்பார்த்துச் சாகும் பிணம் அழுவது ஏன்?**
ப : செத்த பிணம் கண்ணீர் விடாது. எனவே தனக்கும் அதற்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டச்சாகும் பிணம் அவ்வாறு அழுகிறது.

ஜே. செல்லத்துரை, தோப்பூர்
**கே : நம்நாட்டில் யாருக்குச் சலுகைகள் அதிகம்?**
ப : எம்பிக்களுக்கு தங்களுடைய சம்பளத்தை அதிகரிப்பதற்குத் தாங்களே சட்டம் இயற்றக்கூடிய சலுகை வேறு யாருக்கும் இல்லையே!

சி. ஆறுமுகம், கிரான்
**கே : கல்யாணம் ஆனவுடன் கணவனும் மனைவியும் முதலில் செய்ய வேண்டிய காரியம் என்ன?**
ப : ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளவேண்டும். பின்னர் நாட்டு நடப்புகளை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். விலைவாசி பற்றி ஆராய்ந்து பார்த்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் தான் மற்றவை பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும்.

டி. எஸ். அகமது, கல்முனை
**கே : சொத்துக்களில் மிகப்பெரிய சொத்து எது?**
ப : நேரம். வாழ்க்கை பறந்து கொண்டிருக்கிறது. நாம் நேரத்தை அளந்து செயற்படாவிட்டால் அதோ கதிதான்.

கே.பி. முபீதா, புத்தளம்
**கே : உடல் நன்றாக இருக்க என்ன செய்ய வேண்டும்?**
ப : எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு வேலையைச் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

டி. கோவிந்தன், கண்டி
**கே : பெண்கள் மிகவும் விரும்புவது எதை?**
ப : முகம் பார்க்கும் கண்ணாடியை. கணவனையோ, குழந்தையையோ பார்க்காமல் ஒரு பெண்ணால் இருக்க முடியும். ஆனால் கண்ணாடியில் முகம் பார்க்காமல் இருக்கவே முடியாது.

கே. லட்சுமி, மாத்தளை
**கே : முன்னர் அரசியல் எப்படி இருந்தது? இப்போது எப்படி இருக்கிறது?**
ப : முன்னர் அரசியலில் பேசத் தெரிந்தவர்கள் மட்டும் இருந்தார்கள். இன்று ஏசத் தெரிந்தவர்கள் மட்டுமே இருக்கிறார்கள். தொண்டு செய்யத் தெரிந்தவர்கள் எந்தக் காலத்திலுமே அரசியலில் இருந்தது கிடையாது.

ஜே. புஹாரி, பேருவளை
**கே : இன்று யார் குரலுக்கு மதிப்பு அதிகம்?**
ப : சுவீப் டிக்கட் விற்பனை செய்யும் பையனின் குரலுக்கு உள்ள மதிப்பு வேறு யாருக்கும் இல்லை.

எம். சற்குணம், கொழும்பு
**கே : இன்று எல்லாக்கட்சிகளும் ஜனநாயகம் பேசுகின்றனவே!**
ப : ஆமாம். சினிமாவுக்கு "செக்ஸ்" எப்படியோ அப்படித்தான் அரசியலுக்கு ஜனநாயகம்.

எம். தனபாக்கியம், கொழும்பு.
**கே : இன்றைய தமிழ்ப் பெண்களில் பலர் 'நெற்றியில் திலகமிடுவதில்லையே காரணம் என்ன? தங்களை இனம் காட்டி 'செக் பாயின்டு' களில் மாட்டிக்கொள்ளக் கூடாது என்பதற்காகவா?'**
ப : அவர்களின் இனத்தை எப்படியும் அடையாள அட்டை காட்டிக் கொடுத்து விடுமே, திலகம் இடாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் அவர்கள் 'டமிள்' பெண்கள் என்பதுதான்.

வே. கந்தையா, திருகோணமலை.
**கே : இன்றைய அரசியல் நிலைமை எப்படியிருக்கிறது?**
ப : ஒரே குழப்பமாக இருக்கிறது. வடக்கு கிழக்கோடு மலையகமும் கொந்தளிக்கத் தொடங்கிவிட்டது.

என். நூர்டீன், களுத்துறை.
**கே : பத்திரிகை நடத்துவதா, சினிமாப்படம் எடுப்பதா சுலபம்?**
ப : படம் எடுப்பதுதான் சுலபம். ஏனென்றால் கதை இல்லாமல் படம் எடுக்க முடியும். ஆனால் விஷயம் இல்லாமல் பத்திரிகை நடத்த முடியாது.

வி. இராமலிங்கம், காரைதீவு.
**கே : விலைவாசிகள் நாளுக்கு நாள் உயர்வது எதைக் காட்டுகிறது?**
ப : அரசாங்கத்தை நடத்துபவர்களுக்கு மக்களின் வோட்டுகளில்தான் நாட்டம் மற்றப்படி அவர்களின் நல்வாழ்வில் அல்ல என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

பி. விநாயகமூர்த்தி, கொழும்பு
**கே : கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றிற்கு விளக்கம் தரமுடியுமா?**
ப : இவற்றிற்கு தி.மு.க. காரர்கள் ஒரு விளக்கம் கூறுவார்கள். அ.தி.மு.க காரர்கள் இன்னொரு விளக்கம் கூறுவார்கள். என்னுடைய விளக்கம் இதுதான்; குடும்பத்தைக் காப்பாற்றுவது கடமை. கௌரவமாக வாழ்வது கண்ணியம். தேவையற்ற உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது கட்டுப்பாடு.

கு. தேவி, கொழும்பு.
**கே : உங்களுக்குப் பிடிக்காதவர்கள் இருக்கிறார்களா?'**
ப : இருக்கிறார்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களையும், நம்பிக்கைத் துரோகம் செய்பவர்களையும் நன்றி மறந்தவர்களையும் எனக்கு அறவே பிடிக்காது.

வி. அருள்பாரசன், பசறை.
**கே : அழுதுகொண்டே பிறக்கும் மனிதன் சாகும் போதும் அழுகிறானா?**
ப : பிறப்பு, வாழ்வு, மரணம் மூன்றிலும் அழுகை உண்டு. பிறக்கும் போதும் வாழும் போதும் அழுவது வெளியில் கேட்கிறது. சாகும்போது அழுவது மட்டும் வெளியில் கேட்பதில்லை. அதுதான் வித்தியாசம்.

# சந்திரிகா-பிரபா பேச்சுக்கு லண்டனில் தீவிர முயற்சி

சடலங்களுக்கு அருகில் இருந்த தடயப்பொருட்களைப் பொலித்தீன் உறைகளில் போட்டு அளவெடுத்து, சோக் பீஸால் அடையாளங்கள் வரைந்து கிளிக்... கிளிக் எனப் படமெடுத்து, குறிப்பெடுத்து.... உடல்கள் அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றப்பட்டபோது, மிஸ்டர் பிளேக், ஜூனியர் சார்ளியின் காதுகளில் எதையோ கிசுகிசுக்க, அடுத்த கணம் தன் 'கவாசாகி'யில் அம்புலன்ஸை பின் தொடர்ந்தான் சார்ளி.

மறு கணம் சர்ரென்று வந்துநின்றது ஒரு 'ஜகுவார்! டிரைவர் சீட்டில் இருந்தபடியே முன்பக்கக் கதவைத் திறந்து விட்டாள் மிஸ்மேயர். தனது கார் டிரைவரை, அலுவலகத்துக்குப் போகச் சொல்லிச் சைகை காட்டிய மிஸ்டர் பிளேக் ஜகுவாருக்குள் நுழைந்ததும் அது சீறிப்பாய்ந்து ஓடியது.

என்ன?... ஏன் இந்த நேரம்?... என்று அவர் பேச்சைத் தொடங்க இடைமறித்தாள் மேயர்.

''சமாதானப் பேச்சு... பிரபாகரன் பற்றித் தெரிந்து கொள்ள எனக்கு ஆசையிருக்கக் கூடாதா?''

''டார்லிங்! சமாதானத்துக்காக இப்போது கூட அடி மட்டத்திலான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் படிப்படியாகவே முன்னெடுத்துச் செல்லப் படும் என்றும் தூதரக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால்....''

மிஸ்டர் பிளேக் சஸ்பென்ஸுடன் நிறுத்தினார். அதே நேரம் மிஸ் மேயர் ஓடிக் கொண்டிருந்த 'ஜகுவாரை' நடுரோட்டில் கிறீச்சிடச் செய்தார். பின்பு இடது புறமாக ஸ்டியரிங்கைத் திருப்பி பாதையோரமாக நிறுத்தி விட்டு மிஸ்டர் பிளேக்கை ஒருவித இறுமாப்போடு பார்த்தாள். அவள் பார்வையில் ஆனால்...? என்ற கேள்வி தெரிந்தது.

எதையும் பொருட்படுத்தாமல் மிஸ்டர் பிளேக் சீரியஸ்சாகப் பேசத் தொடங்கினார்.

''ஒரு மாத தனிப்பட்ட விஜயம்' என்று 'அம்மணி லண்டன் போனார் அல்லவா, எல்லாம் காரியமாகத்தான். அங்கே அவரது நடவடிக்கைகள் பலவும் இனப்பிரச்சினை விவகாரத்துடன் தொடர்புபட்டவையாகவே இருக்கின்றன. சில அந்தரங்கமான சந்திப்புகள் நடைபெற்றிருக்கின்றன என்று நமது அமைச்சர் ஒருவர் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறார்.

இலங்கைக்கு வந்து அம்மணியைச் சந்திக்காமல் போன பிரிட்டிஷ் வெளியுறவுப் பிரதி அமைச்சர் பீட்டர் ஹெயினுடன் அம்மணி லண்டனில் அடுத்தவாரம் பேசவுள்ளார்.

இதற்கிடையில் லண்டனில் அதிகார அம்மணி தரப்பில் இருந்து சில முக்கிய விடயங்கள் புலிகள் தரப்புக்குப் பரிமாறப்பட்டிருக்கின்றன. இவை மிக அந்தரங்கமான ஆவணங்கள்.

தொடர்புடைய எவரும் இது பற்றிப் பகிரங்கமாகத் தெரிவிக்காவிட்டாலும் உயர்மட்டத்தில் சிலரிடம் இது சம்பந்தமாகப் பேச்சடிபடுகிறது.'' மிஸ்டர் பிளேக் கூறிக் கொண்டிருக்கையில் செல்போன் ஒலித்தது.

போனின் ஏரியலை இழுத்து விட்டு ''ஹலோ'' என்ற மிஸ் மேயர் அடுத்த சில கணங்களில் 'அந்த மினிஸ்டர்' தான் என்று போனை பிளேக்கின் கையில் கொடுத்தாள்.

ஏழெட்டு நிமிடங்களின் பின் போனை மேயரிடம் நீட்டிய பிளேக் ''நல்ல தகவல்தான்'' என்றார். ''என்னவாம்'' என்றாள் மேயர்.

''பிரபாகரனும், சந்திரிகாவும் நேரடியாகப் பேசப்போகிறார்கள் போல் தெரிகிறது. அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள தரப்பினர், இருவரையும் ரகசியமாகப் பேசவைக்க ஏற்பாடுகளைச் செய்கின்றார்கள் எனத் தகவல் கிடைத்திருக்கிறது.

செய்மதி, தொலைபேசி மூலமாக இத் தொடர்பு ஏற்படுத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சொன்னாலும் அவருக்கே இதனை உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டி யிருக்கிறதாம்'' என்ற படி மிஸ்டர் பிளேக் மணியைப் பார்த்து விட்டு ''புறப்படுவோமா'' என்றார்.

''எங்கே! ரெஸ்ரோரண்டுக்குத் தானே! -- கண்ணைச் சிமிட்டிவிட்டு ஜகுவாரை உயிர்ப்பித்தார் மிஸ் மேயர்.

ஆளரவமற்ற நெடுஞ்சாலையில் ஜகுவார் 120 மைல் வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

Shakthi சக்தி TV

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | பெப்சி உங்கள் சொய்ஸ் | காலைக்கதிர் (நேரடி ஒளிபரப்பு) |
| 11.30-12.00 | | | | | | பாட்டுக்குப் பாட்டு | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | சன் டிவி நிகழ்ச்சி |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| 13.30-14.00 | அக்கா | அக்கா | அக்கா | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | வசந்த நிலா |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | சன் டிவி நிகழ்ச்சிகள் | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஸ்ண தாஸி | கிருஸ்ண தாஸி | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | மீண்டும் கோமாளிகள் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகன் | அரட்டை அரங்கம் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | இசைக் கோலம் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | ஆலயம் | ஆலயம் | ஆலயம் | ஆலயம் | ஆலயம் | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஒசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | புன்னகை |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | மின்னல் |

பக்கத்து வீடு

# கருணாநிதிக்கு மாறன் தேடித்தந்த ஆறுதல்!



கருணாநிதி

தமிழகப் பொதுத்தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைத் தேர்தல் ஆணையாளர் மேற்கொண்டிருக்கிறார். வாக்காளர்களுக்கு அடையாளக் கார்ட் விநியோகிக்கப்படுகிறது. வாக்காளர் பட்டியலும் தயாராகி விட்டது.

தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி தேர்தலை எதிர்நோக்குவதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்வதற்குத் தடையாக இரு விடயங்கள் இருந்தன.

கன்னட நடிகர் ராஜ்குமார் சந்தன வீரப்பன் பிடியில் சிக்கியிருந்தது ஒரு விடயம்.

மருமகன் முரசொலிமாறன் கடும்சுகயீனமுற்று உயிருக்கு மன்றாடியது அடுத்த விடயம்.

ராஜ்குமார் திடீரென விடுதலை செய்யப்பட்டார். அதன்மூலம் ஒரு தலையிடியிலிருந்து விடுபட்டார் கருணாநிதி. அத்துடன் பாராட்டுதல்களையும் அவர் பெற்றுக் கொண்டார்.

முரசொலிமாறன் நோய்வாய்ப்பட்டது கருணாநிதிக்குத் தாங்க முடியாத வேதனையை ஏற்படுத்தி விட்டது. முரசொலிமாறன் அவருக்கு மருமகனாக இருப்பதுடன் தி.மு.க.வின் செல்வாக்குப் பெற்ற தலைவராகவும் ஜொலிக்கிறார். மத்திய அரசில் ஒரு சிரேஷ்ட அமைச்சர். அவருக்கு ஏதாவது நேர்ந்தால் அதனால் ஏற்படும் விளைவுகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் போய்விடும்.

முதலமைச்சர் அலுவல்களைக் கவனித்துக் கொண்டு ஆஸ்பத்திரியிலேயே சிலநாட்கள் நீண்டநேரம் தங்கிவிட்டார் கருணாநிதி. ஆயினும் திறமையான டாக்டர்களின் கவனிப்பினால் மாறன் ஆபத்தான கட்டங்களைக் கடந்து விட்டார். மிகவும் வேதனைகளைத் தந்த இருவேறு கட்டங்களைக் கடந்து விட்டதற்காகப் பெருமூச்சு விட்டார் கருணாநிதி.

மத்திய அரசில் அமைச்சராக இருந்த ரங்கராஜன் குமாரமங்கலம் நோய்வாய்ப்பட்டு காலமாகிச் சிலமாதங்களே கழிந்திருந்தன. அதற்குள் மற்றொரு தமிழ் அமைச்சரும் கடும் சுகவீனமுற்றது தமிழக மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியிருந்தது.

அதிலும் குமாரமங்கலம் ஆஸ்பத்திரியில் சரியான முறையில் சிகிச்சை அளிக்கப்படாத காரணத்தினாலேயே உயிரிழந்தார் என்று புகார் தெரிவிக்கப்பட்டதும் உண்டு. அவருடைய மரணத்திற்கான காரணம் இன்னும் மர்மமாகவே இருக்கிறது.

முரசொலிமாறனுக்கு ஏற்பட்டது கடுமையான இருதயநோய் ஆகும். அவருக்கு மூச்சு விட முடியாமல் திணறல் ஏற்பட்டது. நல்லவேளையாக அவர் அப்போது வீட்டில் இருந்தார். அவருடைய டாக்டர் மகளான தமிழரசியும் வீட்டில் இருந்தார். அப்பாவுக்கு ஏற்பட்ட நோயின் தன்மையை உணர்ந்து கொண்டு தமிழரசி உடனடியாக ஊசிமூலம் ஒரு குறிப்பிட்ட மருந்தை அப்பாவுக்கு ஏற்றியிருக்கிறார். பின்னர் அப்பலோ மருத்துமனைக்குக் கொண்டு சென்றார். சரியான நேரத்தில் சரியான முதலுதவியைச் செய்ததற்காக மகளை மருத்துவ நிபுணர்கள் பாராட்டினர்.

முரசொலிமாறனின் இருதயத்தில் இடதுபுறம் நன்கு செயற்படுகிறது. வலதுபுறம் பாதிக்கப்பட்டு விட்டது. வெளிநாட்டு மருத்துவ நிபுணர்களும் வந்து துரித சிகிச்சை அளித்ததால் ஆபத்தைக் கடந்து விட்டார். அவர் பூரணகுணம் அடைய நாள் செல்லும் என்று தெரியவருகிறது.

முரசொலிமாறன் ஆபத்தான கட்டத்தைக்கடந்து விட்டது கருணாநிதிக்குப் பெரும் ஆறுதல்தான். அத்துடன் முரசொலிமாறனின் உடல் நிலைபற்றி அறிய ஆஸ்பத்திரிக்கு வந்தவர்கள் கூறிய ஆறுதல்மொழிகளும் கருணாநிதிக்குத் தெம்பினைத் தந்திருக்கிறன. அதிலும் குறிப்பாக மூப்பனார் ஒரு மாலை நேரம் ஆஸ்பத்திரிக்கு வந்தவர் நள்ளிரவு கடந்த பின்னரும் கருணாநிதியுடன் அமர்ந்து உரையாடியிருக்கிறார்.

அவ்வேளையில் தமிழக சட்டசபைக் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்த நேரம். முதல்மைச்சர் தமது மருமகனின் நோய் குறித்து மிகவும் கவலைகொண்டிருக்கும் வேளையில் அவரைத் தமது கட்சி உறுப்பினர்கள் சட்டசபையில் சீண்டாமல் இருக்க வேண்டும் என்று மூப்பனார் உத்தரவிட்டார் என்றும் ஒரு தகவல். சட்டசபையில் எதிர்க்கட்சியான தமிழ் மாநில காங்கிரஸ் நட்புக் கட்சியாக மாறியதை அவதானிக்க முடிகிறது.

கருணாநிதியும் மூப்பனாரும் மீண்டும் நெருங்கி வருகிறார்கள் என்று தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் சம்பவம் ஜெயலலிதாவை அதிரவைத்து விட்டது. மூப்பனாரை ஒரேயடியாக ஒதுக்கி வைக்காமல் சமாதானமாகப் போகும் நிலைக்கு ஜெயலலிதா வந்திருந்தார். ஆயினும் அப்பலோ ஆஸ்பத்திரியில் முரசொலிமாறனின் நோய்ப்படுக்கைக்கு அருகில் கருணாநிதியும் மூப்பனாரும் "உருகினார்கள், நெருங்கினார்கள்" என்ற தகவல் கிடைத்ததும் ஜெயலலிதா சீற்றத்தின் உச்சிக்கே சென்று விட்டார்.

மூப்பனாரின் தளபதியான சிதம்பரமும் முரசொலிமாறனின் ஆபத்தான தேகநிலையைக் கண்டு மனமுருகிப் போய் விட்டார். மருமகன் மாறன், மகன் ஸ்டாலின் ஆகியோரை முன்னுக்குக் கொண்டு வந்து பரம்பரை ஆட்சியை ஏற்படுத்த கருணாநிதி முயலுகிறார் என்று பழி சுமத்தியவர் வை.கோபாலசாமி.

இன்று வை.கோ. கருணாநிதியின் நெருக்கத்தை விரும்பி தி.மு.க.வுடனான தமது உறவு மேலும் பலப்படும் என்று கூறிவிட்டார். டாக்டர் ராமதாஸ் ஜெயலலிதா அணிக்கு மாறமாட்டார் என்றும் உறுதியாகக் கூறிவிட்டார்.

வை.கோவின் மகளுடைய திருமணம் நடைபெற்றது. கருணாநிதியும் மூப்பனாரும் மீண்டும் அந்தத் திருமண வீட்டில் கட்டித் தழுவிக் கொண்டார்கள். மத்திய அரசின் முக்கிய அமைச்சர்களும் கலந்து கொண்ட அந்தத் திருமணத்தில் மணமக்களை ஆசீர்வதிக்க புலிகள் தலைவர் பிரபாகரனின் பெற்றோர் வந்திருந்தனர். அவர்களின் கால்களில் மாத்திரம் வீழ்ந்து மணமக்கள் ஆசி பெற்றனர்.

பொதுத் தேர்தலின் போது கருணாநிதி தமது தற்போதைய ஆட்சியில் தாம் மேற்கொண்ட சிறப்பான பணிகளை விளக்கி மக்களின் ஆதரவைப் பெற முயலுகிறார். அவருடைய ஆட்சியில் குறைகளை விட நிறைவான செயற்பாடுகளே அதிகம் என்பது பொதுமக்கள் கணிப்பு மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

ஜெயலலிதா தனித்து நின்று கருணாநிதியை வீழ்த்திவிடும் நிலையில் இன்று இல்லை. ஒரு வலுவான அணியை அவர் ஏற்படுத்தினாலும் சிறைத்தண்டனை பெற்ற அவர் தேர்தலில் கலக்கி எடுப்பதும் சுலபம் அல்ல.

இந்நிலையில் கருணாநிதியும் மூப்பனாரும் மீண்டும் நட்புறவு கொள்கிறார்கள் என்றால் அது நிச்சயமாக ஒரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியே தீரும்.

—கதாசி.



முரசொலிமாறன்

## தர்மத்தின் வழியில் சென்று...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வேநாட்டு சமாதானக் குழுவினரை அண்மையில் வன்னியில் நாம் சந்தித்தபோது எமது இயக்கத்தின் இந்த நிலைப்பாட்டைத் தெளிவாக அழுத்தம் திருத்தமாக எடுத்து விளக்கினேன்.

### நிபந்தனை விதிக்கவில்லை

சமாதானப் பேச்சுக்களுக்கு நாம் நிபந்தனையெதையும் விதிக்கவில்லை- ஆயினும், பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ண புறநிலையும், இயல்புநிலையும் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை என்றுமே நாம் வலியுறுத்திவருகிறோம்.

### தனித்துவமான இன அடையாளம்

ஈழத்தமிழர்கள் தனித்துவமான இன அடையாளத்தைக் கொண்டவர்கள். ஒரு தேசிய இனக் கட்டமைப்போடு அந்த இனத்துவப் பெருமையோடு வாழும் ஒரு மக்கள் சமூகம். அவர்களுக்கு வரலாற்று ரீதியான தாயக மண்ணாகச் சொந்த நிலம் உண்டு.

எமது மக்கள் விரும்புவதெல்லாம் ஒன்றுதான். தமது சொந்த மண்ணில் நிம்மதியாக வாழவேண்டும் என்பது தான். மற்றவர்களின் அதிகார ஆதிக்கமோ, நெருக்குவாரங்களோ இல்லாத ஒரு அரசியல் சூழலில் தம்மைத் தாமே ஆட்சிபுரிந்து கௌரவமாக வாழ வேண்டும் என்பதே எமது மக்களின் ஆழமான அபிலாஷைகளாகும்.

### சந்தேகம்

சிங்கள மக்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் புரிந்துணர்வின் அத்திவாரத்திலிருந்துதான் நியாயமான, நிரந்தரமான தீர்வைக் கட்டியெழுப்புவது முக்கியமாகும். தமிழர் பிரச்சினைகளின் அடிப்படைகளை உணர்ந்து சமாதான வழியில் தமிழர்களுக்கு நீதி வழங்கச் சந்திரிகா அரசு முன்வருமா என்பது எமக்குச் சந்தேகமே.

எனவே, சிங்கள இனவாத ஆட்சியாளரை சமாதானப் பாதைக்குத் திருப்ப வேண்டுமென்றால் சிங்கள அரசிற்குப் பொருளாதாரத் தீனிபோட்டுவரும் உலக நாடுகளிடம் தான் கடிவாளம் இருக்கிறது. தென்னிலங்கை சமூகக் கட்டமைப்பின் சகல மட்டங்களிலும் பூதாகரமாக வளர்ந்துவரும் சிங்கள-பௌத்த பேரினவாதம், தமிழ் மக்களை காருண்யத்துடன் அரவணைத்துக் கொள்ளுமென நாம் நினைக்கவில்லை.

### தமிழீழத் தனியரசு

சிங்களத் தேசம் இனவாதப் பிடியிலிருந்து விடுபடாமல் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையைத் தொடருமானால் நாம் பிரிந்துசென்று தமிழீழ தனியரசை அமைப்பதைவிட வேறுவழியில்லை.

காலமும், வரலாறுகளும் எமது போராட்ட இலட்சியத்துக்கு நியாயம் வழங்கியே தீரும். அப்போது உலகமும் அதனை ஏற்றுக் கொள்ளும்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மை அழித்துக் கொண்ட மாவீரர்கள் சரித்திரமாக நின்று எமக்கு வழிகாட்டுவார்கள். அந்தத் தர்மத்தின் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி.

## பிரபாகரனின் அறிவுப்பு...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிலங்கைச் சமூகக் கட்டமைப்பின் சகல மட்டங்களிலும் பூதாகரமாக வளர்ந்து வரும் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களைக் காருண்யத்துடன் அரவணைத்துக் கொள்ளுமென நாம் நினைக்கவில்லை.

சிங்களத் தேசம் இனவாதப் பிடியிலிருந்து விடுபடாமல் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையைத் தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனி அரசை அமைப்பதைவிட வேறு வழியில்லை.

காலமும் வரலாறுகளும் எமது போராட்ட இலட்சியத்துக்கு நியாயம் வழங்கியே தீரும். அப்போது உலகமும் அதனை ஏற்றுக்கொள்ளும்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மை அழித்துக்கொண்ட மாவீரர்கள் சரித்திரமாக நின்று எமக்கு வழிகாட்டுவார்கள். அந்தத் தர்மத்தின் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி"

நிபந்தனையின்றிப் பேச்சு நடத்தத் தயார் என்று சும்மா சொன்னால் போதுமா? இந்தத் தமிழீழ இலட்சியத்தையுடையவர் பிரபாகரன். அவர் பேச்சுவார்த்தைக்குப் போவாரா? பேச்சுவார்த்தைக்கு அரசம் இணங்கும் பட்சத்தில் தப்பித்தவறி ஏதாவது தீர்வு ஏற்பட்டால் பிரபாகரன் என்ன செய்வார்? அவருடைய தமிழீழ இலட்சியம் என்னவாகும் என்று எதிர்ப்பாளர்கள் கேட்கிறார்கள்.

எது எப்படி இருந்தபோதிலும் எதிர்ப் பாளர்கள் பிரபாகரனின் இலட்சிப் பற்றையும் நெஞ்சுறுதியையும் ஆளுமையையும் என் னென்று சொல்வதென்று வியப்புற்று நிற்கிறார் கள்.

# ராசி பலன்

பொ.சந்திரன்

3-12-2000 இருந்து 9-12-2000 வரை



**மேடம்:- அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

இராசிநாதன் செவ்வாய் ஆறாம் வீட்டில் இருந்தாலும் குருபகவானின் திருஷ்டி கிடைப்பதால் ஆறுதல் உண்டு. பண வருவாய் பரவாயில்லை. கல்வியில் ஆர்வம் இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சில சமயம் சளி, இருமல் வரவாய்ப்புண்டு. வீடு, வாகனங்களால் சுகம் உண்டு. மனம் கட்டுக்கடங்காமல் இருக்கும். எதிரிகளால் தொல்லை இல்லை. குடும்பத்தில் அமைதி நிலவும். தெய்வதரிசனம், தலயாத்திரை அமையும். நண்பர்களால் உதவியுண்டு. தொழில் செய்யும் இடத்தில் பொறுப்பு உண்டு. புகழ் உண்டு.



**இடபம்:- கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

இராசிநாதன் பாக்கியஸ் தானத்தில் இருப்பது அதிஷ்டமே. பணப்புழக்கம் பரவாயில்லை. கல்வியில் முன்னேற்றம் உண்டு. தேகசுகம் நன்றாகஇருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. உறவினர் நண்பர்களால் உதவியுண்டு. மனதில் தீவிரமான எண்ணங்கள் தோன்றும் பின்அமைதி யடையும். எதிரிகள் செய்யும் தீமை நன்மையில் முடியும். குடும்பத்தில் பூரண அமைதி நிலவும். காதலர் வாழ்வில் தென்றல் வீசும். தொலைந்த பொருள் துலங்கும். கனவில் தெய்வீகக் காட்சி தென்படும். தொழில் யோகம் உண்டு. பதவி உயர்வுண்டு. சில சமயம் இடமாற்றம் உண்டு.



**மிதுனம்:- மிருகசீரிடம் 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

இராசிக்கு சனியின் பார்வை கிடைப்பதும் இராசிநாதனுக்கு குருவின் பார்வை கிடைப்பதும் ஓர் அளவுக்கு நன்மை. பணம் கையில் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். தேகசுகம் நன்றாக இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உறவினர் நண்பர்கள் விசுவாசமாக இருப்பார்கள். மனதில் தீவிரமான எண்ணங்கள் தோன்றும். மனதில் நிம்மதி இருக்காது. எதிரிகளால் சிலசமயம் பாதிப்புக்கு ஆளாகலாம். குடும்பத்தில் விரோதப் போக்கு தென்படும். விசுவாசம் இருக்காது. தொழிலில் பேர், மதிப்பு உண்டு. வேலைப்பளு இருக்கும்.



**கடகம்:- புனர்பூசம் 4. பூசம், ஆயிலியம்**

இராசிநாதன் சந்திரன் எட்டாம் வீட்டில் இருந்து பத்தாம் வீடு வரை சஞ்சரிப்பதும் இராசிக்கு சுக்கிரனின் பார்வை கிடைப்பதும் நல்ல அறிகுறி. பொருளாதாரம் சுமாராக இருக்கும். உடல்நிலை நன்றாக இருக்கும். சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள் விசுவாசமாக இருப்பர். வீடு, வாகன சுகம் உண்டு. நித்திரைக்கு பங்கம் உண்டு. மனம் சமநிலையில் இருக்கும். யதார்த்தமான எண்ணங்கள் உதயமாகும். எதிரிகள் உங்களைக் கண்டு பொறாமைப்படுவார்கள். புதிய காதல் தோன்றும் பழைய காதலர் கைப்பிடிப்பர். உயர்கல்வி வாய்ப்பு பெறுவீர்கள். தொழில் செய்யும் இடத்தில் அமைதி இராது.



**சிங்கம்:- மகம், பூரம், உத்தரம் 1.**

இராசிநாதன் சூரியன் சுகஸ்தானத்தில் குருவின் பார்வை பெற்று இருப்பது எல்லா வகையிலும் நல்லது.பழைய கடன் வசூலாகும். கல்வியில் மேற்படிப்புக்கு இடம் உண்டு. உடல்நிலையில் சற்று தளர்ச்சி ஏற்படும். இனபந்துக்களின் ஆதரவு இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. மனதில் தெய்வீக எண்ணம் இயல்பாக உதயமாகும். தொலைந்த பொருள் தெரியவரும். எதிரிகள் சிலசமயம் நண்பராகலாம். கணவன் மனைவியிடையே நல்லுறவு நீடிக்கும். காதலர் கருத்தொருமித்து நடப்பர். தொழில் செய்யும் இடத்தில் உங்கள் பொறுப்பு அதிகமாகும்.



**கன்னி:- உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

இராசிக்கும் இராசிநாதனுக்கும் குருவின் பார்வை கிடைப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். கல்வியில் முன்னேற்றம் இருக்கும். உடற்சுகம் நன்றாக இருக்கும். வாகனங்கள் மத்திம வருவாய் தரும். வீட்டில் சிலதிருத்த வேலை இருக்கும். மனம் உலகியல் போகங்களை விரும்பினாலும் இடைக்கிடையே தெய்வீக நாட்டம் இருக்கும். எதிரிகள் வலி கெட்டு பலமிழந்து போவர். குடும்பத்தில் வாக்குவாதத்துடன் கூடிய அமைதி நிலவும். உறவினர்களுடனும் நண்பர்களுடனும் கூடிப் பழக சந்தர்ப்பம் கிடைக்கும். காதலர்களுக்கு முக்கிய நன்மைகள் கிட்டலாம்.



**துலாம்:- சித்திரை 3,4. சுவாதி, விசாகம் 1,2,3.**

இராசிநாதன் சுக்கிரன் சுகஸ்தானத்தில் குருவின் பார்வை பெற்று இருப்பதால் திறமையான பலனை எதிர்பார்க்கலாம். மேலும் சனியின் வக்கிரப் பார்வையால் பலன்கள் தாமதமடையலாம். பணம் தாராளமாகக் கிடைக்கும். கல்வியில் பாரிய முன்னேற்றம் உண்டு. தூரப் பிரயாணம் அமையும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். உடல் ஆரோக்கியம் சில சமயம் பாதிக்கலாம். வீடு, வாகனங்களால் நன்மையுண்டு. மனம் யதார்த்தமற்ற எண்ணங்களில் சிக்கித் தவிக்கும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும்.



**விருச்சிகம்:- விசாகம் 4. அனுஷம், கேட்டை**

இராசிநாதன் செவ்வாய்க்கும் இராசிக்கும் குருபகவானின் பார்வை கிடைப்பது பாக்கியமே. தட்டுப்பாடு இருந்தாலும் பணம் வரும். கல்வியில் முன்னேற்றம் இருக்கும். தேகசுகம் உண்டு. முன் இருந்த நோய் விலகும். உறவினராலும் சகோதரங்களாலும் பெரிதாக உதவி இருக்காது. நண்பர்கள் உதவுவர். மனம் ஆனந்தத்திலும் சமநிலையிலும் இருக்கும். எதிரிகளால் உதவி கிட்டலாம். முன்னர் நடந்த நிகழ்வுகள் ஞாபகத்துக்கு வரும். குடும்பத்தில் பூரண அமைதி நிலவும். புதிய காதலர்கள் உருவாவர்.



**தனு:- மூலம், பூராடம், உத்தராடம் 1.**

இராசிநாதன் குருபகவான் ஆறாம் வீட்டில் இருப்பதும் ராகு, கேதுக்களின் தொடர்பு இருப்பதும் மத்திமபலனையே எதிர்பார்க்கலாம். பொருளாதாரம் தாராளமாக இருக்கும். கல்வியில் முன்னேற்றம் உண்டு. உடல் சமநிலையில்சிறிது மாற்றம் காணலாம். வீடு, வாகனங்கள் செலவை உண்டு பண்ணும். இனபந்துக்கள் சில சமயம் பகையாகலாம். மனம் அமைதிக்கு வராது. சிலசமயம் வக்கிரமான எண்ணங்களில் மூழ்கலாம். எதிரிகளால் பணச் செலவு ஏற்படலாம். தொழிலில் அமைதி நிலவும்.



**மகரம்:- உத்தராடம் 2,3,4. திருவோணம், அவிட்டம் 1,2.**

இராசியில் சுக்கிரன் இருப்பதாலும் குரு, சூரியன் ஆகிய கிரகங்களின் பார்வை கிடைப்பதாலும் பல நன்மையான காரியங்கள் நிகழும். வெளிநாட்டுத் தொடர்பு, பிரயாண வாய்ப்பு உண்டு. பணத்தட்டுப்பாடு நிலவும். சிலசமயம் கடன்பட நேரிடலாம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கல்வியில் முன்னேற்றம் உண்டு. வீடு, வாகனங்களால் பெரிதாக இலாபம் இல்லை. உறவினரின் ஆதரவு மட்டுப்பட்டே இருக்கும். மனதில் நல்ல ஆரோக்கியமான எண்ணங்கள் தோன்றும். எதிரிகள் விலகி ஓடுவர். குடும்பத்தில் பாசமழையும் காதலர் வாழ்வில் தேன் மழையும் உண்டு.



**கும்பம்:- அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

இராசிநாதன் சனீஸ்வரன் கேள்வி வீரியஸ்தானமான மூன்றாம் இடத்தில் வக்கிரக கதியில் இருப்பதால் பொதுவாக நன்மையே செய்வார். பணத்தட்டுப்பாடுவர வாய்ப்பில்லை. கல்வி முன்னேற்றம் இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சுற்றத்தாரும் உறவினரும் அன்பாக இருப்பர். வீடு, வாகனங்களால் நன்மையடைவீர்கள். மனம் அலைமோதி அமைதிக்கு வரும். எதிரிகளால் இலாபம் அடைவீர்கள். குடும்பத்தில் அமைதியும் காதலர் வாழ்வில் தென்றலும் வீசும். தொழில் அமைதியுண்டு.



**மீனம்:- பூரட்டாதி 4. உத்தரட்டாதி, ரேவதி**

இராசிநாதன் குருபகவான் மூன்றாம் வீட்டில் இருப்பதும் செவ்வாயின் பார்வை கிடைப்பதும் மத்திமமான பலனே. பணத்தட்டுப்பாடு நிலவும். கல்வியில் முன்னேற்றம் இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உறவினர் நண்பர்களின் ஆதரவு இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. வாகனம் ஓட்டுவதில் கவனம் தேவை. மனச்சஞ்சலம் இருக்கும். உலக ஆசையில் ஈடுபாடு அதிகமாகும். எதிரிகள் நண்பர்கள் ஆகலாம். குடும்பத்தில் சமநிலையும் காதலர் வாழ்வில் ஆனந்தமும் இருக்கும். தொழில் செய்யும் இடத்தில் குழப்பம் நிலவும்.

## குறட்டையால் கேடு அசட்டை செய்யாதீர்

குறட்டை இதயத்தையும் உடல் நலத்தையும் பாதிக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

50 வயதுக்கு மேற்பட்டவர்களில் 50 சதவீதம் ஆண்களும் 30 சதவீதம் பெண்களும் குறட்டை விடுகிறார்கள். மாரடைப்பு, முடக்குவாதம் ஆகியவை ஏற்படவும் குறட்டை காரணமாக அமைகிறது என்று இந்திய இதயப் பாதுகாப்பு நிறுவனத்தின் துணைத் தலைவர் டாக்டர் அகர்வால் கூறியிருக்கிறார்.



குறட்டையைக் குறைக்கவும் அதனால் ஏற்படும் பல பிரச்சினைகளைத் தவிர்க்கவும் முயற்சிகள் பலவற்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் எடை அதிகமானால் உடல் சதையைக் குறைக்க முயற்சி செய்யுங்கள். உடல் எடை அதிகமாக இருப்பதுதான் பெரும்பாலும் குறட்டைக்குக் காரணமாகிறது.

ஒருக்களித்து படுத்துத் தூங்குங்கள். மல்லாந்து படுப்பதைத் தவிர்த்திடுங்கள். மல்லாந்து படுக்கும்போது நமது நாக்கு தொண்டைக் குழியைப் பாதி அளவுக்கு அடைத்துக் கொண்டு விடுகிறது.

மூச்சுக் காற்று மூச்சுக் குழல்களுக்குள் செல்வதை அது தடுக்கிறது.

மூக்குத் துவார அடைப்பு அல்லது தடையைச் சரி செய்யுங்கள். ஒவ்வாமை அல்லது மூக்கு துவாரத்தில் ஏற்படும் பிற பிரச்சினைகள் மூக்கு வழியாக மூச்சு செல்வதை மட்டுப்படுத்துகிறது.

இவ்வாறு மூக்கு வழியாக சுவாசிக்க வேண்டிய நிலை ஏற்படும். வாயில் தளர்ந்த நிலையில் உள்ள தசைகள் அதிகமாக உள்ளன.

மது, வலி அகற்றும் மருந்துகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த அல்லது தவிர்க்க வேண்டும். ஏனென்றால் அவை மத்திய நரம்பு மண்டலத்திற்கு அளவுக்கு அதிகமான அழுத்தத்தைக் கொடுத்து விடுகின்றன. இவை தசைகளை இறுகத் தளர்ச்சிக்கு ஆளாக்கி விடுகின்றன.

குறட்டை தடுப்பு தலையணைகளைப் பயன்படுத்துங்கள். குறட்டையை குறைக்கச் செய்யும் விசேஷ தலையணைகளைச் செய்து வைத்துக் கொண்டு அதில் தலை வைத்துப் படுத்துறங்கிக் குறட்டையைத் தவிர்க்க முயற்சி செய்யலாம். இந்த ஆலோசனைகளைக் கடைப்பிடித்து வந்தால் குறட்டையைத் தவிர்க்கலாம்.

— டாக்டர் கே.எஸ்.வி. நாயுடு

# தடுப்பற்ற வீதிக் குழியில் விழுந்த வாலிபன் மரணம்

## தலைநகர் கொழும்பில் இந்த அவலம்! யார் பொறுப்பு?
## ஏழைக்குடும்பம் அநாதரவாக நடுத்தெருவில்

தலைநகர் கொழும்பில் வீதிக்கருகில் தோண்டப்பட்டு மூடாமல் இருந்த ஆழக்குழியில் தவறுதலாக விழுந்த வாலிபன் ஒருவர் குழிநிறைய இருந்த சாக்கடை நீரில் மூழ்கி மரணமானார். அந்த வாலிபருடைய குடும்பம் அனாதரவாகி விட்டது. நாதியற்று நடுத்தெருவில் இன்று தவிக்கிறது. இதற்கு யார் பொறுப்பு?

நகரை அழகுபடுத்துகிறோம், அபிவிருத்தி செய்கிறோம் எனக் கூறிக் கொண்டு தலை நகரின் பல பாகங்களிலும் தோண்டப்



உயிரைப் பறித்த குழிக்கு இப்போது தற்காலிகத் தடுப்பு

படும் குழிகளும் வெட்டப்படும் வாய்க்கால்களும பல அனர்த்தங்களை ஏற்படுத்திய வண்ணமே இருக்கின்றன.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமைந்து விட்டது கொம்பனித்தெரு கிளனி வீதியில் இடம்பெற்ற 23 வயது இளைஞன் சசிகுமாரின் அநியாய மரணம்.

தந்தையை இழந்து தவிக்கும் விதவைத்தாய், வலது குறைந்த சகோதரன், வேலையற்றிருக்கும் வயதுவந்த சகோதரிகள் இருவர் என முழுக் குடும்பத்தையுமே காப்பாற்றி வந்த இளைஞர் போய் விட்டார். படகோட்டி இல்லாத படகு போல் இக்குடும்பம் தத்தளித்துக் கொண்டு இருக்கிறது.

விமானப்படைத்தளம், இராணுவத் தலைமையகம், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், நவலோகா வைத்தியசாலை மற்றும்





உல்லாசப் பிரயாணிகளுக்கான ஹோட்டல்கள் நிறைந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக விளங்குவது கொம்பனித்தெரு.

பேரை வாவி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் இப்பிரதேசத்தில் பல இடங்களில் பாரிய குழிகள் தோண்டப்பட்டு வடிகால் அமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன. காசல் வீதி ஆரம்பத்தில் அமைந்திருப்பது கிளனி வீதி. இந்த வீதியின் ஆரம்பத்தில் ஒரு குழியும் முடிவில் இன்னொரு குழியும் தோண்டப்பட்டுள்ளன.

இவை ஒவ்வொன்றும் சுமார் 40 அடி ஆழமும் 20 அடி சுற்றளவும் கொண்டவை.

சுமார் ஒரு வருடத்திற்கு மேல் அகழ்வு வேலைகள் நடைபெற்று வருகின்றன. எனினும் மக்கள் புழக்கம் உள்ள இந்தப் பகுதியில் மக்கள் நடமாடப் பாதுகாப்பு இல்லை.

இவ்வீதி ஓரச் சேரியில் புறாக் கூடுகளைப் போன்று 200க்கும் மேற்பட்ட சிறுசிறு வீடுகள் உள்ளன. பல வீடுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களும் இருக்கின்றன. மொத்தமாக இங்கு சிறு குழந்தைகள் பாடசாலைப் பிள்ளைகள் உட்பட சுமார் 700 பேர் வசிக்கின்றனர்.

இவர்களுக்குத் தேவையான குடிதண்ணீர், மலசல கூட வசதிகள் இல்லை. விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில வீடுகளில் மட்டுமே மின்சாரமும், மலசல கூட வசதிகளும் இருக்கின்றன.

பொதுவாக இவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள பொது மலசல கூடமும் பயன்படுத்தமுடியாத நிலையில் இடிந்துபோய் உள்ளது. சுகாதார வசதிகள் அற்ற இவ்வீதியில்இக்குழிகள் வெட்டப்பட்டதால் சுகாதாரச் சீர்கேடுகள் மேலும் அதிகரித்து விட்டன.

இந்தச் சேரி வீடுகளில் ஒன்றிலேயே அகால மரணம் அடைந்த 23 வயது இளைஞர் சசிகுமார் தனது தாய் ஐயாக்குட்டி கனகம்மா (தந்தை செல்லையா சிவலிங்கம் இறந்து ஒன்பது மாதங்கள்), வலது குறைந்த சகோதரன் யோகநாதன்(26), சகோதரிகள் சசிகலா (22), பிரமிளா (20), இருவரும் ஜி.சி.ஈ சாதாரண தரம் படித்துவிட்டு வேலையின்றி இருப்பவர்கள். கடைசிச் சகோதரன் பிரகாஷ்குமார் (17) பாடசாலை செல்பவர் ,ஆகியோருடன் வசித்து வந்தார்.

ஆறு பேர் கொண்ட இக்குடும்பத்தை 23 வயதே நிரம்பிய சசிகுமார் தான் காப்பாற்றி வந்தார்.

தேயிலை ஏற்றுமதி செய்யும் தனியார் கம்பனிகளுக்கு சிறுசிறு பெட்டிகளைச் செய்து கொடுப்பதே இவரது தொழில். குடும்பத்தவர்கள் இதனை ஒரு குடிசைக் கைத்தொழில் போல் கூட்டாகச் செய்தனர். ஓடர்கள் அதிகம் கிடைக்கும்போது வேலைகள் நள்ளிரவு வரை தொடரும்.

கடந்த மாதம் 14ஆம் திகதி வேலை செய்து கொண்டிருந்தபோது இரவு 11 மணி. வயிற்றைக் கலக்குகிறது என்று சொல்லிவிட்டு சசிகுமார் இயற்கைக் கடன் கழிப்பதற்காக வெளியே சென்றுள்ளார்.

வெளியே சென்றவர் நீண்ட நேரமாகியும் திரும்பிவரவில்லை. வீட்டார் எட்டியவரை பார்த்தும் ஒன்றும் பிரயோசனம் இல்லை.

மலசலகூட வசதி இல்லாததினால் இங்கு வசிப்பவர்கள் இரவு நேரங்களில் பேரை வாவிப் பக்கம் போய் ஒதுங்குவது வழக்கம். அதனால் அயலவர்களும் சேர்ந்து பந்தங்களுடன் வாவிக்கரைப் பக்கம் சென்று தேடியும் சசிகுமாரைக் காணவில்லை.

கவலையுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது உடன் வந்த ஒரு சிறுவன் வீட்டுக்கு அருகில் உள்ள குழியில் ஏதோ தெரிவதாகச் சொன்னான்.

இரண்டு மூன்று பேர் வெளிச்சத்தை எடுத்துக் கொண்டு குழிக்குள் இறங்கிப் பார்த்தனர். சாக்கடைக் கழிவுகளும் துர்நாற்றமும் நுளம்புகளின் தொல்லையும் சகிக்க முடியவில்லை. அவர்களால் எதையும் செய்ய முடியாமல் போய் விட்டது.

முயற்சி தோல்வி அடையவே அவர்கள் உடனடியாகக் கொம்பனிவீதி பொலிஸ் நிலையத்திற்குப் போய் முறைப்பாடு செய்தனர்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜாகொட ஆராச்சி தலைமையிலான பொலிஸ் குழுவினர் அங்கு வந்தனர். தாமதமின்றிப் பொலிஸ் அதிகாரி செயற்பட்டார்.

பொலிஸ் அதிகாரியின் உத்தரவின் பேரில் சுழியோடிகள் குழிக்குள் இறங்கித் தேடினர். அவர்களாலும் சடலத்தை மீட்க முடியவில்லை.



குழி பலிகொண்ட சசிகுமார்

இந்த முயற்சியும் தோல்வியடையவே தீயணைப்புப் படையினர் அழைக்கப்பட்டனர். அவர்கள் குழிக்குள் இருந்த நீர் முழுவதையும் வெளியேற்றினர். அதன் பின்னரே சசிகுமாரின் சடலம் மீட்டெடுக்கப்பட்டது. சடலத்தை சசிகுமாரின் தாய் அடையாளம் காட்டினார்.

வழமையான விசாரணைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஊராரின் உதவியுடன் நல்லடக்கம் நடைபெற்றது.

இது தொடர்பாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜாகொட ஆராச்சியிடம் ''சுடர் ஒளி'' நிருபர் தொடர்பு கொண்டார். குழி எந்த விதமான பாதுகாப்புத் தடைகளும் இன்றி திறந்த நிலையிலேயே இருந்தது. இந்தக் குழியைச் சுற்றி ஒரு சாதாரன தடையாவது போட்டிருந்தால் இப்படியான விபரீதம் தடுக்கப்பட்டிருக்கும் என்று அவர் கூறினார்.



சசிக்குமார் இப்படியான பெட்டிகளைச் செய்து வந்தார்

மேலும் அவர் கூறுகையில் இச்சம்பவம் இடம்பெற்ற பின் பேரை வாவி அபிவிருத்தித் திட்டத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர் என்னை வந்து சந்தித்தார். அவருடைய பொறுப்பற்ற நடவடிக்கையால் ஒரு அப்பாவியின் உயிர் பறி போயுள்ளது. இதற்கு யார் பொறுப்பு எனக் கேட்டு அவரைக் கடுமையாக எச்சரித்து அனுப்பினேன் என ஜாகொட ஆராச்சி கூறினார்.

இந்த விபரீதம் நடந்த இடத்திற்குச் ''சுடர் ஒளி'' நிருபரும் படப்பிடிப்பாளரும் சென்று பார்த்த போது சிறு தடிகளை நட்டு பொலித்தீன் நாடாக்கள் கட்டி குறுக்குத் தடுப்பு அமைக்கப்பட்டிருப்பதைக் காண முடிந்தது.

தோண்டப்பட்ட குழி ஓர் உயிரைப் பலி கொண்ட பின்னர்தான் பொறியியலாளர் தற்காலிகத் தடுப்பு வேலி போட்டுள்ளார். வெள்ளம் அள்ளிக் கொண்டு போன பின்னர் அணை கட்டியுள்ளார்கள் புத்திசாலிப் பொறியியலாளர். பேஷ்! கதை முடிந்து விட்டது. இந்த இளைஞனின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்குவது யார்?

அநாதரவாக நடுத்தெருவில் விடப்பட்ட இந்தக் குடும்பத்தவர்களை வாழ வைப்பது யார்?

குழியை வெட்டியவர்களா?

குழியை வெட்டும்படி உத்தரவிட்டவர்களா?.

நகருக்கே பொறுப்பான கொழும்பு மாநகரசபையா?

அல்லது நகர அபிவிருத்திச் சபையா?.

இந்தக் கேள்விகள் தொக்கி நிற்கின்றன.

தேர்தல் காலங்களில் மட்டும் இந்தச் சேரிக்குச் சென்று அங்குள்ளவர்களிடம் வாக்குப் பிச்சை கேட்டு நாடாளுமன்றம் சென்ற அரசியல் வாதிகளாவது பாதிக்கப்பட்ட இக்குடும்பத்திற்காகக் குரல் எழுப்பி விமோசனம் பெற்றுக் கொடுப்பார்களா? அயலவர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

— செய்தி: சிகாமணி — பன்னீர் (படங்கள் வேலுசாமி)



வீதியின் மறுகரையில் உள்ள மற்றொரு திறந்த குழி


நியூ திவ்யா ஜீவல்லர்ஸ்

அழகிய கலை நயம்
எழிலுறு தொழில்வளம்
உயர்தர தங்க நகைகள்
மின்னிடும் தங்கம்
கண்கவர் வைரம்
தன் நிகரற்ற நளினம்
தூய நல் நவரத்தினம்
புதுமை பொலிவு அழகு.



NEW DHIVIYA JEWELLERS
42 - C, Galle Road, Wellawatte,
Colombo - 06. Tel: 508501, 505065
Specialist in 22 kt. Gold Jewellers



நியூ திவ்யா ஜீவல்லர்ஸ்

அழகிய கலை நயம்
எழிலுறு தொழில்வளம்
உயர்தர தங்க நகைகள்
மின்னிடும் தங்கம்
கண்கவர் வைரம்
தன் நிகரற்ற நளினம்
தூய நல் நவரத்தினம்
புதுமை பொலிவு அழகு.



NEW DHIVIYA JEWELLERS
42 - C, Galle Road, Wellawatte,
Colombo - 06. Tel: 508501, 505065
Specialist in 22 kt. Gold Jewellers